1270

7-DEC 1933

தொகுதி 12.] 1933வரு அக்டோபர்மீ [பகுதி 9.

மனமோகினி

ஆக்கியோர்
ஆரணி. குப்புசாமிமுதலியார்

பிரசுரகர்த்தா
நா. முனிசாமி முதலியார்,
ஆனந்த நிலயம், சென்னை.

மாதவி மாதவன் 2-பாகம்

ஓர் துணிகரமான சாமர்த்திய ரெயில்வேக் களவு

இன்பரசம் பொருந்தியது; படிக்கப் படிக்கப் பேரவா கொடுக்கக் கூடியது; தேன்போல் தித்திப்பது; பொருள் நிரம்பியது; இதுவரையில் வெளிவராதது; சாமர்த்திய சம்பவங்கள் பொதிந்தது; அழகிய கடிதத்தில் அச்சிடப்பட்டது. இரண்டு பாகமும் சேர்ந்து விலை ரூ. 2—0—0.

இரத்தினபுரி ரகசியம் 7-பாகம் விலை ரூபா 13-14 0

அமராவதி 2-பாகம்.

ஆரணி-குப்புசாமி முதலியா ரவர்க ளியற்றியது.

இது மிக்க பிரமையை யுண்டாக்கும் அற்புத சம்பவங்கள் நிறைந்த நாவல். ஒரு மனிதன் சுய நம்பிக்கையும், நேர்மையான நடக்கையும், ஊக்கமு முடையவனுயிருந்தால், அவன் தான் கோரிய காரியத்தில் கட்டாயம் ஜெயம் பெறுவான் என்பதும், எத்தகைய ஆபத்துக்களிலும் தப்பித்துக்கொண்டு கீர்த்தியும் மேலான பதவியும் அடைவானென்பதும் இதில் நன்ருய் நிரூபிக்கப்பட் டிருக்கின்றன. அசம்பாவிதமெனத் தோன்றும் அநேகம் சம்பவங்கள் இதில் உண்மையாகவே நடைபெறுவது வாசிப்போர்க்கு அளவற்ற மனமகிழ்ச்சியை யளிக்கும். 2-பாகமும் விலை ரூபா 4.

இராஜாமணி

அல்லது

ஓர் அபூர்வ மர்மம்

கற்புக்கரசியாகிய ஓர் உத்தமியின் சரித்திரத்தை மெத்தத் தெளிவாக விளக்கிக் காட்டக் கூடியது. இராஜாமணி யென்னும் பெண்மணி, பெருந்திருட்டும், மிகுந்த கொலைத் தொழிலுமுடைய ஒருவனுக்கு மகளாயிருந்தும், அவனைப்போலவே பெரும் பாதகச் செயல்களையுடைய ஒரு முரடனுக்குச் சகோதரியாயிருந்தும் அவர்களிடம் அகப்பட்டுப் பெரிய ஆபத்திற் சிக்கிய பூபாலம் பிள்ளை, யென்பவரைக் காப்பாற்றி அவருடன் தானும் வெளியேறி அவரை மணந்து கொள்வதும், மிக்க அதிசயம் பொருந்திய செயல்களாயும் படிப்போர் மனத்தைக் கவரக்கூடியதாயும் இருக்கும்.

இதன் விலை ரூபா 2-0-0.

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை, மதராஸ்.

பிறகு அவர் அவனைத் தமது மனைவியிடம் அறிமுகம் செய்து வைத்து மோகனசுந்தரம் வெளியில் உலாவப் போயிருப்பதாகவும், அவனுடைய சகோதரியாகிய நவநீதம் சமீபத்திலுள்ள ஏழையொருவர் வீட்டுக்கு அவருக்கு வேண்டிய சில உதவிகளைச் செய்துவிட்டு வரப்போ யிருப்பதாகவும் தெரிவித்தார். சிறிது நேரத்துக்கெல்லாம் மோகனசுந்தரமும் வந்து விட்டதால் தியாகராஜனும் மோகனமும் அளவளாவிக் கொண்டு தாராளமாகப் பேசலானார்கள். சபாபதிப் பிரபுவையும் தியாகராஜனுக்கு அறிமுகம் செய்துவைத்தனர்.

OFFICE OF THE REGISTRAR OF ... 7 DEC 1933

இவர்கள் இப்படி இருக்கும்போது வெளியே சென்ற நவநீதம் என்ன நிலைமையில் இருக்கிறாள் என்பதைக் கவனிப்போம். தங்களுடைய பங்களாவுக்கு அருகிலுள்ள நகருக்கப்பால் சிறிது தூரத்தில் ஒரு குடிசையில் வசித்து வந்த விவசாயி ஒருவன் திடீரென்று இறந்துவிட்டான். அவன் பெரிய குடும்பத்தை விட்டுவிட்டுப் போய் விட்டதால் அவர்களுக்கு உதவிசெய்யவே நவநீதம் புறப்பட்டாள். இப்படிப்பட்ட ஏழைகளுக்கெல்லாம் உதவிசெய்வதில் மனோகார் சிறிதும் பின் வாங்காதவர், அவள் தன் வண்டியில் புறப்பட்டு அதை நகரத்திலுள்ள ஒரு பெரிய ஓட்டலின் அருகில் விட்டு விட்டுத் தான்மட்டும் தனியே நடந்து சென்று குடியானவனுடைய குடிசைக்குப் போய் அவர்களுடைய வேலையை முடித்துவிட்டுத் திரும்பி வருகையில் அவள் ஒரு வாராவதியின் அருகில் வந்து கொண்டிருந்தபோது சிறிது தூரத்திலுள்ள ஒரு மரத்தினடியில் ஒரு ஆள் உட்கார்ந்து கொண்டு சுருட்டு பிடித்துக் கொண்டிருப்பதைக் கண்டாள். சிறிது அருகில் நெருங்கியதும் அவன் எதிர்பாரா ஆச்சர்யப் படுபவன்போல் எழுந்ததும் அவன் இன்னானென்று அவள்

186585

தெரிந்துகொண்டு விட்டாள். அவன் ராட்சஸ குப்பனைத் தவிர்த்து வேறு யாருமில்லை. அவனைக் கண்டதும் அவளுக்குச் சிறிது வெறுப்பு தோன்றியது. அவன் யார் என்பதும் அவன் செய்த குற்றங்கள் என்ன என்பதும் அவளுக்குத் தெரியும். அவள் இந்திராபாயாக நடித்தபோது அவர்களுடைய உதவியை யெல்லாம் பெற்றிருக்கிறாள் அல்லவா? பின்னரும் அவள் அவனைப்பற்றி யெல்லாம் பத்திரிகையில் வாசித்திருக்கிறாள். ஆதலால் அவள் அவனைக் கண்டதும் வெறுப்படைந்தாள். ஆயினும் அவன் அதை வெறுப்பு என்று அறிந்துகொள்ளாமல் தன்னைத் திடீரென்று கண்டதால் அவள் ஆச்சர்யப்படுகிறாள் என்று நினைத்தான். அவள் மனோகரம் பிரபுவின் குமாரி என்றும் அவளுடைய நிலைமையில் மாறுதல்கள் ஏற்பட்டிருக்கிறதென்றும் அவன் அறியமாட்டான். அவள் எப்போதுமே நல்ல உடைகளை அணிபவளாதலால் அச்சமயத்திலும் அவ்வாறு விளங்குகிறாள் என்று நினைத்தானேயொழிய வேறு விதமாக நினைக்க அவனால் முடியவில்லை.

ஆகவே அவன் அவள் அருகில் சென்று, 'இந்திராபாய், என்ன சமாசாரம்? உன்னை நான் இங்கு சந்திப்பேனென்று நினைக்கவேயில்லை. உன்னைக்காண நான் சந்தோஷப்படுகிறேன் சமுத்திரவிலாச மாளிகையில் புகுந்து ஒரு பெண்ணை விடுவித்ததுடன் பணத்தையும் கொள்ளை யடித்தோமே அப்போதுதான் நான் உன்னைக் கடைசி முறையாகப் பார்த்தது' என்று கூறினன். அவன் அவ்வாறு பேசும்போது அவள் பல விஷயங்களைப்பற்றிச் சிந்தித்தாள். அவனுடன் விரோதம் செய்துகொண்டால் அவன் தனக்கே ஏதேனும் தீங்கு செய்வான் என்றும், தன்னுடைய முன்பின் சமாசாரங்களை யெல்லாம் அவன் அறிவானதலால் தனக்கும் கஷ்டம் ஏற்படுமென்றும் நினைத்தாள். ஆகவே அவள் அவனுடன் இனிய

வார்த்தைகளைப் பேசித் தப்பித்துக்கொண்டு போய்விடுவதே நலமென உணர்ந்தாள். ஆதலின் அவள் அவனைப் பார்த்து, குப்பா, இந்நேரத்தில் இங்கு என்ன வேலையாக வந்தாய்?" எனக் கேட்டதும் அவன் சந்தோஷத்துடன் சரமாரியாகப் பேச ஆரம்பித்தான். ராட்சஸகுப்பன் அவளிடம், 'நான் ஒரு முக்கிய வேலையாகத் தான் இங்கு வந்திருக்கிறேன் இப்பால் என் சங்கதிகளெல்லாம் நீ கேள்விப்பட்ட தில்லையோ? பள்ளக் குடிசையில் இருவரைத் தீர்த்துவிட்டேன். அந்த மாகதத்தை யும் கொல்லப் பார்த்தேன். இதற்குள் அந்தப் படவாப் பையன்கள் மோகனதாஸனும், செல்வநாதர் என்று கூறப் பட்ட மனேகாரும் என்னைப்பற்றிப் போலீசாரிடம் எழுதி வைத்துவிட்டார்கள். ஆனால் நான் இவைகளுக்கெல்லாம் பயப் படப் போகிறேனு பார்' என்றான். தன் தகப்பனாரின் பெய ரை அவன் கூறுவதால் அவருக்கு என்ன ஆபத்து ஏற்படுமோ என்று அவர் அஞ்சியதுடன் முழு விஷயத்தையும் கிரகித் துக் கொள்ள வேண்டுமென்னும் எண்ணத்துடன் யோசித் துக் கொண்டிருந்தபோது அவன் மேலும் பேசத் தொடங்கி, 'இப்போதும் நான் அந்த மனேகானைப் பழி வாங்கவே இவ் விடம் வந்திருக்கிறேன். அதிருக்கட்டும். நீ என்ன வேலை யாக இவ்வளவு தூரம் வந்திருக்கிறாய் என்று என்னிடம் சொல்ல வில்லையே' என்று கேட்டான்.

அதற்கு அவள், தானும் சிலகாலமாக நல்ல கொள்ளை அகப்படாமல் கஷ்டப்பட்டு இப்போது இந்நகருக்கு வந்து பெரிய மனிதர் வீட்டுப் பெண்போல் வேடமணிந்து பல செல்வர்களுடைய நிலைமையைப் பற்றியும் உளவறிந்து கொண்டதாகவும், இங்கு ஓரிடத்தில் கொள்ளையடிக்க முயன்று தன் ஆட்களை இவ்விடம் அதிக வேகமாகவே வரும்படி சொல்லி யனுப்பியதாகவும், ஆனால் அவர்கள்

வரவில்லையென்றும் தெரிவித்தாள். அதைக் கேட்ட அவன் தனக்கும் ஒரு தொழில் அகப்பட்டதென்று நினைத்துக் கொண்டு, 'இந்திராபாய், அந்த வேலையை நான் செய்யக் கூடாதா? அவர்கள் வராவிட்டால் என்ன? நான் இருக்கும் போது நீ ஏன் கவலைப்பட வேண்டும்? என்ன வேலை செய்யப் போகிறாய். நான் வந்த வேலையும் இன்று அல்லது நாளை இரவுக்குள் முடிந்து விடும். நீ யார் வீட்டில் கொள்ளை யடிக்கப் போகிறாய்' என்று கேட்க, அவளும், 'இல்லை! இப்போது நீ ஒரு பிரபுவின் பெயரைப் பற்றிப் பிரஸ்தாபித்தாயே அவர் வீட்டில்தான் கொள்ளையிடலாமென்று இருக்கிறேன். அவரிடம் கோடிக் கணக்கான தொகை இருக்கிறதாம். அவர் எல்லாவற்றையும் தனது படுக்கை யறையிலேயே வைத்துக் கொள்கிறாராம். நான் அவர் வீட்டில் வேலைசெய்யும் ஒருத்தியைச் சிநேகம் செய்து கொண்டிருக்கிறேன். அவளுடன் சில சமயங்களில் நான் அவ்வீட்டிலேயே படுப்பதும் உண்டு' என்றாள். இதைக் கேட்டதும் அவனுக்கு அளவிலாச் சந்தோஷம் ஏற்பட்டு விட்டது. அவன் எல்லா விவரங்களையும் சொல்லி விட்டான். தான் சுந்தர விலாச மாளிகையில் ஒளித்துக்கொண் டிருந்ததாயும், சந்திரசேகரன் என்பவன் தன்னை அங்கு சந்தித்து, அவன் ஹேமவதி சீமாட்டியிட மிருந்து பரிதிபுரத்திலிருந்து வந்திருப்பதாகச் சொன்னதையும், எப்படியாவது மனோகரம் பிரபுவைக் கொன்றுவிட வேண்டுமென்று உத்தரவு கொடுத்து அதற்குத் தக்க வசதிகளைத் தேடிக் கொடுத்திருப்பதாகவும் சொன்னான். தன் தந்தையையே கொல்ல அவர்கள் சூழ்ச்சி செய்திருப்பதைக்கண்டு அவள் நடுங்கினாளென்றாலும், அவ்விஷயத்தில் அவள் கவலை இல்லாதவள்போல் பாவனைசெய்து, அவள் அவனுக்கு வேண்

டிய உதவிகளையெல்லாம் செய்வதாகவும், அவன் அம்மாளி கையில் தன் அறைக்கு வந்துவிட்டால் பிறகு அவனை மனோ காம் படுக்கும் இடத்துக்கு அழைத்துச்செல்வதாகவும் அன்று இரவு நடு நிசிக்குமேல் அவன் அம்மாளிகையின் பின்புறத்தில் வந்தால் ஒரு ஜன்னலிலிருந்து கயிறு தொங்குமென்றும், அதை அவன் பிடித்துக்கொண்டு ஏறி வந்துவிட்டால் பிறகு எல்லா வேலைகளையும் கவனித்துக் கொள்ளலாமென்றும் தெரிவித்தாள். அவனும் அதற்குக் கட்டுப்படுவதாகவும், கட்டாயம் வருவதாகவும் அவளும் தவருமல் உதவிசெய்ய வேண்டு மென்றும் கூறினன். அவள் தன்னைக் கட்டாயம் நம்பலா மென்றும், தான் எல்லா ஏற்பாடுகளையும் செய்து வைத்து விட்டு அவனுக்காகக் காத்திருப்பதாகவும் சொல்லிவிட்டு அவனிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு சென்றாள்.

அவள் சென்றபின்னர் ராட்சஸகுப்பன் அவளைச்சந்தித் ததும் தன்னுடைய அதிர்ஷ்டமே என்று நினைத்துக்கொண்டு தான் வந்த காரியம் எளிதில் முடியப்போகிற தென்பதையும் நினைத்து அதிக சந்தோஷப் பட்டவனுய் உட்கார்ந்திருந்த போது சந்திரசேகரம்பிரபு அங்கு வந்து, அவனிடம் தான் மனோகானுடைய படுக்கை யறையைப்பற்றி விசாரித்ததாக வும் இத்தகைய தகவலும் கிடைக்கவில்லை யென்றும், என்ன செய்வதென்று தோன்ருமல் தவிப்பதாகவும் சொன்னபோது குப்பன், 'பிரபு, நீ அதற்கெல்லாம் பயப்பட வேண்டாம் நான் ஏற்பாடு செய்துவிட்டேன். எனக்குத் தெரிந்த ஒரு பெண் அதே வீட்டில் வேலை செய்கிருள். அவளுடைய உதவியால் நான் உள்ளே சென்று மனோகானைக் கொல்வதுடன் அவன் பொருளையும் கொள்ளையடித்து அவளுக்கும் சிறிது கொடுப் பேன். அதற்கான ஏற்பாடுகளையெல்லாம் நாங்கள் செய்து

விட்டோம்' என்று கூறியதைக் கேட்ட சந்திரசேகரன், நவநீதத்தைப்பற்றி ஒன்றும் அறியானுதலால் எவ்வித சந்தேகமும் கொள்ளாமல் அவன் இஷ்டப்படியே செய்யலாமென்றும், மறுநாள் விடியற்காலம் நான்குமணிக்கு அவன் தன்னை இதே இடத்தில் வெற்றியுடன் சந்திக்க வேண்டுமென்றும் கூறிவிட்டுப் போய்விட்டான். குப்பனும் வெகு தூரத்தில் போகாமல் அருகிலிருந்த ஒரு கள்ளுக்கடையில் புகுந்து வேண்டிய மட்டும் மதுபானம் அருந்திவிட்டு அங்கேயே ஒரு மரத்தின் அடியில் படுத்திருந்தான். இரவு பத்துமணி எப்போது ஆகுமென்று காத்திருந்தான்.

குப்பனை விட்டுப்பிரிந்த நவநீதம் பரபரப்புடனும், கவலையுடனும் தன் தந்தையின் மாளிகைக்குச் சென்றதும், கிருஷ்ணகிரியிலிருந்து தியாகராஜன் வந்திருப்பதாகவும், அவனும் மோகனசுந்தரம், சபாபதி ஆகியோரும் தோட்டங்களைச் சுற்றிப் பார்க்கப்போ யிருப்பதாகவும் அறிந்துகொண்டு தன் தந்தையைக் காணும்பொருட்டு மாடியின்மீது ஏறினுள். அவளுடைய தந்தையும் அவளது முகத்தைக் கண்டதுமே, அவள் ஏதோ விசேஷம் கூற வந்திருக்கிருள் என அறிந்து என்ன விசேஷமென்று கேட்க, அவள் தான் ராட்சஸ குப்பனைச் சந்தித்ததையும், அவன் அவளிடம் சொன்ன சங்கதிகளையும், அவனை உள்ளே இழுக்க அவள் செய்துள்ள தந்திரங்களையும் விவரமாகத் தன் தந்தையினிடம் கூறினுள். இதை யெல்லாம் சிரத்தையுடனும், கவலையுடனும் கவனித்துக் கொண்டிருந்த மனேகரம் பிரபு, 'என தன்புள்ள நவநீதமே' நீ புத்திசாலித்தனமாக நடந்து கொண்டதைப் பாராட்டுகிறேன். சந்திர சேகரம் தான் இந்தக் கொடிய ராட்சஸ குப்பனை ஏவி இருக்க வேண்டும். இரண்டொரு தினங்களுக்கு முன் ராட்சஸ குப்பனும், சந்திரசேகரனும் கிருஷ்ண

கிரியில் சுந்தர விலாச மாளிகையில் யாருக்கும் தெரியாமல் சந்தித்ததாகத் தியாகராஜன் சொன்னான். அப்போதே அவர்கள் ஏதோ விஷமம் செய்யப் போகிறார்கள் என்று நான் தெரிந்து கொண்டேன். இப்போது நீ குப்பனைச் சந்தித்து விட்டது நல்லதுதான். என்ன ஏற்பாடு செய்திருக்கிறாய் என்பதை விவரமாகச் சொல்' என்று கேட்டார். அதற்கு அவள் 'அன்புள்ள தந்தையே! இவ்விஷயத்தை யெல்லாம் சொல்வ தென்றாலே எனக்கு வெட்கமாக இருக்கிறது. ஏனென்றால் என் பழையகால வாழ்க்கையின் நினைவு வருகிறது. காலையில் நான் குப்பனைப் பார்த்ததும் விரோதம் செய்துகொண்டு விடலாமென்று நினைத்தேன். ஆயினும் என் பழைய விஷயங்களை யெல்லாம் அறிந்திருப்பதாலும், அவன் ஏதேனும் தொந்தரை விளைவிப்பானாதலாலும் அவனிடம் சிநேகம் செய்துகொண்டு எல்லா விஷயங்களையும் அவன் வாயாலேயே இழுத்து விடுவதே நலமென்று நினைத்துப் பேச ஆரம்பித்ததில் அவன் எல்லாவற்றையும் சொன்னான். நானும் கொள்ளைத் தொழிலிலேயே இன்னமும் இருந்து வருவதாகவும், இந்தமாளிகையிலேயே கொள்ளையடிக்க யோசித்திருப்பதாகவும், அவனும் இங்கே வந்தால் எல்லாக் காரியங்களையும் முடித்து விடலா மென்றும், அவன் இரவில் பன்னிரண்டு மணிக்குமேல் வந்தால் நான் என் அறையினின்றும் கயிறை விட்டிருப்பே னென்றும், அதை பிடித்துக் கொண்டு அவன் ஏறி வந்து விடலாமென்றும், நான் இம்மாளிகையில் வேலை செய்யும் ஒரு மாதை சிநேகம் செய்துகொண்டு அவள்மூலம் உள்ளே பிரவேசித் திருப்பதாகவும் தெரிவித்தேன். அவனும் வருவதாக ஒப்புக்கொண்டிருக்கிறான். என் அறைக்கு அடுத் தறையிலேயே நீங்களும் கைத் துப்பாக்கியுடன் இருங்கள். அவன் என் அறைக்கு வந்ததும், அவனை அடுத்த அறைக்கு

அழைத்து வருகிறேன். உடனே இருவருமாகச் சேர்ந்து பிடித்துக் கொள்வோம்' என்று தெரிவித்தாள்.

இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த மனோகரம் பிரபு, 'பெண்ணே! உனது யோசனையையும், தைரியத்தையும் நான் பாராட்டுகிறேன். அந்த ராட்சஸ குப்பனுடன் பேசும்போது நீ சர்வ ஜாக்கிரதையுடன் பேசியிருக்க வேண்டும். அவ்வளவு ஜாக்கிரதையுடன் நீ எப்படி இருந்தாயென்று நினைக்கும்போதே எனக்கு ஆச்சர்யமாய் இருக்கிறது. நீ சாமர்த்தியமாக ஏற்பாடு செய்துள்ள இந்த யோசனைகளையெல்லாம் நான் அங்கீகரித்து மற்றும் வேண்டிய வழிகளைக் கையாளத் தயாராக இருக்கிறேன்,' என்றார். பிறகு தந்தையும் மகளுமாகச் சிறிதுநேரம் அவர்கள் அனுஷ்டிக்க வேண்டிய முறைகளைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள். பின்னர் அவர்கள் அன்று முழுதும் நடந்துகொண்ட மாதிரியிலிருந்து அன்று இரவு அவர்கள் ஒரு பெரிய காரியத்தைச் சமாளிக்கப் போகிறார்கள் என்பதைப் பிறர் எவ்விதத்திலும் சந்தேகப்பட முடியாதவர்களாக இருந்தனர். சாதாரணமாக அம்மாளிகையில் யாவரும் ஒன்பது மணிக்கெல்லாம் படுக்கப் போய் விடுவது வழக்கம். ஆனால் அன்று தியாகராஜன் விருந்தாளியாக வந்திருந்ததால் அன்றிரவு பதினொருமணி வரை எல்லாரும் விழித்துக் கொண்டிருந்தபின் அவரவரும் அவரவருடைய படுக்கைக்குச் சென்றார்கள். ஆகையால் அம்மாளிகையின் விளக்குகள் ஒன்றன் பின் ஒன்றாக அணைக்கப்பட்டு வந்தன. வெளியில் தூரத்திலிருந்து இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தவன் ராட்சஸ குப்பனே. அவன் கவனித்துக்கொண்டே எப்போது ஒரு ஜன்னலின் வழியே கயிறு வெளியில் வந்துவிழும் என்று பார்த்துக்கொண்டிருந்தான்.

இதற்கிடையில் நவநீதம் தன் அறைக்குப் படுக்கைக்

குச் சென்றதும் தூங்காமல், சந்தடி அடங்க வேண்டுமென்று சிறிதுநேரம் காத்திருந்தாள். பிறகு அவள் மெதுவாக எழுந்திருந்து ஒரு பெரிய கயிற்றின் ஒரு முனையை அவ்வறையிலிருந்த ஒரு கம்பத்துக்குக் கெட்டியாகக் கட்டிவிட்டு மற்றொரு முனையை ஜன்னலின் வழியாக மெதுவாக விட்டாள். உடனே ஒரு ஆள் வெளியில் விடப்பட்ட கயிற்றைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டதுபோல் அவளுக்குத் தெரிந்தது. ராட்சஸ குப்பன் அக் கயிற்றைப் பிடித்தான் என்று உணர்ந்ததும் அவள் தேகம் முழுதும் ஒரு முறை நடுங்கியது. ஆ! அவனுடன் போராடவேண்டியிருக்கிறதே என்று நினைத்தாள். சற்று நேரத்துக்கெல்லாம் அவனும் அக் கயிற்றைத் தொத்திக்கொண்டே ஏறி வந்து விட்டான். அவனைக் கண்டதும் நவநீதம் தான் செய்த ஏற்பாடு ஒருவாறு முடிந்து வருகிறதே என்று நினைத்துச் சந்தோஷப்பட்டாள். அவன் உள்ளே வந்தபிறகு அவள் அக்கயிற்றை எடுத்துவிட்டாள். பிறகு ஜன்னலையும் மூடிவிட்டாள். ராட்சஸ குப்பன் கையில் குருந்தடியை வைத்துக் கொண்டிருந்தான். அவன் வலையில் அகப்பட்டுக் கொண்டான் என்பதை அறிந்தால் அத் தடியாலேயே தலையில் ஓங்கி அறைவானாதலால் மிக ஜாக்கிரதையுடன் இருக்க வேண்டுமென்று நவநீதம் அறிந்து அதற்குத் தக்கபடி நடந்து கொண்டாள். பிறகு அவள் மெதுவாக நடந்து வரும்படி கட்டளையிட்டு விட்டுப் பக்கத்து அறைக்கு அழைத்துச் சென்றாள். அங்கே சென்றதும் அவள் திடீரென்று படுக்கையின்கீழ் இருந்த கைத் துப்பாக்கியை எடுத்து அவன் தலைமீது நீட்டி, 'ஜாக்கிரதை, ஒரு வார்த்தையும் பேசாதே. வாய் திறந்தால் செத்துப்போவாய்' என்று கூறிக்கொண்டே மற்றொரு கையால் அவன் கையிலிருந்த தடியைப் பிடுங்கிக் கொண்டாள். அவன் திடீரென்று இவ்வாறு நடந்ததால் திடுக்

கிட்டுப் போனன். அதே சமயத்தில் படுக்கையின் அடியில் ஒளித்துக் கொண்டிருந்த மனோகாம் பிரபுவும் கைத் துப்பாக்கியுடனே அவனெதிரில் நின்று, 'இப்போது நீ எங்கள் கையில் சிக்கிக் கொண்டாய். ஒரு வார்த்தையும் பேசாதே, ஜாக்கிரதை' என்ருர். பாவம்! ராட்சஸ குப்பன் என்னதான் செய்வான். இரண்டு பக்கங்களில் இரண்டு கைத் துப்பாக்கிகள் தயாராகக் காத்திருக்கின்றன. தன் கையிலிருந்த குண்டாந் தடியும் பிடுங்கப்பட்டு விட்டது.

அப்போது மனோகாம்பிரபு மறுபடியும் பேச ஆரம்பித்து, 'அடே, குப்பா! நீ எங்களிடம் அகப்பட்டுக் கொண்டு விட்டாய். இனி ஒன்றும் செய்ய முடியாது. என்ருலும் உன்னை அதிகம் தொந்தரைக் குள்ளாக்கும் எண்ணம் எங்களுக்கு இல்லை. நீ மரியாதையாக நாங்கள் சொல்கிறபடி நடந்து கொண்டால் உன்னை விடுதலை செய்து விடுவதுடன் வேறு உபகாரமும் செய்வேன்' என்று கூறினர். தனது நிலைமையை நன்ருக உணர்ந்துகொண்ட ராட்சஸகுப்பன், மனோகார் இஷ்டப்படி நடப்பதே தனக்கு நல்லதென நினைத்து, 'பிரபுவே, உங்கள் இஷ்டப்படியே நடக்கிறேன். என்ன செய்ய வேண்டுமென்று சொல்கிறீர்கள்' என்று கேட்டதும் மனோகார், அவனைச் சோதனைபோட்டு அவனிடம் என்னென்ன இருக்கிறதென்று பார்த்தார். அவனுடைய சட்டைப்பையில் இருந்த ஒரு புட்டியை எடுத்தார். அது என்ன? யார் அவனை ஏவியது என்று விசாரித்தார். அதற்கு ராட்சஸகுப்பன், தன்னிடமிருந்தது விசித்திரசக்தி வாய்ந்த விஷபுட்டியென்றும், அது ஹேமவதி சீமாட்டிக்குச் சொந்தமானதென்றும் அதைச் சந்திரசேகரம்பிரபு எடுத்துக்கொடுத்து மனோகாரைக் கொல்லும்படி தூண்டியதாகவும், அவனும் இப்போது ஊருக்கப்பாலுள்ள ஒரு வாராவதியின் அருகில் காத்திருப்பதாக

வும் எல்லா விவரங்களையும் விவரமாகத் தெரிவித்தான். அப்போது மனேகார், 'அப்பா, நீ உண்மையைச் சொன்னதற்காக நான் சந்தோஷப் படுகிறேன். சந்திரசேகரம் இங்கே மாறு வேடத்துடன் இரண்டொரு நாளாகத் திரிகிருன் என்பது எனக்கும் தெரியும். நீ இங்கு நடந்ததையெல்லாம் உடனே போய்ச் சந்திரசேகரத்தினிடம் சொல்லவேண்டாம். நீ உடனே இரத்தினபுரியை விட்டுப் புறப்பட்டு வேறு தேசம் போய்விடு. நான் உனக்கு வேண்டிய பணத்தை அத்தேசத்திலுள்ள ஒரு பாங்கியின் மூலம் உனக்குக் கிடைக்கும்படி செய்கிறேன். நீ அவ்வாறு போய்விடாமலும், உடனே போய் இதைச் சந்திரசேகரம் இடம் சொல்லியும் செய்தால் அது எனக்கு எப்படியும் தெரிந்துவிடும். அதனுல் உனக்கு நிச்சயமாக ஆபத்தே ஏற்படும்' என்று கண்டிப்பான முறையில் கூறினுர்.

அப்போது ராட்சஸகுப்பன், 'ஐயா, நான் உங்கள் இஷ்டப்படியே நடப்பேன். இதைச் சந்திரசேகரம் பிரபுவினிடம் சொல்லமாட்டான். நான் வேறு பக்கமாகப் போய் விடுகிறேன். என்னை ஆபத்தில் சிக்கவைத்து விடாதீர்கள்' என்று கேட்டுக் கொண்டதால் பிரபு நூறுபவுன் நோட்டு ஒன்றை அவனிடம் கொடுத்து அவனை வெளியே போய் விடும்படி கட்டளையிட்டார். அவன் வந்தவழியே போய்விட்டான். அவன் போன பின்னர் தந்தையும் மகளுமாகத் தாங்கள் செய்த தந்திரத்தைப் பற்றியும், அதில் அவர்கள் வெற்றி பெற்றதைப் பற்றியும் சந்தோஷப்பட்டார்கள். சந்திரசேகரத்தினிடம் அவர்களுக்கு அதிக வெறுப்பு ஏற்பட்டது. மனேகார் தன் மகளிடம் விடை பெற்றுக்கொண்டு, ராட்சஸ குப்பனிடமிருந்து பிடுங்கிய விஷபுட்டியுடன் தனது படுக்

186085

கையறைக்குச் சென்றார். அங்கே அவர் தன் மனைவியுடன் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்து விட்டுச் சரியாக மூன்று மணிக்கெல்லாம் தான் சிறிதுநேரம் வெளியில் முக்கிய காரணமாகப் போய் வரவேண்டியிருப்பதற்காகத் தன்னை மன்னிக்கும்படி சொல்லிவிட்டு அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டு மாளிகைக்கு வெளியே சென்றார்.

அந்நகரையடுத்த வாராவதியின் அருகில் விடியற்காலம் நான்குமணி சுமாருக்குச் சந்திரசேகரம்பிரபு மேலும் கீழுமாக உலாவிக் கொண்டிருந்தான். நல்ல நிலாவெளிச்சம் காய்ந்து கொண்டிருந்தது. ராட்சஸகுப்பன் திரும்பி வருவதாகச் சொன்னவேளை கடந்து விட்டதால் அவன் வரவை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். அவன் வரக் காணோம். ஆனால் அவ்வேளையில் வயது சென்ற ஒருமாது பைத்தியக்காரியைப் போல் தலை விரிகோலத்துடன் அங்கு வந்து ஒரு மரத்தடியில் உட்கார்ந்து ஓ வென்று அழ ஆரம்பித்தாள். சந்திரசேகரம் மெதுவாக அவளிடம் போய் ஏன் அழுகிறாள் என்று விசாரித்ததற்கு அவள் சில வருஷங்களுக்கு முன்னர் மூன்று குழந்தைகளை இழந்து அவற்றை அதே இடத்தில் புதைத்திருப்பதாகவும் அந்த ஞாபகத்துக்காக அழுவதாகவும் சொல்லிவிட்டு அத்துடன் நிற்காமல் அவன் ராட்சஸ குப்பனுக்காக நின்றிருக்கிறானல்லவா என்றும் அவன் மாறுவேடம் அணிந்திருக்கிறான் அல்லவா என்றும் கேட்டாள். அதைக்கண்டு அவன் ஆச்சர்யமடைந்து 'இதையெல்லாம் சொல்வதற்கு நீ யார்' என்று கேட்டான். அதற்கு அவள், தான் சிறிது தூரத்திலுள்ள ஒரு குடிசையில் வசிப்பதாகவும், அங்கு தான் ராட்சஸகுப்பன் வந்து தங்கியிருப்பதாகவும் அவன் வாராவதிக்கு அருகில் வரமுடியாதாகையால் சந்திரசேகரனே தன் குடிசைக்கு வந்தால் அவ

ளைக் காணலாமென்றும் கூறினாள். அதைக்கேட்ட சந்திரசேகரன் ஆச்சர்யமடைந்து குப்பனைப் பார்க்கவேண்டுமென்னும் ஆவலினால் அவளைப் பின்தொடர்ந்து வருவதாகவும் ஒப்புக்கொண்டான். ஆயினும் அவள் உடனே புறப்படாமல் அவள் ஏதோ பைத்தியக்காரி என்று பிறர் கருதும்படி சம்பந்தமில்லாத பல விஷயங்களை யெல்லாம் பேசிக்கொண்டிருந்து விட்டுக் கடைசியாக அரைமணிநேரம் கழித்த பின்னர் புறப்பட்டாள். அவளுடன் சந்திரசேகரமும் புறப்பட்டான். அவன் ராட்சஸகுப்பனைப் பார்க்கப்போகிறோம் என்னும் ஆவலுடன் போனான். அவள் சிறிது தூரத்தில் இருந்த ஒரு குடிசையை அடைந்ததும் ஒரு அறையின் கதவைத் திறந்து அதில் போகும்படி சந்திரசேகரனிடம் கூறினாள். அவன் உள்ளே நுழைந்ததும் அவள் கதவை வெளிப்புறம் சாத்திக்கொண்டு விட்டாள். அறையில் நுழைந்து பார்த்ததில் அங்கே ராட்சஸகுப்பன் இல்லாமல் அவனுக்குப் பதிலாகத் தன் சிற்றப்பனான மனோகரம்பிரபு இருப்பதைக்கண்டு திடுக்கிட்டான். ஆனால் வெளியே போய்விட முடியவில்லை.

அம்மாது கூறியதெல்லாம் பொய் அல்ல. உண்மையிலேயே அவளுடைய மூன்று குழந்தைகள் இறந்துபோனதும் அவள் அக்குடிசையியே பல வருஷங்களாக வசித்து வருவதும் உண்மையே. மனோகரம்பிரபு ரங்கநாயகிச் சீமாட்டியைக் காதலித்து அதனால் வெளிதேசம் போய்விடுவதற்கு முன்பே அவர் அப்பிரதேசங்களில் திரிந்து அம்மாதை அறிந்திருந்தார். அவளுக்கு வேண்டிய உதவிகளையும் அவர் செய்வதுண்டு. பிறகு அவர் அவளை அதிக காலம்வரை பார்க்கவில்லை. இச்சம்பவம் நடந்த அன்று அவர் தன் மனைவியினிடம் சொல்லிவிட்டு வெளியே புறப்பட்டு வாராவதியை நோக்கிச் சென்றுகொண்டிருந்தபோது அவளைச் சந்தித்தார். அவளும் அவரைக்

கண்டதால் சந்தோஷமடைந்தாள். அவள் அவரை சங்கதிகளெல்லாம் விசாரித்த பின்னர் உண்மையை அறிந்துகொண்டதால் அவர் தன்னுடைய வீட்டில் தங்கியிருக்கலாமென்றும் தான் போய் எப்படியாவது ஏமாற்றி சந்திரசேகரனைக் கொண்டு வருவதாகவும் சொல்லிச் சென்றாள். அப்படியே அவள் ஏதோ தந்திர மந்திரங்களையெல்லாம் செய்து சந்திரசேகரனை அங்குக் கொண்டுவந்து விட்டுவிட்டாள். மனோகாம் பிரபுவைக் கண்டதும் சந்திரசேகரன் விஷயங்களை உணர்ந்துகொண்டு விட்டான். அதாவது ராட்சஸ குப்பன் அவனுடைய முயற்சியில் தோல்வியுற்றுச் சிக்கிக் கொண்டிருப்பானென்றும், அவன் எல்லா விஷயங்களையும் கூறிவிட்டிருப்பானென்றும் தெரிந்துகொண்டான். ஆகவே அவன் மிக்க பீதியுடன், 'என்னை மன்னியுங்கள், மன்னியுங்கள்' என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டான்.

அப்போது மனோகாம்பிரபு, 'சந்திரசேகரா, இப்போதும் நான் உன்னுடன் முடியுமானால் சமாதானம் செய்துகொள்ளலாம் என்னும் எண்ணத்துடன் வந்திருக்கிறேனே தவிர உன்னை அழித்துவிட வரவில்லை. ஆனால் நீ மட்டும் கொலை பாதகன் என்பது எனக்குத் தெரியும். அந்தக் கொலையாளியாகிய ராட்சஸகுப்பனை விட்டு என்னைக் கொல்லச் சதிசெய்தாயே, அது நீதியா? இருக்கட்டும் இப்போதும் நான் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் உண்மையான பதிலை ஒளிக்காமல் சொல்லிவிடு. உன்னை மன்னித்து உனக்கு ஏதேனும் ஒரு வழிசெய்து விடுகிறேன். அதை விட்டு இப்போதும் ஏதாவது என்னைத் தாக்கலாமென நினைத்திருந்தால் அது உன்னால் முடியாது. இதோ பார் கைத்துப்பாக்கியைத் தயாராக வைத்திருக்கிறேன். ஆதலால் பயத்துடன் நடந்துகொள். இப்போது என்னைக்கொல்வதன் சம்பந்தமாய் நீ செய்தயோசனை

யெல்லாம் நீயாகச் செய்தாயா? அல்லது அந்த ராட்சஸி ஹேமவதி சீமாட்டி சொல்லிக் கொடுத்தாளா என்பதை உண்மையாகச் சொல் பார்க்கலாம்,' என்று கேட்டார். அதற்கு அவன், 'பெரியாரே! நான் அந்தப் பாழும் சீமாட்டியைச் சந்தித்திரா விட்டால் இந்த யோசனையையே செய்திருக்க மாட்டேன். அவளை வெளி தேசத்தில் தற்செயலாகச் சந்தித்தபோது அவள் எனக்கு இந்த யோசனையைச் சொல்லியதுடன் அதற்கு வேண்டிய வசதிகளையும் தேடிக் கொடுத்தாள்' என்று உண்மையைக் கூறி விட்டான். அப்போது அவர், 'இதனால் அவளே ஒரு கொலைக்காரி என்பதை நீ அறியவில்லையா? அவள் வீட்டில் நீண்டகாலமாக வேலை செய்து வந்த மந்தரை என்னும் கிழவி திடீரென இறந்து விட்டாளே அதற்குக் காரணமென்ன? ஹேமவதி வைத்திருந்த விஷம்தான். நீ இப்படிப்பட்டவளுடன் சேர்ந்து கொண்டு என்ன வேலை செய்திருக்கிறாய் என்பதைக் கவனி. இப்போதேனும் உனது நிலைமையை அறிந்து கொண்டாயா? இப்பவும் நான் உன்னைக் கெடுப்பதாக உத்தேசமில்லை. உனக்காகவே நான் ராட்சஸ குப்பனையும் போலீசாரிடம் ஒப்படைக்காமல் வேறுதேசம் செல்லும்படி அனுப்பிவிட்டேன். உனக்கும் அதே கட்டளைதான். ஆனால் நீ பரிதிபுரம் போகக் கூடாது. வெகு தூரத்துக்கப்பாலுள்ள ஏதேனும் ஒரு தேசத்தில் தங்கியிரு. யோக்கியமாக வாழ்க்கையை நடத்து. உனக்கு அங்குள்ள ஒரு பாங்கியின் மூலம் அப்போதைக் கப்போது பணம் கிடைக்கும்படி நான் ஏற்பாடு செய்கிறேன். உன்னுடைய நடத்தையை யெல்லாம் நான் யாரிடமும் சொல்வதுமில்லை' என்றார்.

இதை யெல்லாம் கேட்ட சந்திரசேகரன் மனங் கலங்கிப் போனான். எப்படியாவது போய் விட்டால் போதும்

என்று தோன்றியது. ஆகவே அவன், அவருடைய கட்டளை படியே நடந்து கொள்வதற்காக உறுதி கூறும் பொருட்டு வாயைத் திறந்தான். உடனே அவர், "நீ ஒன்றும் பேசவேண்டாம். எத்தகைய உறுதி மொழியும் வாயால் கூற வேண்டிய அவசிய மில்லை, எல்லாம் நடத்தையில் அனுஷ்டித்துக் காண்பித்து விடு. நீ ஏதேனும் தவறான வழியில் சென்றால் எனக்கது உடனே தெரிந்து விடும். ஆதலால் ஜாக்கிரதை. வெளியே போய் விடு' என்றார். சந்திர சேகரனும் சொன்னதே போதுமென்று நினைத்து அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டுச் சென்றான்.

95-வது அத்தியாயம்.

தினகரனும் ஜகதாளும்.

தினகரம் பிரபு ஜகதாம்பாளை ஒரு கோவிலில் விவாகம் செய்து கொண்ட பின்னர் தன்னுடைய சேவகனின் மூலம், ஜகதாம்பாள் தன் கணவனைக் கொலைசெய்து அதனால் கொலை வழக்கில் சிக்கிக்கொண்டு விடுதலை யடைந்தவள் என்பதைத் தெரிந்துகொண்டானென்றாலும், நடந்துபோன விவாகத்தை இனி ரத்து செய்ய முடியுமா? மேலும் அவ்வளவு அழகான ஒரு பெண்மணியை இக் காரணத்தைக் கொண்டே இழந்து விடுவதா? அன்றியும் அவள் கிழவனான உலகநாதம் பிரபுவைக் கொன்று விட்டதாலேயே பாவியனான தினகரனையும் கொல்ல முயற்சிப்பாளென்பது நிச்சயமா? என்ன தியாகம் செய்தேனும் அடையக்கூடிய அவ்வளவு அழகு மிக்கவளாகத் தானே ஜகதா இருக்

கிறாள். இதை யெல்லாம் யோசனை செய்தே அவன் அவளை அதைப்பற்றி ஒன்றும் கேட்காமல் அவளுடன் வாழ்க்கையை நடத்துவதே ஒரு பாக்கியமெனக் கருதி வாழ்ந்து வந்தான். இவ்வாறாகப் பதினைந்து நாட்கள் கடந்து விட்டன. ஒருவராவது வந்து, தினகரன் மாளிகைக்குப் புதிதாக வந்திருக்கும் அம் மாதைப் பார்க்கவே யில்லை. அவளைப்பற்றி எல்லாருமே பத்திரிகையில் படித்திருந்த படியால் அவளை யாரும் பார்ப்பதில்லை என்று முடிவு செய்திருந்தனர். அப்படியிருந்தும் ஜகதாவும் தன்னைப் புதிதாக விவாகம் செய்து கொண்ட தினகரனிடம் தன் பழைய சங்கதி எதையுமே சொல்ல வில்லை. ஊரார் அவளைப் பகிஷ்கரித் திருக்கிறார்கள் என்பதை அவள் பலவாறாக அறிந்துகொண்டிருந்தும் அதை அறியாதவளே போல் காலந் தள்ளினாள். தான் கிருஷ்ணகிரி ஜமீன்தாராணி ஆகிவிட்டோம் என்பதிலும் தினகரனைப்போல ஒரு வாலிபன் தன் ஆசையைத் தீர்க்க அகப்பட்டு விட்டானே என்பதிலுமே அவள் திருப்தி யடைந்து விட்டாள்.

தினகரனுடைய கார்டியனான பஞ்சநதம் பிரபுவோ அல்லது குடும்ப வக்கீல்களான மனமோகனர், தேவி தாசர்களோ அவனுடைய விவாக விஷயத்தில் ஒன்றும் கவனம் செலுத்தாததைக் கண்டு அவன் ஆச்சர்யப்பட்டான். அவர்கள் அவனுக்குக் கடிதம்கூட எழுதவில்லை. அவனுடைய தாயாராகிய ஹேமவதி சீமாட்டியும் இதைப் பற்றி ஒன்றுமே கவனியாதவள் போல் அன்னிய நாடுகளிலேயே சுற்றிக் கொண்டிருந்தாள். தினகரன் எப்போதுமே பலருடன் பேசுவதில் காலங் கழிக்க விரும்புபவன். ஆனால் விவாகத்துக்குப் பின்னர் ஒருவராவது அவனை மதிக்கவே இல்லை. ஆகவே தான் செய்தது முட்டாள்தனமான காரிய மென்பதையும்,

தன் மனைவி மிக்க அழகுள்ளவளே யாயினும் கேடு கெட்ட குண முடையவள் என்பதையும் உணர்ந்து கொண்டான். அதிலும் பொது ஜனங்கள் அவளை ஒரு கொலைக்காரி என்றே மதிக்கிறார்க ளல்லவா ? மேலும் அவன் ஒவ்வொரு நாளும் அவளுடன் இன்பம் அனுபவிக்கும்போது மட்டும் அதை மறந்திருப்பானே யொழிய மற்ற 'வேளைகளி லெல்லாம் ஒரு கொலைக்காரியைத்தானே அவன் விவாகம் செய்துகொண் டிருக்கிறனென்றும், ஒரு கணவனைக் கொன்ற அவள் மற் றொரு கணவனையும் அவசியம் நேர்ந்தால் ஏன் கொல்ல மாட் டாள் என்றும் நினைத்தான். அது மட்டுமா முதலில் அவள் காதலித்த கமலநாதனைப்பற்றி நினைத்தாலே அவனுக்கு ஆத் திரம் பொங்கி வழியும். அப் படுபாவி எப்படியாவது மறுபடி யும் அவளைச் சந்தித்து விட்டால் இருவரும் சேர்ந்து கொண்டு ஏதேனும் சூழ்ச்சி செய்தால் என்ன செய்வதென்று அஞ்சி ஞன். என்றாலும் தன்னுடைய உணர்ச்சிகளை யெல்லாம் வெளியில் காண்பித்துக் கொள்ளாமல் காலந் தள்ளிவந்தான். இவ்வாறு இன்னும் பதினைந்து நாட்கள் கழிந்தன. இதற்குள் தினகரம் பிரபுவினிடம் இருந்த தொகை கரையலாயிற்று. உடனே போய்ப் பஞ்சநதம்பிரபுவைக் கேட்பதென்றாலும் சாத்தியமாக இல்லை. ஆகவே அவன் தன் மனைவியின் சொத்தைப்பற்றி விசாரித்துப் பரிதிபுரத்திலுள்ள அவளது வீட்டையாவது விற்று அதனால் வரும் பணத்தைக் கொண்டு தனக்கு மேஜர் பருவம் வரும்வரை காலங் கழிக்கலாமென நினைத்தான். ஆயினும் அதைப்பற்றி எப்படி அவளிடம் பிரஸ்தாபிப்பதென்று அவனுக்குத் தோன்றவில்லை.

எனினும் ஒருநாள் காலை அவர்களிருவரும் காலை ஆகாரத் துக்கு உட்கார்ந்திருந்த போது ஜகதாளிடம் தினகரன் தன் பணம் சம்பந்தமான நிலைமையை எடுத்துக்காட்டி அவளு

டைய சொத்துக்கள் எவ்வளவு பெறுமென்றும் கேட்டான். அதற்கு அவள், 'காதலா' நான் உன்னை மறுவிவாகம் செய்து கொண்டதாலேயே என் சொத்துக்களை இழக்க வேண்டியவ ளாய் விட்டேன். மேலும் நீ என்னைப் பணத்துக்காகவா கலி யாணம் செய்துகொண்டாய்? என்னுடைய அழகைக்கண்டு தானே செய்துகொண்டாய்? என்றாள். அப்போது அவன் சிறிதுநேரம் யோசித்து, 'உனக்கு அலவன்ஸ் வராது என்ப தை நான் அறிறேன். ஆயினும் பரிதிபுரத்திலுள்ள உன் வீட்டை விற்றுவிட்டால் பெருந்தொகை கிடைக்குமல்லவா? அதைக்கொண்டே நாம் ஒன்றிரண்டு வருஷங்கள் காலந்தள்ள லாம்? என்றதும் அவள், 'ஐயோ, உனக்கு ஒன்றும் அர்த்தமே ஆகவில்லையே! என் கணவர் உயில் எழுதும்போதே நான் மறு விவாகம்செய்து கொண்டால் அந்தவீடும் எனக்குக் கிடையா தென்று எழுதிவைத்துவிட்டார். ஆதலால் அதுவும் எனக்குச் சொந்தமல்ல. எது எப்படியாயினும், நான் உன்னை விவாகம் செய்து கொள்வதால் அதையெல்லாம் இழக்க நேரிடுமென்று தெரிந்திருந்தும் நீ என்னிடம் கொண்ட காதலை மதித்தே நான் துணிந்து உன்னை விவாகம் செய்துகொண்டேன். ஆத லால் நீ இப்போது என் பணத்தைப் பற்றிக் கவலை கொள்வ தென்பது உபயோக மற்றதாகும்' என்று கூறினாள். இதைக் கேட்ட தினகரன் அதிக வருத்த மடைந்தா னென்றாலும் ஒன்றும் பேசாமல் எழுந்து பஞ்சநதம் பிரபுவின் வீட்டுக்குப் போவதென்று முடிவு செய்தான். அதை யறிந்த அவள், 'பிரபுவே ஒரு வார்த்தை' என்றாள். அவன் திடுக்கிட்டு நின் றான். அப்போது ஜகதாம்பாள் தனது இரு கரங்களாலும் அவனது தோள்களைப் பிடித்துக்கொண்டு அவன்மீது சாய்ந் தவள் போல், 'அன்புள்ள காதலா; பஞ்சநதம் பிரபு என்னைப் பற்றி ஏதேனும் தவறாகப் பேசுவார். அப்போது எனது கண வன் என்னும் முறையில் நீ எனக்காகப் பேசி அதை எதிர்க்க

வேண்டும். உன்மனதில் என்ன இருக்கிறதென்பதும் எனக்குத் தெரியும். நான் எனது கணவனைக் கொலை செய்துவிட்டதாக ஒரு தப்பு அபிப்பிராயம் எங்கும் பரவி விட்டிருக்கிறது. ஆனல் சத்தியமாகச் சொல்கிறேன். நான் அதைச் செய்யவே இல்லை. அப்படியிருந்தால் கோர்ட்டில் எனது பக்கம் தீர்ப்பாகுமா? ஆதலால் நீ சிறிதும் என்மீது சந்தேகங்கொள்ளாமல் இருப்பதுடன் வேறு யாரேனும் தவருகப் பேசினுலும் அதை நீ எதிர்க்கவேண்டும். இப்போது பஞ்சநதம் வீட்டுக்குப் போய் வா' என்று கூறிக்கொண்டே அவனது இரு கன்னங்களிலும் முத்தங்களைக் கொடுத்து மார்புறத் தழுவிக் கொண்டாள்.

இதனல் புளகாங்கிதமடைந்த அவனும் உற்சாகத்துடனே பஞ்சநதம் பிரபுவினது வீட்டை நோக்கிப் புறப்பட்டான். பாதி வழியில் சென்றதும் போகலாமா வேண்டாமா எனவும் யோசித்தான். அவரைப் பார்த்தால் அவர் பல கேள்விகளையும் கேட்டால் என்ன செய்வது என்று நினைத்தான். எப்படியாயினும் அவரைப் பார்க்க வேண்டுமென்னும் ஆவலும் அவனுக்கு அதிகமாகவே இருந்தது. ஆகவே அவன் பற்பலவாறு சிந்தித்துக்கொண்டே பஞ்சநதம் பிரபுவின் வீட்டுக்கருகில் போய்ச்சேர்ந்தான். அவன் அந்த வீட்டின் வாயிலருகில் சென்று நின்றபோதே பஞ்சநதம்பிரபு உள்ளே ஒரு அறையிலிருந்து மற்றொரு அறையில் நுழைவதைப் பார்த்து விட்டான். ஆதலால் சேவகனிடம், 'பிரபு உள்ளே இருக்கிருர் போலத் தெரிகிறதே' என்றான். அதற்குச் சேவகன், இல்லை. அவர் வீட்டில் இல்லை' என்று கூறியதும் தினகரன் ஆச்சர்யமடைந்தான். ஆகவே, தினகரன் சேகவனிடம், 'அடே, மடையா என் பொய் பேசுகிருய். அவரை வீட்டில் வைத்துக்கொண்டே இல்லை என்கிருயே இது உனக்குத் தகுமா' என்று கேட்டான். ஆயினும் சேவகன் ஒரே யடியாக

இல்லையென்று சாதித்ததுடன் பிரபு வெளியில் நின்றுகொண்டிருக்கும்போதே திடீரென்று கதவையும் சாத்திவிட்டான்.

இதனால் மிக்க அவமானமும் ஆத்திரமும் அடைந்த தினகரன் உடனே அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டுத் தனக்கு இதற்கு முன்னர் பல தடவைகளில் பணம் கடன் கொடுத்திருப்பவனும், தனது வைப்பாட்டியாகிய கமலகுமாரியின் மூலம் அறிமுகமானவனுமான ஒரு மார்வாரியின் வீட்டுக்குச் சென்ருன். அங்கு அவன் தினகரனை முதலில் மரியாதையாகவே வரவேற்ருனாயினும் பிரபு தனக்கு இரண்டாயிரம் பவுனை கடன் வேண்டுமென்று கேட்டபோது அம்மார்வாரி, 'ஐயா, உனக்கு எப்படிக் கடன்கொடுப்பது? முன்னமே நீ கடன் கொடுக்கமுடியாமல் என்னை மனமோகனர் தேவிதாசர்களாகிய வக்கீல்களிடம் கொண்டுபோய் விட்டுவிட்டாய். அவர்கள் நூற்றுக்கு அறுபது வீதமே கொடுத்தார்கள். ஆதலால் இப்போது கடன் கொடுக்கமுடியாது. மேலும் உண்மையைச் சொல்லிவிடுகிறேன் கேள். நீ இப்படிப்பட்ட கொலைக்காரியான ஒரு மாதை விவாகம் செய்து கொண்டிருக்கிருய் என்பதற்காக உன்னை உனது பந்துக்கள் பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் பூட்டிவிட்டால் கொடுத்த பணம் எப்படிக் கிடைக்கும்' என்ருன். இதைக்கேட்டதும் தினகரனுக்கு அதிக ஆத்திரமும் துக்கமும் பொங்கலாயிற்று. தன்னுடைய நிலைமைக்காக மிகவும் வருந்தினுன். மார்வாரி ஏதேனும் உண்மையை அறிந்துகொண்டே இவ்வாறு கூறினனே என்று கதறினுன். பிறகு அவன் ஒன்றும் பேசாமல் அங்கிருந்து புறப்பட்டு வெளியே சென்று ஒரு வாடகை வண்டியை அமர்த்திக் கொண்டு அதை வக்கீல்களான மனமோகனர் தேவிதாசர்களின் காரியாலத்துக்குச் செலுத்தும்படி கட்டளையிட்டான்.

வண்டியோ வேகமாக ஓடுகிறது. அவன் ஏதோ கனவு காண்பவன்போல் பிரயாணம் செய்கிருன். என்ன செய்வ தென்று அவனுக்கு ஒன்றுமே தோன்றவில்லை. வண்டியும் வக்கீல்களின் காரியாலயம் போய்ச் சேர்ந்துவிட்டது. அவன் வண்டியை விட்டு இறங்கியதும் பஞ்சநதம் வீட்டின் முன்பு யோசனை செய்ததுபோல் வக்கீல்களைக் காணலாமா அல்லது காணுமலே திரும்பிவிடலாமா என்று யோசித்தான். எப்படி யாவது ஆகட்டும். பார்த்துவிடுவதே நல்லது எனத் தீர்மா னித்து அங்கிருந்த குமாஸ்தாவைக் கேட்டதில் மனமோக னர் மட்டும் இருப்பதாகவும், தேவிதாசர் இல்லையென்றும் தெரிந்தது. தினகரன் வக்கீல் அறையில் சென்றபோது அவ ருடன் வேறு இருவர் பேசிக்கொண்டிருப்பதைக் கண்டான். உடனே மனமோகனர், 'பிரபுவே, உனக்கு விவாகமாய் விட்டது போலிருக்கிறதே; நான் உன்னை வந்து உனது மாளி கையில் காணலாமென்று நினைத்தேன். ஆனுல் நீயாகச் சொல்லி யனுப்பவில்லை யாதலால் அங்கு வருவது உனக்கு விருப்பமில்லை போலும் என்று தெரிந்துகொண்டு வாராமல் இருந்துவிட்டேன். கலியாண பலகாரத்தையாவது எனக்கு அனுப்பியிருக்கக் கூடாதா?' என்று பரிகாசத்துடனும் சிரித் துக்கொண்டும் கேட்டார். இதனுல் அவர் ஏதோ வேடிக்கை பேசுகிருரே யொழிய கோபித்துக் கொள்ளவில்லையென நினைத்துத் தினகரனும் சந்தோஷத்தால் தான் பேசுவதே இன்னதென்று அறியாமலும் எதிரில் வேறு இருவர் இருக் கின்றனர். என்பதைக் கவனியாமலும் அவன் தான் மணந்து கொண்ட ஜகதாம்பாளின் ஒப்புயர்வற்ற அழகைப் பற்றியும், அவளை அவன் முதலில் பரிதிபுரத்தில் சந்தித்து அவளிடம் மோகங் கொண்டதைப் பற்றியும், அவளைப்பற்றி என்ன புகார்கள் இருந்தாலும் அவையெல்லாம் ஆதார மற்றவை யென்றும், தன் மனைவி எப்படி ரூபவதியோ அப்படியே குண

வதியுமாவாள் என்றும், தான் வேண்டுமென்றே மிக அவசாமாக அவளைக் கலியாணம் செய்துகொண்டு விட்டதாகவும், அவசரத்தில் யாரையும் அழைக்க முடியவில்லை யென்றும், பிரபலமாகச் சடங்குகள் எதையும் செய்யாததால் பலகாரங்கள் யாருக்கும் அனுப்ப முடியவில்லை யென்றும், இப்போதும் அவன் ரூப்லாவண்யம் மிக்க ஜகதாம்பாளுடன் வாழ்ந்து வருவது அவனுக்கு அளவிலா இன்பத்தைத் தருகிறதென்றும், தனக்குச் செலவுக்குப் பணமில்லாததால் தக்கபடி அலவன்ஸ் கொடுத்துவா ஏற்பாடு செய்வதுடன் அப்போதே சிறிது தொகை தனக்கு அவசியமாக வேண்டுமென்றும் கூறினன்.

அங்கே உட்கார்ந்திருந்தவர்களில் ஒருவர் தினகரனிடம் 'பிரபுவே, அவள்மீது சொல்லப்படும் புகார் ஆதாரமற்றது என்று உனக்கு எப்படித் தெரியும். ஜகதாம்பாள் தன்னுடைய கணவனை உலகநாதம் பிரபுவைக் கொன்றுவிட்டாள் என்பது நிச்சயம். மேலும் அவள் கமலநாதனிடம் அதற்கு முன்னரே கொண்டிருந்த காதல் காரணமாகத் தான் அவனைக் கொன்றுவிட்டாள். இதையெல்லாம் நீ சரியாக விசாரித்து அறியாமல், இவ்வளவு அவசரமாகக் கலியாணம் செய்து கொள்ளலாமா? உன்னுடைய கார்டியன்களுக்கும், தாயாருக்கும் தெரியப்படுத்தி அவர்கள் சம்மதம் கொடுத்த பிறகு விவாகம் செய்து கொண்டிருந்தால் நன்ருய் இருந்திருக்கும். இப்போது நீ செய்தது ஒரு பைத்தியக்காரச் செயலாகத் தான் இருக்கிறது' என்று கூறினர். அப்போது தினகரன் ஆத்திரமடைந்து, 'ஐயா, என் விஷயத்தில் நீ தலையிடவேண்டாம். எனக்குப் புத்தி இருக்கிறது மனமோகனரே நான் அவசரமாகப் போகவேண்டி யிருக்கிறது. புதிதாக விவாகம் செய்துகொண்ட மனைவியை அதிகநேரம் தனியே விட்டிருக்க

கான் விரும்பவில்லை. எனக்குப் பணம் வேண்டுமென்று சொன்னேனே ஏதாவது ஏற்பாடு செய்யுங்கள்' என்ருன். அதற்கு மனமோகனர், 'பிரபுவே, இப்போது என்னிடம் பணம் இல்லை. சரியாகப் பகல் மூன்றுமணிக்கு எனது குமாஸ்தா வசம் ரூபாயை அனுப்பி வைக்கிறேன். பெற்றுக் கொள்' என்று கூறினர். தினகரனும் அதற்குமேல் ஒன்றும் பேசாமல் மனமோகனரின் உத்தரவு பெற்றுக்கொண்டு நேராகத் தன் மாளிகைக்குப் போய்ச் சேர்ந்தான். தன் மனைவியிடம் தனக்குப் பகல் மூன்றுமணிக்கு வேண்டிய அளவு தொகை கிடைக்குமென்று சொன்னதும் அவள் மிகச் சந்தோஷமடைந்து அவனை வாரியணைத்து முத்தமிட்டாள். கணவனும் மனைவியுமாக மணி எப்போது மூன்று ஆகுமென்று காத்திருந்தார்கள். சரியாக மூன்றுமணிக்கு அவர்களுடைய மாளிகையின்முன் ஒருவண்டி வந்து நின்றது அதினின்றும் மனமோகனரின் குமாஸ்தா இறங்கி மாடிமீது சென்று தினகரனிடம் கீழே வண்டியில் மனமோகனர் காத்திருப்பதாகவும் அவர் தினகரனை நேரில்காண விரும்புவதாகவும் தெரிவித்தான். தினகரனும் பணம் கிடைக்கப் போகிறதென்னும் ஆவலால் வண்டிக்கு ஓடினன். ஆனல் வண்டியில் மனமோகனர் இல்லை. வேறு யாரோ இரு உத்தியோகஸ்தர்கள் வீற்றிருந்தனர். அவர்கள் இருவரும் திடீரென்று தினகரன்மீது பாய்ந்து அவனைத்தூக்கி வண்டியில் போட்டுக் கொண்டு வெகுவேகமாக வண்டியைச் செலுத்திச் சென்றனர்.

வண்டி புறப்பட்டுச் சென்றதும் கீழே இருந்த சேவகர்கள் இருவர் இதளென்ன விசேஷமென்று மனமோகனரின்

குமாஸ்தாவைக் கேட்டார்கள். அதற்கு அவன் தினகானுக்குப் பைத்தியம் பிடித்திருப்பதால் அவன் டாக்டர் சதாசிவத்தின் பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சொல்லப்பட்டான் என்றும் அவன் பைத்தியக்காரனுக இல்லாவிட்டால் இப்படிப்பட்ட ஒருத்தியை இவ்வளவு அவசரமாகக் கலியாணம் செய்துகொள்வானு என்றும் பஞ்சநதம்பிரபுவும் இருவக்கீல்களும் மற்றும் ஒரு முக்கியஸ்தருமாகச் சேர்ந்தே இவ்வாறு அவனை ஆஸ்பத்திரியில் அடைப்பதென ஏற்பாடு செய்தார்களென்றும் சொல்லிவிட்டுப் போய்விட்டான். இதை அவர்கள் அங்குள்ள வேலைக்காரிகளிடம் சொன்னுர்கள். இவ்வாருக இச்செய்தி அம்மாளிகையிலுள்ள எல்லா ஊழியர்களுக்கும் பரவிவிட்டது. மாடிமீது இருந்த ஜகதாம்பாள் தன் கணவன் இன்னும் வரவில்லையே என்று நினைத்து என்ன சங்கதியென்று தெரிந்துகொண்டு போவதற்காகக் கீழே இறங்கி வந்தாள். அப்போது வேலைக்காரிகள் தங்களுக்குத் தெரிந்த உண்மையை அவளிடம் சொன்னுர்கள். ஆகவே அவள் துக்கத்துடனும் கவலையுடனும் மீண்டும் மாடிமீது போய் ஒரு சோபாவில் அமர்ந்தாள். அவள் அவ்வாறு அமர்ந்த சிறிது நேரத்துக்கெல்லாம் ஒரு சேவகன் வந்து, யாரோ ஒரு அன்னிய நாட்டுக் கனவான் அவளைச் சந்திக்க விரும்புவதாகவும், அவர் தன் பெயரைச் சொல்லவில்லையென்றும் தெரிவித்தான். அவ்வாறு வந்தவன் யாராக இருக்கலாமென்பதை அவள் ஒருவாறு யூகித்து அறிந்துகொண்டாள். அவனை உடனே அனுப்பும்படி சேவகனிடம் சொன்னுள். சேவகனும் சென்று வந்திருந்த அந்த ஆளை மாடிமீது அனுப்பினுன். அந்த மனிதன் பரிதிபுரத்தைச் சேர்ந்தவனும், மிக்க அழகானவனும், சுமார் இருபத்தாறு

வயதுடையவனும் இருந்தான். அவன் அதிக உயரமோ அல்லது குள்ளமோ இல்லாமல் நடுத்தரமாக இருந்தான். விலையுயர்ந்த உடைகளையே அணிந்திருந்தான்.

அவன் ஜகதாம்பாள் இருந்த அறையில் நுழைந்ததும் அவளுக்கு முறைப்படி மரியாதை செலுத்திவிட்டு, 'மாதே, நான் உன் அவசரக் கட்டளையின்படியே இன்று இவ்விடம் வந்திருக்கிறேன். என்னை அழைத்ததன் உத்தேசமென்ன என்பதைத் தெரியப்படுத்துவாய் என்று நம்புகிறேன்' எனக் கூறிவிட்டு மரியாதையாகவே சிறிது தூரத்தில் நின்றான். அப்போதவள், 'காதலா, இவ்வளவு மரியாதையாகப் பேசவும் தூரத்தில்நிற்கவுமா நீ இங்குவந்தாய். பழையபடி என்னை மார்புறத் தழுவிக்கொண்டு அன்பு கனிந்த சொற்களால் பேசக் கூடாதா,' என்று கேட்டாள். அதற்கவளுடைய பழைய காதலனான கமலநாதன், 'அதெப்படிமுடியும். இப்போதுநிலைமை மாறிவிட வில்லையா? இங்கு வந்திருக்கவே மாட்டேன். ஆனால் உன் கடிதத்திலிருந்து நீ இன்னும் ஏதோ ஒருவித நம்பிக்கை கொண்டிருப்பதாகவும் உண்மையை நான் விளக்கிக் கூறுத வரையில் நீ திருப்தியை அடைய மாட்டாய் என்றும் எனக்குத் தோன்றியதால் அதைச் சொல்லி விட்டுப் போய்விடலா மென்றே வந்தேன்,' என்றதும், ஜகதாள், 'காதலா! என் சமாசாரம் முழுதையும் முதலில் கேட்டுத் தெரிந்து கொள்ளாமல் நீ எனக்கு அதிருப்தியையும் துக்கத்தையும் தரக்கூடிய எதையும் பேசி விடாதே' என்று கேட்டுக் கொண்டதால் அவனும், 'அப்படியானால் உன் சமாசாரத்தைச் சொல்' என்றான். அப்போது ஜகதாம்பாள், 'என தன்புள்ள கமல நாதா! நாம் பழைய சங்கதிகள் சிலவற்றையும் பேசவேண்டும். சில வருஷங்களுக்கு முன்னர் நாம் இருவரும் பரஸ்பரம் எவ்வளவு பிரியமுடன் இருந்தோம் என்பதையும்

நான் முதன் முதலாகப் பரிதிபுரம் வந்தபோது எவ்வளவோ வாலிபர்களும், தனிகர்களும் என்னை மோகித்து என்னைப் பெற முயற்சி செய்தபோதும் நான் அவர்களை எல்லாம் புறக் கணித்துவிட்டு உன்னிடம் தானே அளவிலாக் காதல்கொண் டேனென்பதையும் மறந்து விட்டாயா? மேலும் ஒரு வழக்கில் உனக்குத் தோல்வி ஏற்பட்டு அதனால் நீ உனது ஆஸ்தி பாஸ்திகளை யெல்லாம் இழந்து ஏழையாய்ப் போன போதும் நான் உன்னை விட்டுப் பிரியாமல் உன்னுடன் வந்து விடுவதாகவும் தெரிவித்தேனே அதை நீ மறந்து விட்டாயா? ஆதலால் இப்போது நீ என்னை நேசிக்கவில்லை யென்றாலும் பழையகால ஞாபகம் கொண்டேனும் நீ என்னிடம் அனுதாப மில்லாதவனாக இருக்க முடியாது' என்றாள்.

அதற்குக் கமலநாதன், 'மாதே! நான் எதையும் மறக்க வில்லை. அப்போது நீ எனக்காக எல்லா வற்றையும் தியாகம் செய்யத் தயாராக இருந்தாய் என்பது உண்மையே. நானும் உன்னிடம் அளவு கடந்த அன்பு கொண்டிருந்தேனாதலால் நீயும் என்னைப்போல் தரித்திரத்தில் கஷ்டப்பட வேண்டா மென்று நினைத்தே நானுன்னை விட்டுப் பிரிந்தேன்' என்றதும் அவள், 'ஓ, அப்படியானால் நீ எதையும் மறக்கவில்லை என்று நன்றாகத் தெரிகிறது. நீ முன்பு பரிதிபுரத்தில் உனது வறுமை காரணமாக என்னை விட்டுப் பிரிந்தபோது அவ்வாறு பிரிய உத்தரவு கொடுக்க வேண்டுமென்றும், நான் உனது மனைவியாக வாய்க்க முடியாவிட்டாலும் நீ உனது ஆயுள் உள்ளளவும் என்னை நேசிப்பது நிச்சயமென்றும் சொன்னாயே. அதை இப்போது மறந்து விட்டாயோ? நானும் அப்போதே நான் யாரை விவாகம்செய்து கொண்டாலும், எங்கு வாழ்ந்தாலும் உன்னுடைய உருவம் மட்டும் என் மனக் கண்ணை விட்டு அகலவே அகலாதென்று கூறவில்லையா? எனக்கு

உன்னிடம் மட்டுமே உண்மையான அன்பு ஏற்பட்டு விட்ட படியால் நான் வேறு யாரையும் இதே விதமான அன்புடனே கவனிக்க முடியாது. இதை யெல்லாம் மறந்து விட்டாயோ?' என்று கேட்டாள். அதற்கு அவன், 'எனது பிரியமுள்ள ஜகதா! நான் எதையும் மறக்கவே யில்லை. எனக்கு எல்லாச் சம்பவங்களும் ஞாபகத்தில் இருக்கிறது. நீ உலகநாதம் பிரபுவைக் கலியாணம் செய்து கொண்டபோதே அவன் வயோதிக ளுதலால் நீண்டகாலம் ஆயுளுடன் இருக்க முடியாதென்றும், அவன் உன்னைப் பணக்காரி யாக்கிவிட்டு விரைவில் இறந்து விடுவானென்றும் நான் அறிந்துகொண்டே அதற்கிடையில் நானும் சிறிதுசொத்தைத் தேடிக்கொள்ள வேண்டுமென்னும் எண்ணத்துடனே நான் வேறு தேசம் சென்று சில நல்ல நண்பர்களின் துணையால் வியாபாரம் ஆரம்பித்து அதில் வெற்றிபெற்றுச் செல்வத்தையும் சேகரித்து வந்தேன். ஆனல் அப்போதெல்லாம் நான் உனக்கு ஒரு கடிதமும் எழுதவில்லை. ஏன் தெரியுமா? நீ ஒரு கனவானுக்கு மனைவியாக இருக்கும்போது அவன் உன்னைத் தனது கண்யம் வாய்ந்த மனைவி என்று நினைத்துக் கொண் டிருக்கும்போது உங்களுடைய பரிசுத்த வாழ்வில் நான் தலையிடுவது தவருகுமென்று நினைத்தே அவ்வாறு ஒதுங்கி யிருந்தேன். ஆயினும் விரைவில் உன்னை நான் அடையும்படியான பாக்கியம் எனக்குக் கிடைக்கும் என்று நம்பியிருந்தேன். ஆனல் பின்னல் அது பாதிக்கப்பட்டுவிட்டது நான் என்ன செய்வேன்' என்ருன்.

அப்போது அவன் என்ன சொல்லப் போகிருனென்பதை ஒருவாறு யூகித்துக்கொண்ட ஜகதாம்பாள் அதிக பரபரப்புடனும் துக்கத்துடனும், 'ஏன்! இதற்குள் என்ன நேரிட்டு விட்டது. உனது நம்பிக்கை ஏன் பாதிக்க வேண்

டும்' என்று கேட்க அவன், 'மாதே! என்னிடம் பொய் சொல்லாதே. ஒரு தவறைச் செய்து விட்டு அதை மறைப்ப தற்காக இன்னொரு தவறுதலைச் செய்யாதே. உன் மீது சுமத் தப்பட்ட குற்றத்தை நீ செய்யவில்லை என்று சத்தியமாகக் கூற முடியுமா? எப்போது நான் பத்திரிகையில் உன் மீது வழக்கு ஏற்பட்டிருப்பதாகப் படித்தேனோ அப்பொழுதே என் மனம் நீ குற்றவாளிதா னென்று உறுதியுடனே சொல் லிற்று. ஆயினும் எனக்கு உனதிடம் அளவு கடந்த பிரியம் இருப்பதால் எப்படியாவது நீ விடுதலையாக வேண்டுமென்றே சதா சர்வகாலமும் பிரார்த்தித்து வந்தேன். அவ்வாறே நீ விடுதலை யடைந்தா யெனப் பத்திரிகையில் படித்ததும் நான் கடவுளுக்கு எவ்வளவு வணக்கம் செலுத்தினேன் தெரியுமா?' என்று கூறிக் கொண்டே அவன் உணர்ச்சி மேலீட்டினால் தன் முகத்தைக் கைக் குட்டையால் மூடிக்கொண்டு வருத்த மடைந்தான். அப்போது ஜகதாம்பாள் தன் ஆசனத்தைவிட் டெழுந்து அவனருகில் சென்று அவனது தோள்மீது கை யைப் போட்டுக் கொண்டு அணைத்துக் கொண்ட வண்ணம், 'காதலா! நீ ஆயிரக் கணக்கான குற்றங்களைச் செய்திருப்ப தாக ருஜுவானாலும் நானுன்னை நேசிப்பதை தவறமாட் டேன். நீ அவ்வளவு குற்றங்களையும் என் பொருட்டுத்தானே செய்கிறாய் என்னும் நம்பிக்கை எனக் குண்டு' என்று மெது வாகச் சொல்லியதும் அவனது ஆத்திரம் தாங்க மாட்டா மல், 'அடி பாவியே! இதனால் நீ அக் குற்றத்தைச் செய்த தாக ஒப்புக்கொள்கிறாய் என்று ஏற்படுகிறது. ஆயினும் அக் குற்றத்தை எனக்காகச் செய்தாய் என்று சொல்கிறாயே அதைக் கேட்கவும் என்னால் சகிக்க முடிய வில்லையே' என் றான். அப்போதும் அவள், 'பின் யாருக்காக நான் அக் குற் றத்தைச் செய்ததாக நினைக்கிறாய். நான் எனது கணவனுக்கு விஷமிட்டுக் கொன்று விட்டது உண்மைதான். அதை நான்

ஒப்புக் கொள்கிறேன். ஆயினும் நான் உனக்காகவே அக் குற்றத்தை புரிந்தேன் என்பதைக் கடவுள் அறிவார். ஆதலால் என்மீது இரக்கத்துடனிருந்து என்னை ஏற்றுக் கொள்' என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டாள்.

ஜகதாம்பாள் இவ்வாறு கேட்டுக் கொண்டே கூப்பிய கரத்துடனே கண்ணீர் பெருகும் வண்ணம் அவனது காலடிகளில் வீழ்ந்தாள். கமலநாதன் பார்த்தான் தனதிடம் அளவிலா அன்பு கொண்ட மிக்க அழகுடைய ஒரு மாது இவ்வாறு இறைஞ்சுகின்றாள். ஆனால் அவளோ கொலைக்காரியாக இருக்கிறாள். ஏது செய்வதென்று அவனுக்குத்தோன்றவில்லை. அவளைச் சற்று நேரம் பார்த்தான். வசீகரிக்கும் தோற்றத்தையுடைய அவள் அவன் மனதைக் கொள்ளை கொண்டாள். ஆனால் அவள் செய்த குற்றமோ பயங்கரமானதாக இருக்கிறது. ஆகவே அவன் கடைசியில், 'ஜகதா ! எழுந்திரு, என் காலில் விழுவதில் என்ன பிரயோசனம். நீ எனக்காக அக் குற்றத்தைச் செய்ததாகச் சொல்வதால் என்னையும் அதில் இழுத்து விட்டவளாகிறாய். ஆதலால் நீ உன்னைப் படைத்த இறைவனது காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டுக்கொள். இப்போது எழுந்திரு' என்று கூறிக் கொண்டே அவளைத் தூக்கி விட்டான். அவள் மறுபடியும் சோபாவில் உட்கார்ந்து கொண்டாள். அப்போது கமலநாதன், 'மாதே; கவலைப்பட வேண்டாம், எதற்கும் மன உறுதியுடனிருக்க வேண்டும். என்னை என் இரத்தினபுரிக்கு வரவழைத்தாய். இப்போதும் நீ ஒரு பிரபுவைக் கலியாணம் செய்து கொண்டிருக்கிறாயே, பரிசுத்தமாக அவனுடனே வாழ்க்கையை நடத்தக் கூடாதா ? உங்களுடைய விவாக வாழ்க்கையை நானும் மதிக்க வேண்டியது அவசியமாகிறதல்லவா ?' என்று கேட்டான். அதற்கு அவள், 'நான் சொல்வதைக்

கவனமாய்க் கேள். எனது கணவன் இறந்துபோன பிறகு நீ என்னைக் காண வருவாய் என்று நானெவ்வளவோ ஆவலுடன் எதிர் பார்த்தேன். ஆனால் அவர் இறந்து போனதன் சம்பந்தமாய் ஆறுதல் ஏற்படும் வரை சொற்ப காலம் கழித்தே வருவாய் என்றும் நினைத்தேன். யாராவது கதவைத் தட்டினாலும் நீதானோ என்று ஆவலுடனே கதவைத் திறப்பதுண்டு. ஏதேனும் கடிதம் வந்தாலும் உன்னுடையதுதானோ என்று ஆவலுடனே பார்ப்பதுண்டு. ஆனால் நீ என்னை அடியோடு மறந்து விட்டாய். நான் இலவுகாத்த கிளியானேன். உனக்காக நான் என் கணவனையே கொன்று விட்டு உன்னைத் தழுவிக்கொள்ள ஆவலுடன் எதிர் பார்த்திருந்தும் நீ என்னை மறந்துவிட்டாய் என்றால் நான் என்ன செய்வது? பரிதபுரவாசிகளோ என்னைக் கேவலமாக மதிக்க ஆரம்பித்துவிட்டார்கள். என்னை லட்சியம் செய்வார் யாருமில்லை. முன்பு என்னிடம் அதிக ஆசைகொண்ட வாலிபர்களெல்லாம் பின்னால் என்னைப்பற்றிக் கவலைப்படவேயில்லை. என் நிலைமை பரிதாபமானதாய்ப் போய்விட்டது. ஆகவே, நான் ஒரு யோசனை செய்தேன். இரத்தினபுரியிலிருந்து வரும் வாலிபர்களில் யாரையேனும் மயக்கிக் கலியாணம் செய்து கொண்டு சமூகத்தில் எனது அந்தஸ்தை ஒருவாறு உயர்த்திக் கொள்ள வேண்டுமென்று நினைத்தேன். தற்செயலாக இந்த இனகரம் பிரபுவைச் சந்திக்க நேர்ந்தது. அவனும் என்னிடம் அளவிலா மோகங் கொண்டு என்னை மணந்துகொண்டு விட்டான். இதனால் நான் ஒரு ஜமீன்தாரணியாகி விட்டேன். எனக்கெல்லாச் சௌகரியங்களும் கிடைத்தன. ஆயினும் உள்ளத்தில் மறைந்துகிடந்த உன்னிடமுள்ள ஆசை மறுபடியும் எக்காரணத்தாலோ கொழுந்துவிட் டெரியலாயிற்று. உன்னைக் காணவேண்டும். உன்னை மனமார அணைத்துக் கொள்ள வேண்டுமென்னும் ஆவல் அதிகரிக்கவே விவாகம்

செய்து கொண்ட நான்காவது தினமே உனக்கு நான் கடிதத்தை எழுதினேன். காரணம் தெரியுமா? தினகரன் மனோ உறுதி யில்லாதவன். ஆண்மை யற்றவன். வேண்டிய சுக சௌகரியங்களைக் கவனிக்க முடியாதவன். ஆதலால் அவனை விட்டுப் பிரிந்து விட்டாலும் நல்லதென்று எனக்குத் தோன்றியதால் உனக்கு எழுதினேன். அன்பென்பது ஒன்று உண்டாயின் அது எனக்கு உனதிடத்தில் மட்டும் ஏற்பட்டிருக்கிறதே யொழிய மற்ற யாரிடமும் ஏற்படவேயில்லை. ஆதலால் நீ எனது காதலனாகவே இன்னும் இருந்து என்னை ஏற்றுக்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகிறேன்' என்றாள்.

அப்போது அந்தக் கமலநாதன், 'ஜகதா! நீ பேசுவது உனக்கே அர்த்தமாகவில்லை போலும். இப்போதுதானே பதினைந்து தினங்களுக்கு முன்னர் நீ தினகரம் பிரபுவுக்கு வாழ்க்கைப்பட்டு உண்மையான மனைவியாக நடந்து கொள்வதாக உறுதி கூறினாய். கடவுளுக்கு விரோதமாக நீ மறுபடியும் தவறு செய்யலாமா? அத் தவறுதலுக்கு நானும் உடந்தையாக இருக்க வேண்டுமென்று கூறுகின்றாயே. ஐயையோ! நான் அத்தகைய பாவத்துக்கு ஈடுபட மாட்டேன். எனக்காக நீ மற்றொரு குற்றம் புரிவதற்கு நான் இடந்தர மாட்டேன்' என்றதும் அவள், 'என்ன! நான் உனக்காக இந்த இரண்டாவது கணவனையும் கொலை செய்துவிடக் கூடிய அவ்வளவு பாவி என்று என்னை நினைக்கிறாய்,' என்று கேட்கக் கமலநாதன், ஜகதா! அதை யெல்லாம் பேச வேண்டாம். நான் உனதிடம் இனி நமக்குள் எத்தகைய சம்பந்தமு மில்லை என்றும், இனி நீ என்னைப்பற்றி நினைக்கவேண்டாம் என்றும் கட்டிக்கொண்ட கணவனுடன் ஒழுங்காக வாழ்க்கையை நடத்து என்றும் சொல்லிவிட்டுப் போகவே நான் வந்தேன்

இப்போதே நாம் நீண்ட நேரமாகப் பேசிக் கொண்டிருக்கிறோம். உன் கணவன் வந்துவிட்டால் என்ன செய்வது?' என்று சொல்லவும், அவள், 'என் கணவனா? அவன் எங்கிருந்து வரப்போகிறான். அவனைப் பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் அடைத்து விட்டார்களே. ஆனால் அவன் உண்மையில் பைத்தியக்காரன் அல்ல. அவனை என்னிடத்திலிருந்து பிரித்து விடுவதற்காக அவனுடைய பந்துக்களும், நண்பர்களும் சேர்ந்து இவ்வாறு செய்திருக்கிறார்கள். இந்த ஊர் சட்டம் இப்படிக் கொடுமையாக இருக்கிறது. இரண்டு டாக்டர்கள் ஒருவனைப் பைத்தியக்காரன் என்று சொல்லிவிட்டால் உண்மையில் அவன் பைத்தியக்காரனாக இல்லாவிட்டாலும் அவனை ஆஸ்பத்திரியில் அடைத்து விடுவார்கள். இப்படித்தான் என் கணவனையும் அக்கிரமமாக ஆஸ்பத்திரியில் அடைத்து விட்டார்கள். ஆயினும் நீ மாத்திரம் ஒரு வார்த்தை அன்பாகப் பேசிவிட்டு என்னை உன் கரத்தில் அணைத்துக்கொண்டால் நான் அவனைப்பற்றிக் கவலைப்படமாட்டேன். நான் உன்னுடன் வந்துவிடுகிறேன். உன்னுடைய காமக் கிழத்தியாக இருக்கக் காத்திருக்கிறேன்' என்று முறையிட்டாள்.

இதைக்கேட்ட கமலநாதன், 'அது முடியாது; நீ இவ்வாறெல்லாம் பேசவேண்டாம், நான் உன்னுடன் சம்பந்தம் வைத்துக்கொள்ள முடியாது' என்று கண்டிப்பாகக் கூறியதும் அவள் துக்கத்துடனும் ஆத்திரத்துடனும், 'காதலா, நீ என்னுடைய நிலைமையை அறியவில்லையா? என்னை இந்த நிலைமையிலா விட்டுவிட்டுப் போகிறாய். நான் தினகரனை விவாகம் செய்து கொண்டதால் அதற்குமுன் இருந்த ஆஸ்திபாஸ்திகளை இழக்கலானேன். இப்போதோ தினகரனுடைய உற்றார், உறவினர் என்னிடமிருந்து அவனைப் பிரித்து விடுவ

துடன் என்னையே இங்கிருந்து ஓட்டாண்டியாக ஓட்டிவிடப் பார்க்கிறார்கள். ஆதலால் நீ தான் எனக்குக் கதி, என்னைக் கைவிடவேண்டாம்.' என்று கேட்டுக்கொண்டாள். அதற்கு அவன், 'பெண்ணே,' உண்மையில் எனக்கு உன்னிடம் அபிமானம் இருப்பதால் என்னாலியன்ற உதவிசெய்யக் காத்திருக்கிறேன். எனக்குப் பலவகையிலும் பணம் இப்போது சேர்ந்திருக்கிறது. ஆதலால் தேவையாயின் உனக்கு வேண்டிய பணத்தை அனுப்பி வைக்கிறேன். அது தவிர வேறு வழியில் என்னைத் தொந்திரவு செய்ய வேண்டாம்' என்றான். அப்போது அவள், 'நான் பணஉதவி பெறுவதற்காக உன்னை வரும்படி அழைக்கவில்லை. என்னிடமும் அவசியமான பணம் இருக்கிறது. எனக்குப் பணம் வேண்டியதில்லை. உன்னுடைய காதல் தான் வேண்டும். ஆதலால் என்னைக் காதலிக்க வேண்டுமென்று உன்னைக்கேட்டுக் கொள்கிறேன்' என்றாள். அதற்கு அவன், 'பெண்மணியே,' அத்தகைய அடாத வார்த்தைகளையெல்லாம் பேசவேண்டாம். நான் முதலில் உன்னை விட்டுப் பிரியும்போதும் நீ பரிசுத்தமாகவே இருந்தாய். இப்போதும் பரிசுத்தமாக இரு. நான் இதர வகைகளில் என்னாலான உதவிசெய்யத் தயாராக இருக்கிறேன். உன் கணவன் விடுதலை யடைந்துவிட்டால் உன் நிலைமை திருப்திகரமாகவே இருக்கும். ஆதலால் அவனை எங்கு அடைந்திருக்கிறார்கள் என்பதை நீ சொன்னால் நான் அவனுடைய விடுதலைக்காக என்னாலியன்றவரை உழைக்கிறேன். அது தவிர வேறு விதமாக நீ என்னைத் தொந்திரவு செய்வதில் பிரயோசனமில்லை' என்று கூறிவிட்டான்.

அவனுடைய அபிப்பிராயத்தை நன்கு அறிந்துகொண்ட அவள், மீண்டும் அவனைக் கெஞ்சுவதில் பிரயோசனமில்லையென்று தெரிந்துகொண்டு, 'அன்பா, சரி, உன் இஷ்டப்படி

யே நடந்துகொள். என் கணவன் விடுதலையடையும்படி உதவி செய்தால் போதும். ஆனால் அவனை எந்த ஆஸ்பத்திரியில் அடைத்திருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியாது. யாரோ டாக்டர் சதாசிவத்தின் ஆஸ்பத்திரி என்று பேசிக்கொண்டார்கள். அது தான் எனக்குத் தெரியும்,' என்றாள். அதற்கு அவன், 'அந்தத் தகவலே போதுமானது. அதைக்கொண்டே நான் அவன் இருக்கும் இடத்தைக் கண்டுபிடித்து விடுவேன் இதோ, நான் இரத்தினபுரியில் தங்கியிருக்கும் விலாசம் இக் கடிதத்தில் இருக்கிறது நீ அங்கு வரவே கூடாது. மிகவும் அவசரமாக என் உதவி தேவையானால் மட்டும் ஆளை அனுப்பு. நான் போய் வருகிறேன்' என்று சொல்லிவிட்டுப் புறப்பட முயன்றான். அப்போது அவள் அவனுடைய கையைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு துக்கத்துடன் அவனைப் பார்த்துக்கொண்டே, 'நாம் இப்படித்தானா பிரிவது?' என்று கேட்டாள். அதற்கு அவன், 'ஆம், அப்படித் தான், என்று சொல்லிவிட்டு அவளிடமிருந்து விடுவித்துக்கொண்டு வேகமாகப் போய்விட்டான். அவன் போன பின்னர் ஜகதாம்பாள் தன் முகத்தைக் கரங்களால் மூடிக்கொண்டு அழுது கொண்டே சோபாவில் சாய்ந்தாள்.

97-வது அத்தியாயம்.

இருட்டறைச் சம்பவம்

அன்றிரவு ஜகதாம்பாள் தன்னுடைய அறையில் விளக்கும் இல்லாமல் துக்கத்துடன் உட்கார்ந்திருந்த சமயத்தில் பற்பல விதமான சிந்தனைகளையும் செய்து கொண்டிருக்

தாள். அந்நிலைமையில் அங்கு யாரேனும் வந்து பார்த்தால் அவள் ஒருமாது என்று அறிந்து கொள்ளக்கூடிய வெளிச்சம் இருந்ததே யொழிய குறிப்பாக அவள் யார் என்று அறிய முடியாததாக இருந்தது. அவள் அவ்வாறு உட்கார்ந்திருக்கும் நிலைமையில் திடீரென்று அறையின் கதவு திறக்கப்பட்டது. ஒரு சேவகன் வந்து, சந்திரசேகரம்பிரபு வந்திருக்கிறார் என்றான். பிரபுவும் உள்ளே நுழைந்துவிட்டான்' சேவகனும் கதவைத் தாளிட்டுக்கொண்டு போய்விட்டான். உடனே சந்திரசேகரன் அருகிலிருந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு, 'ஹேமவதியே,' நான் இப்போது பாதி பைத்தியக்காரனாக இருக்கிறேன் உன்னுடன் கலந்து சில யோசனைகளைச் செய்யவே இங்கு ஓடிவந்தேன். நான் கூறுவதைச் சற்று கவனமாகக் கேள்' என்றதும் ஜகதாளுக்கு ஆச்சர்யமாய் விட்டது. சந்திரசேகரம்பிரபு யார் என்பதும் அவளுக்குத் தெரியாது. அவன் தைரியமாக உள்ளே நுழைந்து ஹேமவதி என்று கூறிப்பேச ஆரம்பித்து விட்டிருப்பதால் தன்னை மணந்து கொண்டிருக்கிற தினகரனுடைய தாய் ஹேமவதிக்கும் அவனுக்கும் ஏதோ சம்பந்த மிருக்க வேண்டுமென்றும், இப்போதவன் வாயால் வரப்போவதை யெல்லாம் கேட்டு வைப்பது நலமென்றும் நினைத்து ஒன்றும் பேசாமல் மௌனமாக உட்கார்ந்திருந்தாள். அவனும் அம்மாளிகைக்கு வந்ததும் கிருஷ்ணகிரி ஜமீன்தாரிணி இருக்கிறாளா என்று கேட்டான். ஜமீன்தாரிணி என்றால் ஹேமவதிதான் என்று அவன் நினைத்துக்கொண்டு அவ்வாறு கேட்டான். ஜகதாம்பாள் தினகரனை மணந்துகொண்ட பிறகு கிருஷ்ணகிரி ஜமீன்தாரிணியாய் விட்டதால் சேவகனும் இருக்கிறாள் என்று அவனை மாடியில் அவளிடம் கொண்டுபோய் விட்டுவிட்டான். பாவம். சந்திரசேகரன் அங்கு இருக்கும் மாது ஹேமவதி தான் என்று நினைத்துப் பலவாறு பேசத் தொடங்கி விட்டான்.

சந்திரசேகரன் பின்வருமாறு பேசினன்:—ஹேமவதி, நான் உன் இஷ்டப்படியே நடந்தேன். ஆனல் எல்லாம் தோல்வியாய் விட்டது. நான் உன் கட்டளைப்படியே கிருஷ்ணகிரியிலுள்ள சுந்தரவிலாச மாளிகையில் சென்று அங்கே மடத்தில் ஒளிந்திருந்த ராட்சஸகுப்பனைச் சந்தித்து நானும் அவனுமாக உன் அறையில் நுழைந்து நீ கொடுத்த சாவியைக்கொண்டு மேஜையைத் திறந்து உனது விஷபுட்டியையும் எடுத்துக் கொண்டு புறப்பட்டோம். ஆ, நான் அப்போதே மனேகாம் பிரபுவைக் கொன்று விட்டதாகவும், நானே ஒரு பெரிய பணக்காரனாய் விட்டதாகவும் நினைத்தேன். ஆனல் எங்களுடைய யோசனையெல்லாம் தோல்வியடைந்துவிட்டது. எப்படி எனக் கூற எனக்குத் தெரியாது. நான் உடனே எனது சிற்றப்பனை மனேகாரைக் காணவேண்டியதாயிற்று. அப்போது அவர் என் யோசனைகளையெல்லாம் அறிந்து விட்டிருந்தபடியால் நான் தாழ்ந்துபோக வேண்டியதாயிற்று. என்னைக் கோர்ட்டில் போட்டு அத்துடன் அழித்து விடுவதாக மிரட்டினர். என்னிடம் பச்சாத்தாபம் காட்டி வெளிதேசம் போய் விடும்படி சொன்னர். ஆகையால் உன் இஷ்டப்படி நீ பழி வாங்க முடியாமற் போய்விட்டது. அவருடைய கட்டளையின்படி நடக்க எனக்கு இஷ்டமில்லை. உன்னைச் சந்தித்தே எதுவும் யோசிக்க வேண்டுமென்று நினைத்தேன். இதற்குள் நீ இரத்தினபுரிக்குத் திரும்பி வந்துவிட்டதாகவும், உன் மகன் தினகரம்பிரபு பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் இருப்பதாகவும் நீ அவனுடைய மனைவியை வீட்டை விட்டுத் துரத்தி விட்டதாகவும் கேள்விப்பட்டேன். என்னிடமிருந்த பணமெல்லாம் ஆகிவிட்டது. மார்வாரியிடம் கடன்கேட்கப் போனேன். அவன் ஒரு பைசாவும் கொடுக்க முடியாதென்று சொல்லிவிட்டான். அவன்தான் நீ இவ்விடம் வந்திருப்பதாகத் தெரிவித்தான். எனக்குச் சந்தோஷமாய் விட்டது. இங்கே ஓடிவத்

தேன். ஹேமவதி, நான் உன்னைக் காதலித்து மிருக்கிறேன்; வெறுத்தும் இருக்கிறன். நான் உன்னிடமிருந்து ஆர்வத்து டன் இன்பத்தைப் பலமுறை பருகியிருக்கின்றேன், சிற்சில சமயங்களில் உன்னைக் கண்டித்தும் மிரட்டியும் இருக்கிறேன் ஆயினும் உன்னைவிட்டுப் பிரிந்திருக்க என்ஞல் முடிவதில்லை. சதாசர்வகாலமும் உன் ஞாபகமே அதிகமாயிருக்கின்றது. ஆதலால் நீ கிருபை செய்யவேண்டும். நீ என்னைப் புறக்கணி த்து விடுவாயாயின் நான் எனதுடைய சிற்றப்பனின் தயவில் தான் கிடக்கவேண்டும். நீ என்னை அவ்வாறு விட்டுவிடமாட் டாய் என்று நம்புகிறேன். இப்போது நான் உனது கணவ ஞகவே இருக்கிறேஞதலால் நாம் இருவரும் பகிரங்கமாகக் கலியாணம் செய்துகொண்டு விடுவோம். அப்போதுதான் நான் தைரியத்துடன் என் சிற்றப்பனை எதிர்க்க முடியும். ஆதலால் எனக்கு ஆறுதல் அளிக்கும் பதிலைக் கொடு அன்பு டன் உன் கையைக்கொடு பார்க்கலாம்''

இதையெல்லாம் கேட்ட ஜகதாம்பாள் ஆச்சர்யப்பட் டாள். தன் மாமியாருக்கும் இந்தப் பிரபுவுக்கும் சம்பந்த முண்டென்பதையும், இருவருமாகச் சேர்ந்து மனேகாம் பிரபுவைக் கொல்ல முயன்ருகிருர்களென்பதையும் அறிந்து திடுக்கிட்டாள். ஆயினும் நெருக்கடியான சமயம் வந்து விட்டது. அவன் பதில் கேட்கிருன் அதுமட்டுமா? அன்புடன் கையைக்கொடுக்கும்படி கேட்கிருன். அவள் என்னசெய்வாள் பாவம், எதற்கும் இன்னும் சிறிது நேரம் மௌனமாக இருப் போம் எனத்தீர்மானித்து அவள்ஒன்றும்பேசாமலும்,கையை நீட்டாமலும் அவன் என்ன செய்கிருனென்று கவனித்தாள். சந்திரசேகரம் பிரபு சிறிது நேரம் மௌனமாக இருந்து பார்த் தான். பதில் எதுவும் வாராததால் அவன் மேலும் பேச ஆரம் பித்து, 'ஹேமவதி! ஏன் மௌனமாக இருக்கிருய்? என்

கோரிக்கையை மறுத்து விடலாமெனப்பார்க்கிருய் போலும். ஓ, அப்படிச் செய்தால் என் உயிரே போய்விடும். நாம் இருவரும் பரஸ்பரம் அன்புடனே அணைத்துக் கொண்டு இன்பம் நுகர்ந்தகாலத்தை யெல்லாம் நீ மறந்து விட்டாயே? உன்னை அன்னிய தேசத்தில் சந்தித்தபோதே நீ சிறிது பிகுவாகத் தானே பேசினுய். அப்போதே எனக்கு சந்தேகம்தான். நீ ஏன் இதுவரை ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. நான் உடனே எழுந்து போய்விட வேண்டு மென்பது உனது அபிப்பிராயமா? நான் உனக்கு ஒரு எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன். நாங்கள் உமதுடைய மேஜையிலிருந்து எடுத்த விஷ புட்டி இப்போது எனது சிற்றப்பனை மனோகாம் பிரபுவின் கையில் சிக்கிக்கொண் டிருக்கிறது. அவர் அது உன்னுடையது என்று தெரிந்து கொண்டதும் முன்பு உன் வீட்டில் மங்தரை என்னும் கிழவி திடீரென இறந்துவிட்டாளே அதற்கும் இந்த விஷம்தான் காரணமென்றும் நீ ஒரு கொலைக்காரி என்றும் ருஜூப்பிக்கிருர். ஆதலால் நீ என்னை விவாகம் செய்து கொண்டு வி டால் எனக்காகவேனும் அவர் உன்னை சும்மா விட்டு விடுவார். ஆகையால் உடனே பதில் சொல்லு' என்று கூறிக்கொண்டே அவளைப் பிடித்துக் கொள்ளும் பொருட்டு அருகில் நெருங்கினுன்.

அதைக்கண்ட அவள், இனியும் சும்மாயிருந்தால் ஆபத்துதானென்று தெரிந்துகொண்டு மெதுவாக எழுந்து நின்று. 'பிரபுவே! நீ என்னை யாரென நினைத்துக் கொண்டு இவ்வளவும் பேசினுயோ அது தவறு' என்று கூறியதும், சேவகனைக் கூப்பிடும் மணியடித்தாள். சேவகனும் விளக்குகொண்டுவரும் படி சொல்லவே மணியடிக்கப்பட் டிருக்கிறதெனத் தெரிந்து கொண்டு இரண்டு விளக்குகளுடன் வந்துசேர்ந்தான். அவன்

வரும்வரை ஒருவராவது பேசவில்லை. விளக்கு வந்த பிறகும் சந்திரசேகரன் கவலை யுடையவன்போல் ஒரு மூலையில் உட்கார்ந்திருந்தான். சேவகன் அதை யெல்லாம் கவனியாமல் விளக்கை வைத்துவிட்டுப் போய்விட்டான். பிறகு சந்திரசேகரன் நன்றாகக் கவனித்துப் பார்த்ததில் எதிரில் இருப்பது ஹேமவதி சீமாட்டியல்ல வென்றும், தினகரன் விவாகம் செய்து கொண்ட மாதே எதிரில் இருப்பதையும் அறிந்தான். ஆகவே பீதியுடன், 'மாதே, நீ என்ன செய்ய யோசித்திருக்கிறாய்' என்று வணக்கத்துடனே கேட்டான். அதற் கவள், 'நாம் இருவரும் முன்பின் அறியாதவர்கள். அப்படியிருக்கும் போது நீ எப்படி என்னை இவ்வாறு கேட்கலாம்,' என்று கண்டிதமாய்க் கேட்டாள். அப்போது சந்திர சேகரம், 'ஆம்; நீ கூறுவது உண்மையே. அதை நான் மறுக்க வில்லை. ஆயினும் பல விஷயங்களை நான் இப்போது உண்மையுடன் சொல்லி விட்டிருப்பதால் உனது தயவு எனக்கு வேண்டியதாக இருக்கிறது. ஆதலால் எனது விஷயத்தில் தாராளத் தன்மையுடனே நடந்து கொள்வாய் என நம்புகிறேன்,' என்று கூறவும், 'ஜகதாம்பாள், 'பிரபுவே! இப்போது நான் கேட்ட விஷயங்களை அநாவஸ்யமாக என்னுடைய நன்மைகளுக்காக உபயோகித்துக் கொள்ள மாட்டேன். ஆனால், எனக்கு ஏதேனும் ஆபத்து ஏற்படுவதாக இருந்தால் எனது பாதுகாப்பின் நிமித்தம் இவற்றை நானே உபயோகித்துக் கொள்வேன். நான் சொல்வது உனக்கு விளங்கிற்றா?' என்று கேட்டதும் சந்திர சேகரன் துக்கத்துடனே, 'மாதே! நீ சொல்வது எனக்கு நன்றாக விளங்கிற்று. அதாவது தினகரனுடைய தாயார் இப்போது உனது வசமாக சிக்கிக்கொண்டு விட்டாள். அவள் இனி உனதிஷ்டப்படி ஆடவேண்டியதுதான்.

அதற்குத் தக்கபடி நீ நடந்து கொள்வாய் என்பது எனக்குத் தெரியும். ஆ ! நானென்ன பைத்தியக்காரன், 'ஆத்திரக்கார னுக்குப் புத்தி மட்டு என்பதுபோல் அவசரப்பட்டு ஆபத் தான காரியத்தைச் செய்து விட்டேனே' என்று கூறி வருந் தினன்.

அப்போது ஜகதாம்பாள், 'பிரபுவே ! நடந்துபோன காரியத்தைப்பற்றி இப்போது வருந்துவதில் யாது பிரயோச னம் ! நானே அவசியமாக ஒருவருக்கும் தொந்தரை விளை விக்க மாட்டேன். எப்படியோ இச் சங்கதிகளெல்லாம் எனக் குத் தெரியும்படி நீ செய்ததற்காக உனக்கு வந்தனம் செலுத் துகிறேன். ஹேமவதி சீமாட்டி வருவாள் என நீயே சொன் னையல்லவா ? ஆதலால் அவள் வருவதற்கு முந்தியே நீ போய் விடுவதே நல்லது. ஆதலால் உடனே புறப்படு' என்றாள். அவனும் அவ்வாறே செய்வதுதான் நல்லதென உணர்ந்து உடனே அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டுச் சென்றான். அவன் சென்ற பிறகு ஜகதா, மீண்டும் தனியாகவே அவ் வறையில் உட்கார்ந்து கொண்டு தன் மனமாரக் காதலிக்கும் கமலநாதன் தனது இஷ்டப்படி நடக்கவில்லையே என்பது பற்றியும் தாம் இரண்டாவது முறை கலியாணம் செய்து கொண்ட தினகரனையும் பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் அடைத்து விட்டார்களே என்பது பற்றியும், சமீபத்தில் ஹேமவதி சீமாட்டி வந்து பொறாமையினால் தன்னை வெளியே போகும்படி தெரிவித்தா லவளுடனே போராட வேண்டுமே என்பதைப் பற்றியும் பலவாறு சிந்தித்துக் கொண்டிருந்தாள். ஆனால், தனது மாமியாராகிய ஹேமவதி சீமாட்டி தனக்கு அடங்கி விடும்படியான பல விஷயங்களையும் தானே அறிந்து கொண்டு விட்டதற்காகச் சந்தோஷப் பட்டாள். தினகரனே சிற்சில சமயங்களில் அவளிடம் தனது தாயைப்பற்றி மிகக்

கேவலமாகச் சொல்வதுண்டு. அப்போதெல்லாம் அவன் தனது தாயான ஹேமவதி வேறு வேடமணிந்து கொண்டு விருந்து மண்டபம் சென்று சந்திரசேகரம் பிரபுவை மயக்கித் தனது கைபாள வைத்துக்கொண்டு மோகனதாஸைக் கொல்லுவதாக முயற்சித்ததையும் சொல்லிவிட் டிருக்கிறுன். ஆதலால் ஜகதாம்பாளுக்கு ஹேமவதி சீமாட்டி மீது சந்தேகம் உண்டு இப்போது சந்திர சேகரத்தின் வாயாலேயே பல விஷயங்களேயும் கேட்டு விட்டதால் தனது மாமியாரை எப்படியும் அடக்கி விடலாம் என்னும் தைரியம் வந்து விட்டது.

சந்திர சேகரன் வெளியேபோய் அரைமணி நேரத்துக்கெல்லாம் சாப்பிடப் போகவேண்டிய நேரத்தில் அவ்வறையின் கதவுதிறக்கப்பட்டதும் ஹேமவதி சீமாட்டியே ஜகதாம்பாள் முன்பு வந்து நின்ருள். ஹேமவதி சீமாட்டி வரும்போதே ஜகதாம்பாளேத் துரத்திவிட வேண்டுமென்னும் ஆத்திரத்தால் வந்ததும் அவள் அம்மாளிகையில் நுழைந்ததும் சேவகர்களேக் கொண்டு அங்கு நடந்தவற்றையெல்லாம் விசாரித்து அறிந்து கொள்ளாமல் சரேலென மாடிமீது ஏறி ஜகதா இருந்த அறைக்குள் சென்ருள். அவள்தானே ஹேமவதியாயிருக்க வேண்டுமென நினைத்ததும் ஜகதாம்பாள் தனது சோபாவினிடமிருந்து எழுந்து நின்று மரியாதை செய்தாள். உடனே ஹேமவதி சீமாட்டி அதிகார தோரணையில், 'பெண்ணே! நீ தங்கி யிருப்பதற்கு இது இடமல்ல, உடனே வெளியே போய் விடு இந்த இடத்தின் பெயரைக் கெடுக்காதே' என்று ஆத்திரத்தோடு கூறினுள். அதற்கு ஜகதாம்பாள், 'என்ன உரிமை கொண்டும், அந்தஸ்துடனும் இவ்வாறு கட்டளேயிடுகிருய்' எனத் திருப்பிக் கேட்டாள். அதற்கு ஹேமவதி, 'என்ன உரிமைகொண்டு இவ்வாறு கட்டளே யிடுகிறேனென

கேட்கிருயா? என் மகனுக்கு இன்னும் மைனர் பருவம் நீங்க வில்லை. அவன் மேஜர் பருவத்தை யடையும்வரை அவனு டைய சொத்துக்களை யெல்லாம் கார்டியன்களே நிர்வகித்து வருகின்றனர். மேலும் அவன் சரியான புத்திஸ்வாதீனமில் லாத வனுதலால் தான் உன்போன்ற ஒருத்தியை விவாகம் செய்துகொண்டான். ஆதலால் நீ உடனே வெளியே போய் விடு; நீ இங்கு இருப்பதைக் கண்டாலும் எனக்கு எரிச்சலாக இருக்கிறது' என்றதும் ஜகதாள், 'நாம் இதைப்பற்றிச் சிறிது நேரம் கலந்து பேசவேண்டி யிருக்கிறது. ஆதலால் கதவை உட்பக்கம் சாத்திக் கொள்கிறேன். நீ எவ்வகையிலும் என் னிடம் அடங்கிவிடவேண்டிய நிலைமை உனக்கு ஏற்பட்டிருக் கிறதென்பது மட்டும் கவனிக்கத் தக்கதாகும்' என்றதும் ஹேமவதி சீமாட்டிக்கு கோபம் வந்து விட்டது. ஆகவே அவள் தனது மருமகளிடம், 'பெண்ணே! எனது மகன் உனது மோகத்தில் மூழ்கி என்னைப்பற்றி ஏதேனும் உளறிக் கொட்டி யிருக்கலாம். அதைக் கொண்டே என்னை நீ அடக்கி ஆளலாமென நினைக்கிருய் போலும். அது ஆகக்கூடிய காரி யமா? நானெதற்கும் அஞ்சியவளல்ல. உன்னைப்போல் நான் குற்றவாளியல்ல' என்ருள். உடனே ஜகதாளும் தீவிரமாக எதிர்த்துப்பேச ஆரம்பித்து, 'நானுனக்கு மருமகளாக வாய்த் ததில் ஆச்சர்ய மொன்றுமில்லை. நான் குற்றம் செய்யாமல் இருந்தும் என் மீது வீண்பழி சுமத்திஞர்கள். ஆனல் நீயோ கொலை, விபசாரம் ஆகிய எல்லாவற்றிலும் பேர் போனவள்? ஆதலால் உனக்கா நானஞ்சுவேன்' என்ருள். எப்போதுமே ஹேமவதி சீமாட்டி சிறிது அகங்காரமுடையவள். அவளுக்கு ஜகதாம்பாளினது பேச்சைக் கேட்டதும் அளவு கடந்த ஆத் திரமேற்பட்டு விட்டது. ஆகவே அவள், 'பெண்ணே, உளற வேண்டாம். மரியாதையாக வெளியே போய் விடுகிருயா?

அல்லது சேவகனைக் கூப்பிட்டு கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளும்படி செய்யட்டுமா,' என்று கேட்டதும் ஜகதாம்பாள் 'அது முடியாது. சேவகன் எனது அருகிலும் வரமாட்டான் நீ தான் சந்திர சேகரம் பிரபுவின் கள்ளக் காதலியாதலால் உன்னைத் தள்ளி விடுவானென்றாள். அப்போது ஹேமவதி சிமாட்டி அடைந்த ஆத்திரத்துக்கு அளவே கிடையாது. ஆதலால், 'அதைப்பற்றியெல்லாம் உன்னை யாரும் கேட்கவில்லை. அந்தக் கதையை யெல்லாம் இவ்விடம் பேசவேண்டாம். உடனே புறப்படு. இல்லாவிட்டால் இம்முறை சேவகனைக் கூப்பிடுவது நிச்சம்' என்றாள். அதற்கு ஜகதாம்பாள், 'அவன் வந்தால் உன்னாலே கொல்லப்பட்ட மங்கையின் ஆத்மா இங்கே திரிகிறதா என்று வேண்டுமாயின் நானே விசாரிக்கிறேன். உனது சமாச்சாரம் எவ்வளவு தூரம் தெரிய வேண்டுமோ அவ்வளவையும் தெரிந்து கொண்டிருக்கிறேன். ஆதலால் உன் அதிகாரமெல்லாம் எனதிடம் செல்லாது. மரியாதையாக உனது வேலையை நீ கவனி. எனது வேலையை நான் பார்க்கிறேன்' என்றாள்.

அப்போது ஹேமவதி ஒன்றும் தோணுமல் சிறிதுநேரம் மௌனமாக இருந்தாள். ஆனல் சற்று நேரத்துக்கெல்லாம் விழித்து எழுந்தவள்போல் எழுந்து, 'பெண்ணே' உன்மிரட்டல்களுக்கெல்லாம் அஞ்சமாட்டேன் நீ இங்கு ஒருநிமிஷமும் இருக்கக்கூடாது. ஆதலால் உடனே புறப்படு' என்றாள். அதற்கு ஜகதாம்பாள், 'ஓகோ, அப்படியா? நான் போவதாயின் எங்கே போவேன். தெரியுமா? நேராக மனோகரம்பிரபுவினிடம் சென்று, நீயும் சந்திரசேகரனும் சேர்ந்து அவரைக் கொலைசெய்ய எத்தனித்ததையும், அந்த ராட்சஸ குப்பனை நீ சினேகமாக வைத்துக்கொண் டிருப்பதையும், உன்னுடைய

விஷபுட்டியை நம்பியே நீங்கள் கொல்லத் துணிந்தீர்கள் என்றும் கூறுவேன். தெரியுமா?' என்றாள்.

அப்போது தான் ஹேமவதிக்கு ஒருவித உணர்ச்சி உண்டாயிற்று. தன்னுடைய மருமகள் எப்படியோ பல சங்கதிகளையும் அறிந்து கொண்டிருக்கிறாளே என்று நினைத்து அவளுடன் சண்டை யிடுவதைவிடச் சமாதானம் செய்து கொள்வதே நலம் என்று யோசித்துக் கொண்டிருந்தபோது ஜகதாம்பாள் ஹேமவதி சீமாட்டியிடம், 'மாதே, இவ்வாறு நாம் இருவரும் வாதாடிக் கொண்டிருப்பதில் பயனில்லை. எனக்கோ சாப்பாடு வேளையாகிறது. இப்போது நானே மணியடிக்கப் போகிறேன். சேவகன் வந்ததும் நம் இருவருக்கும் சாப்பாடு கொண்டுவரச் சொல்லட்டுமா, அல்லது என் மூட்டைகளைக் கட்டச் சொல்லட்டுமா?' என்று கேட்டாள். அதற்கு ஹேமவதி, 'எப்படி வேண்டுமாயினும் செய்' என்று அசிரத்தையுடன் கூறிவிட்டாள். அதனால் ஜகதாம்பாள் தான் வெற்றியடைந்து விட்டதாக நினைத்துக்கொண்டு சந்தோஷத்துடனும், புன்சிரிப்புடனும் மணியை அடித்தாள். உடனே சேவகனும் வந்தான். ஜகதாம்பாளே அச்சேவகனிடம் தங்கள் இருவருக்கும் இராச் சாப்பாட்டைக்கொண்டு வரும்படி சொன்னாள். சேவகன் அப்படியே கொண்டு வருவதாகச் சொல்லி வணக்கத்துடன் வெளியேசென்றான். அவன் சென்றதும் ஹேமவதி ஜகதாம்பாளிடம் சென்று அவளது கையைப் பிடித்துக்கொண்டு பரிதாபமான தோரணையில், 'பெண்மணியே, உனக்கு இச்சங்கதிகளெல்லாம் எப்படித் தெரிந்தது' என்று கேட்டாள். அதற்கு அவள், 'நான் அதைத் தெரிவிக்க முடியாது' என்றாள். அதைக்கேட்ட ஹேமவதி, 'நீ சொல்லாவிட்டால் போகிறாய். உனக்குத் தெரிந்த இச் சங்கதிகளெல்லாம் உன் கணவனான தினகரனுக்கும் தெரியுமோ?' என்று

கேட்டாள். அதற்கு அவள், 'இல்லை இதெல்லாம் தெரியாது அவனுக்கு எவ்வளவு தெரியுமென்று நீ அறிந்துகொண்டிருக்கிருயோ அவ்வளவு தான் தெரியும்' என்றதும் ஹேமவதி சிறிது ஆறுதலடைந்து தன்னைப்பற்றிய கேவலமான சங்கதிகளெல்லாம் தன் மகனுக்குத் தெரியவில்லை என்பதனால் சந்தோஷமடைந்து, 'பெண்ணே, நீ இனி என்னுடன் சினேகமாய் இருப்பதற்கு அடையாளமாக ஒரு விஷயத்தைச் சொல் பார்க்கலாம். அதாவது மனோகரம்பிரபுவினால் எனக்கு ஏதேனும் துன்பம் ஏற்படுமா என்பதைத் தெரிவி' என்று கேட்டாள், அதற்கு அவள், 'தற்சமயம் ஒன்றும் ஆபத்து ஏற்படாதென்று நினைக்கிறேன். ஆனால் அதைப்பற்றி ஒன்றும் அதிகமாகச் சொல்லமுடியாது,' என்று சொன்னாள். அச்சமயத்தில் ஒரு சேவகன் அவ்வறையில் புகுந்து ஹேமவதியிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்துவிட்டுச் சென்றான், அக்கடிதத்தின்மீது எழுதப்பட்டிருந்த கையெழுத்தினால் அது சந்திரசேகரம் பிரபுவினால் எழுதப்பட்டதென்று தெரிந்துகொண்டு ஆவலுடன் பிரித்துப் பார்த்தாள்.

பின்னர் அவள், ஜகதாம்பாளைப் பார்த்து, 'சந்திரசேகரம்பிரபு இங்கு வந்திருந்ததாகவும் ஆத்திரத்தாலும் மதிமயங்கியும் பல விஷயங்களையும் தெரியாமல் உன்னிடம் தெரிவித்துவிட்டதாயும் அறிவித்திருக்கிறான்' என்றாள். அதற்கு ஜகதா, 'சந்திரசேகரம்பிரபுவே தான் இழைத்த தவறைப்பற்றி உன்னிடம் சொல்லவேண்டாமெனக்கேட்டுக்கொண்டதால் நான் சொல்லவில்லை. ஆனால் இப்போது எப்படியோ தெரிந்துவிட்டதற்காகச் சந்தோஷப்படுகிறேன் என்று' கூறினாள். இதற்குள் வேறொரு சேவகன் அங்குவந்து ஆகாரம் பரிமாறி இருப்பதாகத் தெரிவித்தான். உடனே இருமாதர்களும் சமையலறைக்குச் சென்று ஆகாரம் அருந்தினர்கள். அவர்களிருவ

ரும் மிக்க சமாதானத்துடனும் பரஸ்பரம் மரியாதையுடனும் நடந்து கொள்பவர்கள்போல் ஒழுங்காக இருந்தார்கள். இதைக்கண்டு வேலைக்காரர்கள் ஆச்சர்யப்பட்டார்கள். ஹேமவதிசீமாட்டி தன் மகன் தினகரனைப் பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் அடைத்துவிட்டு அவனுடைய மனைவியாகிய ஜகதாவுடன் மட்டும் சமாதானமாக இருப்பது வேலைக்காரர்களுக்கு ஆச்சர்யமாயிருந்தது.

அன்றிரவு ஒன்பது மணிக்கு சந்திரசேகரம்பிரபு ஹேமவதிசீமாட்டி இருந்த அறையின் கதவைத் தட்டினன். உடனே ஹேமவதியும் கதவைத்திறந்து அவனை வரவேற்று வேறு தனி அறைக்கு அழைத்துச் சென்ருள். அவள் அப்பிரபுவை அதிக ஆர்வத்துடன் வரவேற்ருள். அவ்வாறு அவள் வரவேற்பாளென்று சந்திரசேகரன் நினைக்கவேயில்லை. ஆதலின் உடனே அவன் அவளது கையைப் பிடித்துக்கொண்டு, 'சீமாட்டியே, நீ என்னை மன்னித்துவிட்டாய் போலும்' நான் உன்னை ஆபத்தான நிலைமையில் வைத்துவிட்டேனே, அப்படியும் நீ என்னை மன்னித்துவிட்டாயா?' என்று ஆவலுடன் கேட்டான். ஹேமவதி தன் கரத்தை அவனதுபிடியினின்றும் இழுத்துக்கொள்ளாமல், 'என்னசெய்வது? நடந்துபோன காரியத்துக்காக வருத்தப்படுவதில் என்ன பிரயோசனம்? நீ வேண்டுமென்றே அவ்வாறு செய்தாய் என்று கூறமுடியாது ஆத்திரத்தில் ஏதோ தவறு செய்துவிட்டாய் என்பதை நான் அறிகிறேன்' என்று சொன்னதும் சந்திரசேகரன் அதிக சந்தோஷமடைந்து, 'ஹேமவதி,' உன் பேச்சைக்கேட்டு நான் மிகச் சந்தோஷப்டுகிறேன். நான் வேண்டுமென்றே அக்காரியத்தைச் செய்வேனு? நான் முன்பு இங்கு வந்தபோது பற்பலவித உணர்ச்சிகளாலும் பாதி பைத்தியக்காரனைப் போல் இருந்தேன். இங்குவந்ததும் கிருஷ்ணகிரிஜமீன்தாரிணி இருக்

கிருளாவெனக் கேட்டதற்குச் சேவகர்கள் இருப்பதாகச் சொல்லி என்னை மாடிமீது விட்டனர். அறையும் இருட்டாக இருந்தது. சோபாவில் ஒரு பெண் உருவம் காணப்பட்டது. அது நீதானென்று நினைத்து நானவசரமாகப் பல விஷயங் களையும் பேசிவிட்டேன்' எனக் கூறினன்.

அதைக் கேட்ட அவள், 'அவ்வளவும் கூறிய நீ உனது பெயரை எனதிடம் சொல்ல வேண்டாமெனக் கூறினயாமே! அவ்வாறிருக்கும்போது நீயே எனக்குக் கடிதம் எழுதிச் சங் கதியை என் தெரிவித்துக் கொண்டாய். நானும் அவளும் சமாதானம் செய்து கொள்ள வேண்டிய நிலைமையில் இருக் கிறோம்' எனவும், சந்திரசேகரன், 'நானே மீண்டும் யோசித் ததில் எதற்கும் உண்மையை உமக்கு அறிவித்து விடுவதே நலம் என அறிந்தேன். மேலும் உம்மைப் பார்க்க வேண்டிய அவசியம் எனக்கிருந்தது' என்றான். அதற்கு அவள், 'சரி, சந்தோஷம், நீ என்னை அவ்வளவு அவசரமாகப் பார்க்கவேண் டிய அவசியமென்ன? என்ன யோசனையைச் செய்திருக் கிறாய்' எனக் கேட்க, அப் பிரபு, 'அப்படியானல் தினகர னுடைய மனைவி, நான் அவளிடம் சொல்லியதை யெல்லாம் உனக்குத் தெரிவிக்க வில்லையோ' என்று விசாரித்தான். அப் போது சீமாட்டி, 'இல்லை, இடை யிடையே சில சந்தர்ப்பங் களை மட்டும் தெரிவித்தாள். அது கிடக்கட்டும். உனது சிற் றப்பனை மனோகரம் பிரபு எனது விஷயத்தில் மிக்க கடுமை யாக இருக்கிறாரா? ஏதேனும் ஹிம்சை செய்வாரோ? நான் இரத்தின புரியில் சிலநாட்கள் எவ்வித ஆபத்துமில்லாமற்படி தங்கி இருக்கலாமா? இப்போது சில காரணங்களுக்காக நானிங்கு இருக்க வேண்டியது அவசிய மாகிறது' என்றாள். அதற்கு அவன், 'ஹேமவதி சீமாட்டி, நான் சொல்லப் போ கும் யோசனையின்படி நீ நடந்து கொண்டால் நீ எவ்விதமான

ஆபத்துமில்லாமல் இங்கே இருக்கலாம். நீ என்னை விவாகம் செய்து கொண்டு விட்டால் எனது சிற்றப்பா என்னைப் பகிஷ்காரம் செய்து விட்டாலும் என்னையோ அல்லது எனக்காக உன்னையோ ஹிம்சை செய்ய முன் வரமாட்டார் என்பது நிச்சயம். ஆதலால் நீ என்னை மணந்து கொள்வது நல்லது' எனலும், அவள், 'நான் உன்னுடைய மனோநிலையை அறிந்து கொண்டேன். இப்படி நீ சொல்வாயென எனக்குத் தெரியும்' என்றாள். அவள் தன்மீது கோபங்கொண்டு அவ்வாறு சொல்கிறாளா அல்லது சந்தோஷத்துடனே பேசுகிறாளா எனத் தெரிந்துகொள்ள முடியாமல் சந்திர சேகரன் திகைப்புடனே, 'ஹேமவதி சீமாட்டியே! நீ கோப மடைந்திருக்கிறாயோ ?' எனக் கேட்டுக்கொண்டே அவளிருந்த சோபாவிலேயே அவனும் உட்கார்ந்து அவள் இடுப்பைச் சுற்றிலும் தன் கையைப் போட்டு மெதுவாகத் தனது பக்கமாக இழுத்தான். அவள் அவனுடைய முயற்சியை எதிர்க்கவில்லை. கோபித்துக்கொண்டவள் போலவும் காட்டிக் கொள்ளவில்லை. ஆகவே அவன் சிறிது தைரியத்துடனே அவளை இறுகத் தழுவிக் கொண்டான். அவன் செய்த எச்செயலையும் அவள் கண்டிக்கவே இல்லை. ஆதலால் அவன் காமவிகாரம் மிகுந்தவனாய், 'என தன்புள்ள மாதே! இப்போது நீ எவ்வளவு அழகுள்ளவளாய்க் காணப்படுகிறாய் தெரியுமா ? ஆ! நானுன்னை உண்மையில் அதிகமாக நேசிக்கிறேன்' என்றான்.

அப்போது ஹேமவதி சீமாட்டி, 'பிரபுவே! நான் பத்தொன்பது வருஷகாலம் விதவையாக இருந்தேன். அப்போதெனக்கு ஆடவர் ஞாபகமும் வரவில்லை. ஒருவரும் என்னைப் பற்றி ஒரு வார்த்தையும் கூற முடியாது. அவ்வளவு கௌரவமாக வாழ்க்கையை நடத்தினேன். இப்போது நான் என்னை

யே உன்னிடம் ஒப்படைத்து விட்டேன். இவ்வளவு வருஷங்களும் உள்ளே அடங்கிக் கிடந்த காமவிகாரம் கொழுந்துவிட்டெரிய ஆரம்பித்து விட்டது. இதைப் பார்க்கும்போது நான் எப்படி அந்தப் பத்தொன்பது வருஷகாலம் பரிசுத்தமாக இருந்தேனென்பது எனக்கே ஆச்சர்யமாக இருக்கிறது. இப்போது எனக்கு நீ வேண்டியதாகத்தான் இருக்கிறது. ஆதலால் நானே உன்னைக் கணவனாக ஏற்றுக்கொள்ளத் தடையில்லை. ஆனால் என்னை உலகம் பகிஷ்கரித்து விட்டிருக்கிறதே எனக்கும் என்மகனை மயக்கியுள்ள ஜகதாளுக்கும் என்ன வித்தியாசமிருக்கிறது' என்று சிறிது வெறுப்புடன் பேசினாள். அப்போது அவன், 'ஹேமவதி, அதைப்பற்றி நீ கவலைப்படவேண்டாம். உலகம் எப்படியாவது நினைத்துக் கொள்ளட்டும். நாம் இருவரும் திருப்தியாகவும் இன்பத்துடனும் வாழமுடியும். மேலும் நாம் இருவரும் சேர்ந்து பல காரியங்களைச் செய்ய வேண்டியிருக்கிறது' என்றதும் அவள், 'ஆம், நாம் பல வேலைகளைச் செய்ய வேண்டியவர்கள் தான். இப்போது நீ எந்தக்காரியத்தில் தவறிப்போனாயோ அதை மறுபடியும் செய்வதாக உத்தேச முண்டல்லவா?' என்று கேட்டாள். அதற்கு அவன், 'உன் யோசனையையும் துணையையும் கொண்டு நான் அக்காரியத்தைச் சாதிக்கத் தான் போகிறேன், நீயும் என்னால் ஏதோ வேலை ஆகவேண்டுமென்று சொன்னாயே, அதுஎன்ன? இப்போது உன் உரிமையில் பங்காளியாக வந்து முளைத்திருக்கும் ஜகதாளைத் தீர்த்துவிடும்படி கட்டளையிடுகிறாயா?' என்று கேட்டான்.

அதற்கு அவள், 'ஜகதாளைப்பற்றிக் கவலை இல்லை, அவளை நானே வார்த்துக்கொள்வேன். அவளுடைய குணங்களும் போக்குகளும் எனக்கு நன்கு தெரியும். நான் அவளைச் சரிப்படுத்திக் கொள்கிறேன் தினகரனும் இன்னும் சிறிது காலம்

பைத்தியக்கார விடுதியில் இருக்கவேண்டியதுதான். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளையெல்லாம் அவனது கார்டியன்களே செய்து விடுவதாக என்னிடம் கூறினார்கள். ராஜேஸ்வரி அன்னிய நாட்டிலேயே இருக்கிறாள். நான் மட்டும் மிக அவசரமாக வந்துவிட்டேன்' என்றாள். அப்போது சந்திரசேகரன், தான் ராட்சஸ குப்பனுடைய உதவியால் மனோகாரைக் கொல்ல முயற்சித்ததையும், ஆனால் அது முடியாமல் அவனே அப்பிரபுவினிடம் அகப்பட்டுக்கொண்டு விட்டதையும் பின்னர் பிரபுவைத் தானே சந்திக்க நேர்ந்ததையும் குப்பன் அன்னிய நாட்டுக்குத் தூரத்தப்பட்டதையும் ஹேமவதியிடம் விவரமாகக் கூறி முன்தடவையில் தோல்வியுற்றாலும் இரண்டாம் முறையாகத் தீவிர முயற்சிசெய்து வெற்றியடையப் போவதாகக் கூறினான். அதற்கு ஹேமவதி, 'அன்பா, நான் உனக்கு ஒருவேலை சொல்லப்போகிறேன். அதை நீ முடித்து விட்டாயானால் உடனே நாம் இருவரும் கலியாணம் செய்துகொண்டு விடுவோம். அது என்ன வேலை தெரியுமா? அந்த மோகனதாஸ் என்பவனுடைய வீட்டில் ஒரு கிழவி இருக்கிறாள். அவளைத் தான் கொல்லச் சமீபத்திலும் ராட்சஸகுப்பன் முயற்சி செய்து அவளைப் படுகாயப் படுத்திவிட்டு வந்ததாக நீயும் கேள்விப்பட்டிருக்கலாம். அவள் இப்போது சொஸ்தமடைந்து வருகிறாளாம். அவள் பெயர் மரகதம் என்பது அவள் நன்றாகச் சொஸ்தமடைந்து என்னைப்பற்றிய ஒரு இரகசியத்தை அவர்களிடம் சொல்லிவிட்டால் அத்துடன் என் வாழ்வே குலைந்துபோயிற்று என்பதில் சந்தேகமில்லை. அந்த இரகசியம் என்ன என்று இப்போது நீ கேட்கவேண்டாம். அதை நான் இந்த உலகில் யாரிடமும் சொல்லமாட்டேன். ஆதலால் அந்தக் கிழவியை எப்படியாவது கொன்றுவிட ஏற்பாடு செய்யவேண்டும்' என்று சொன்னாள். அப்போது சந்திரசேகரன், 'ஆம், மோகனதாஸும் மனோகரம்பிரபுவும்

உனக்குப் பரம விரோதிகளாயிற்றே அவர்களிடம் அக்கிழவி உன் இரகசியத்தைச் சொல்லிவிட்டால் மிக்க கஷ்டமாகப் போகுமே. ராட்சஸகுப்பனே அவளைக் கொல்ல முடியவில்லை யென்றால் நான் எப்படி இதைச் சமாளிக்கப் போகிறேன்' என்றான்.

அதற்கு ஹேமவதி, 'அப்படியல்ல அவளைக்கொல்ல முயற்சி செய்யக்கூடாது. எப்படியாவது அவளை அங்கிருந்து அப்புறப்படுத்திவிடவேண்டும் அதற்காக நான் ஒரு யோசனை யை செய்திருக்கிறேன். அதைச்சொல்லுகிறேன்கேள்' என்று சொல்லியதும் இருவரும் பல விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டார்கள். சுமார் அரைமணி நேரம் வரை பேசிக்கொண் டிருந்த பின்னர் சந்திர சேகரம் பிரபு ஹேமவதியின் அனுமதி யைப் பெற்றுக் கொண்டு அம்மாளிகையை விட்டுச் சென் றான். அவன் போன சிறிது நேரத்துக்கெல்லாம் ஹேமவதி சீமாட்டி அங்கிருந்து ஜகதாம்பாளிருந்த அறைக்குச்சென்று 'மாதே! நாம் இருவரும் கூடிய விரைவில் ஒருவிதமான ஒப் பந்தத்தின் மீது சமரசம் செய்து கொள்வதே மேலானது' எனவும் அவளும், 'ஆம்; நானும் அப்படித்தான் யோசித்துக் கொண்டிருக்கிறேன். இதை நீயே ஆரம்பித்ததால் நீ ஏதே னும் முடிவு செய்திருப்பாய். ஆதலால் அதை நீயே தெரி வித்து விடு' என்றாள். அப்போது ஹேமவதி சீமாட்டி, 'முத லாவதாக, நீ மன உறுதியும் சாமர்த்தியமான அறிவும், தக்க ஆற்றலு முடையவள் என்பது நன்றாகத் தெரிகிறது. நான் உம்மை முகஸ்துதி செய்வதாக நினைத்துவிட வேண்டாம். ஆதலால் நீ தினகரம் பிரபுவினிடம் உண்மையான அன்புட னிருக்க முடியா தென்பதை நானுணருகிறேன். உனக்குச் சமூக அந்தஸ்தும், தக்க பொருள் வசதியும் கிடைக்கவேண்டு மெனவும் நினைத்தாய். அப்படியே ஏற்பட்டு விட்டது. நான்

உனக்கு வேண்டிய பொருளைத்தருகிறேன். உனது கணவன் பைத்தியக்கார விடுதியிலேயே இருக்க நீ சம்மதிப்பா யல்லவா ?' என்று பக்குவமாகக் கேட்டாள்.

அப்போது ஜகதாம்பாள், 'ஓகோ ! அவன் பைத்தியக்கார விடுதியில் இருப்பது உனக்குச் சௌகரியம் போலும் ! அவனது மேஜர் பருவத்தை யடைந்த பின்னரும், நீ இந்த உரிமைகளையும், இன்பங்களையும் அனுபவித்துக்கொண்டிருக்க விரும்புகிறாய்,' என்று சொல்லியதும் ஹேமவதி சீமாட்டி, 'ஆம்; நான் அப்படித்தான் விரும்புகிறேன். உனக்கு மாத்திரம் இதனால் என்ன சௌகரியம். நீ எனது வழிக்கு வரவில்லை யென்றால் நான் வழக்குத் தொடர்ந்து இந்த விவாகத்தைச் செல்லுபடி யற்றதெனச் செய்துவிட்டால் உன் பாடு திண்டாட்டம் தானே. ஆதலால் இருவரும் சமரசம் செய்து கொள்வோம்' என்றாள். அதற்கு ஜகதாம்பாள், 'நீ வழக்குத் தொடர்ந்தால் ஜெயித்தாலும் ஜெயிக்கலாம். ஆயினும் உன் வண்டவாளங்களெல்லாம் எனக்குத் தெரிந்திருக்கும் போது நீ எப்படி என்னை விரோதித்துக் கொள்ள முடியும், 'என்று கேட்க ஹேமவதி சீமாட்டி, 'அப்படி யொன்றுமில்லை. சந்திர சேகரன் உனதிடம் எல்லாவிஷயங்களையும் சொல்லி விடவில்லையென்று இப்போதுதானே எனதிடம் சொல்லிவிட்டுப் போனான். மந்தரை கொல்லப்பட்டது பற்றியும், எனக்குக் கவலை இல்லை. அது ருஜுவாகாது. ஆதலால் நீ நினைக்கிறபடி நான் உனது கையில் அவ்வளவு அதிகமாகச் சிக்கிக்கொள்ளவில்லை எனினும் இப்போது நாம் பரஸ்பரம் சண்டை செய்யாமல் சமாதானம் செய்துகொள்ள முயலும்போது இதையெல்லாம் பேசுவதில் பயனில்லை' என்றதும் ஜகதாளும், 'ஆம், நானும் சமரசம் செய்துகொள்ளத் தயாராகவே இருக்கிறேன் உன் மகனைப்பற்றி என் அபிப்பிராயம் யாதாயினும் அதை

அவனுடைய தாயாகிய உன்னிடம் சொல்லமுடியுமா?' என்ருள்.

அதற்கு ஹேமவதி, 'இல்லை நாம் சமாதானம் செய்து கொள்ளப்போவதால் நீ எல்லாம் சொல்லவேண்டியது தான்' என்று கேட்க, ஜகதாளும், 'தினகரன் வெறும் ஆடம்பரக் காரனே யொழிய உண்மையில் சிலாகிக்கத்தக்க குணங்க ளொன்றும் அவனிடமில்லை. மேலும் அவன் என்போன்ற அழகு மிக்க பெண்களால் மோகிக்கத்தக்க ரூபலாவண்ய முடையவனுமல்ல. ஆதலால் எனக்கு அவனிடம் உண்மை யான காதல் இல்லை என்பது வாஸ்தவமே' என்றதும் சீமாட்டி, 'பெண்ணே, நான் இதையெல்லாம் உன் முகக் குறியினுலேயே தெரிந்துகொண்டேன். ஆதலால் அவன் ஆஸ்பத்திரியிலேயே இன்னும் சொற்பகாலம் இருக்கட்டும். நான் இம்மாளிகையில் தங்குகிறேன். நீ கிருஷ்ணகிரியிலுள்ள சுந்தரவிலாச மாளிகையில் தங்கியிரு உனக்கு வருஷா வருஷம் இரண்டாயிரம்பவுன் தரும்படி ஏற்பாடு செய்கிறேன்' என்ருள். இந்த ஒப்பந்தத்தை ஜகதாளும் ஒப்புக்கொண்டாள். ஆனால் அவள் அதற்குவேண்டிய பந்தோபஸ்தான ஏற்பாடு களையெல்லாம் செய்துகொண்டாள். பிறகு இருவரும் அவரவர் அறைக்குப் படுக்கச் சென்ருர்கள்.

௫௪ வது அத்தியாயம்

—:():—

தினகரன் விடுதலை முயற்சி

ஜகதாம்பாளின் பழைய சிநேகிதனுகிய கமல நாதன் அவளை விட்டுப் பிரியும்போது, எப்படியாவது அவன் தினகரனுடைய விடுதலைக்கான முயற்சி செய்வதாகச் சொல்

லிச் சென்றான். ஜகதாம்பாளும் அம்முயற்சி யினின்றும் தவறுவதில்லை யென்று தெரிந்து கொண்டிருந்தாலும் ஹேமவதியை ஏமாற்றுவதற்காகவே அவளிஷ்டப்படியே நடப்பதாகப் பாவனை செய்தாள். மேலும் ஹேமவதி கோர்ட்டில் வழக்குத் தொடர்ந்து அந்த விவாகம் செல்லுபடியாகாதென்று சொல்லிவிட்டால் என்ன செய்வதென்று பயந்து அவளிடமிருந்தும், தினகரனின் கார்டியன்களிட மிருந்தும் அலவன்ஸ் பெறும்படியான உரிமையை யேனும் பெற்றுவிட்டால் பின்னர் தனக்கு எத்தகைய பயமும் இல்லையென உணர்ந்து அவ்வாறு ஹேமவதியிடம் ஒப்புக் கொண்டாளே யொழிய அந்தரங்கத்தில் தன்கணவன் விடுதலையடைய வேண்டுமென்று அதிகஆவல் இருந்தது. அவன்மீது ஆசை கொண்டு அவள் அவ்வாறு நினைக்கவில்லை. ஆனால் தான் காதலித்த கமலநாதனே அவளிஷ்டப்படி நடக்க முடியாதென்று சொல்லி விட்டதால் தனக்கு யாரேனும் ஒரு ஆண் துணை வேண்டிருப்பதால் தினகரன் இருப்பதே நல்லதென்றும், இப்போது முதலே தன் அழகினால் அவனை நன்கு மயக்கித் தன் இஷ்டப்படி அவன் நடக்கும்படியாகச் செய்ய ஆரம்பித்து விட்டால் அவன் மேஜர் பிராயத்தை அடையும்போது தன் இஷ்டப்பிரகாரம் அந்த சொத்து சுதந்தரங்களை யெல்லாம் ஆண்டு அனுபவிக்கலாமெனவும் நினைத்தாள். மேலும் அக்காலத்தில் அவள், ஹேமவதி சீமாட்டியையும் அடக்கி ஆளலாம் என்றும் யோசித்தாள். இத்தியாதி காரணங்களால் தினகரன் உடனே விடுதலையடைய வேண்டுமென்று அவள் விரும்பினாலும் அதை வெளிக்குக் காட்டாமல் ஹேமவதியினிடம். தான் கிருஷ்கணகிரி மாளிகைக்குச் செல்வதாகவும், அதற்குரிய ஏற்பாடுகளையெல்லாம் செய்யும்படியும் சொல்லிவிட்டாள். இதனால் ஹேமவதியைத் தான் ஏமாற்றிவிட்டதாக ஜகதாள் நினைத்துக்கொண்டாள். ஆனால் ஹேமவதி அவ்

வளவு ஏமாந்தவளல்ல, ஜகதாளுக்குத் தினகரனுடைய விடு தலை அவசியமாக இருக்கிறதென்பதை அவள் உணர்ந்தாள். ஆனல் ஜகதாம்பாள் கமலநாதன் மூலம் விடுதலைக்கான ஏற் பாடு செய்திருக்கிருள் என்பது மட்டும் ஹேமவதிக்குத் தெரி யாது.

•

ஆனல் அன்று ஜகதாளுடன் பேசிமுடித்துவிட்டு ஹேம வதி தன் அறைக்குச் சென்றதும் ஒரு சேவகியின்மூலம், அன்றையதினமே அன்னிய நாட்டு ஆடவன் ஒருவன் ஜக தாளைக்கண்டு நீண்டநேரம்பேசிக்கொண்டிருந்ததாகத் தெரிந்து கொண்டதன்மீது அவன் அவளுடைய பழைய காதல ஞகிய கமலநாதனுகத்தான் இருக்கவேண்டுமென்றும், அவன் மூலம் அவள் ஏதேனும் விஷமங்களைச் செய்யலாமென்றும், அதைத்தான் எப்படியாவது கண்டுபிடிக்க வேண்டுமென்றும் நினைத்தாள். அடுத்தநாள் காலை ஹேமவதி பஞ்சதம்பிரபு வின் வீட்டுக்குச்சென்று ஜகதாம்பாள் கேட்டபடியே உறுதி மொழிப்பத்திரம் ஒன்று எழுதிக் கொண்டுவந்து கொடுத் தாள். ஜகதாளும் அதைப் பெற்றுக்கொண்டு கிருஷ்ண கிரிக் குப் புறப்படத் தயாராளுள். அச்சமயத்தில் அவள் கமலநாத னுக்குப் பின்வருமாறு ஒரு கடிதத்தை வேறு பாஷையில் எழுதினள், ' என்மாமியார் ஹேமவதி சீமாட்டி இங்குவந்து விட்டாள். நான் அவசரமாகக் கிருஷ்ணகிரியிலுள்ள சுந்தர விலாசமாளிகைக்குப் போகிறேன், நான் இங்கு இராமல் இருந்தால் தான் எனது கணவனுடைய விடுதலைக்காக நான் செய்யும் முயற்சி ஒன்றும் தெரியாமல் இருக்கும்: நீ எப்படி யாவது செய்து அவன் விடுதலையாகும்படி செய்வாய் என்று திடமாக நம்புகிறேன், தினகரன் விடுதலையானதும் அவன் உடனே கிருஷ்ணகிரி மாளிகையில் என்னிடம் வந்து சேரும் படி ஏற்பாடு செய்துவிடு. அவனுடைய தாயாருடன் நான்

பேசியதில் பல விஷயங்கள் தெரிந்து கொண்டிருப்பதால் அவன் உடனே என்னைச் சந்திக்கவேண்டியது அவசியம் என்று சொல்லவும், இக்கடிதத்தை எழுதி முடித்ததும் சீல் போட்டு அதைக் கமலநாதன் விலாசத்துக்கு எழுதித் தபாலில் போட்டுவிடும்படி சொன்னாள். அவளுடைய வேலைக்காரி அதை நேராகத் தபாலில் கொண்டுபோய்ப் போடாமல் மாளிகையில் தபாலில் போய்ச்சேர்ப்பதற்காக வைத்திருந்த பல கடிதங்களுடன் அதையும் வைத்துவிட்டாள். இதையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்த ஹேமவதியின் வேலைக்காரி அதை மாத்திரம் குறிப்பாக எடுத்துக் கொண்டுபோய் ஹேமவதி சீமாட்டியிடம் கொடுத்துவிட்டாள். இதைக்கண்ட அவள், ஜகதாம்பாளிடம் திருட்டுத்தனத்தைக் கண்டுபிடித்து விட்டதாகவும்; அது கள்ளக் காதலனுக்கு எழுதப்பட்ட கடிதமாய் இருக்குமென்றும் நினைத்து ஆவலுடன் அதைப் பிரித்துப் பார்த்தாள். அதில் காதல் சம்பந்தமாக ஒன்றும் இல்லை. தினகரனை விடுவிக்கும் சம்பந்தமாக ஏதோ இருந்தது; ஆகவே அவள் அதை மறுபடியும் ஒட்டிப் போட்டுவிட்டாள்.

மறுநாள் காலை ஜகதாம்பாள் கிருஷ்ணகிரிக்குப் புறப்பட்டாள். அவளுடன் அவளது வேலைக்காரியும், மாளிகையைச் சேர்ந்த சேவகன் ஒருவனும் சென்றார்கள். அவளுக்கென்று தனி வண்டியொன்று கொடுக்கப்பட்டு விட்டது. இவ்வாறாக ஹேமவதி ஜகதாளிடம் அதிக அன்புடன் இருக்கிறாளென்று தெரிந்துகொள்வதற்கு என்ன வேண்டுமோ அவ்வளவு செளகரியங்களை யெல்லாம் செய்து கொடுத்தாள். தினகரனுடைய விடுதலைக்கான ஏற்பாடுகளை ஜகதாள் செய்து வருவது தெரியாதவள் போலவே ஹேமவதி நடந்துகொண்டாள். ஆனால் ஜகதாள் புறப்பட்டுச் சென்றதும் ஹேமவதி மிக அவசரமாக வண்டியைக் கொண்டுவரச் சொல்லி வக்கீல்களான, மன

மோகனர், தேவிதாசர் காரியாலயம் சென்று அவர்களிடம் தினகரனை உடனே வேறு வைத்தியசாலைக்கு மாற்றவேண்டு மென வற்புறுத்தியதுடன் அவனை விடுவிப்பதற்கான ஏற் பாடுகளை வேறு சிலர் செய்து வருவதாகத் தனக்குத் தெரிந்த தாகவும் சொன்னாள். அதற்கு வக்கீல், 'அப்படியே ஆகட்டும் இன்றைய தினமே அதற்கான ஏற்பாடுகளைச் செய்கிறேன். அதைப்பற்றி நீ கவலைப்படவேண்டாம். வேறு நல்ல டாக்ட ரிடம் அவனை ஒப்படைக்கிறோம்' என்று சொன்னார். இதனால் ஒருவாறு திருப்தியடைந்த ஹேமவதி அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டாள்.

இதற்கிடையில் ராட்சஸ குப்பனுடைய சமாசாரத்தைக் கவனிப்போம். அவன் மனோகாம்பிரபுவால் எச்சரிக்கை செய் யப்பட்டு அனுப்பப்பட்ட பின்னர் அவன் நேராக வெளி தேசம் செல்ல முயற்சி யெய்யாமல் அருகிலிருந்த பல இடங் களிலும் கொள்ளையடித்து விட்டுக் கடைசியாக அக்குற்றங் களிலிருந்தெல்லாம் தப்பித்துக் கொள்ளும்பொருட்டு இரத் தின புரியிலிருந்தே இதரதேசம் செல்வது சரியென உணர்ந்து மிகவேகமாக இரத்தினபுரிக்கு வந்தான். அது பெரிய நகர மானதால் எப்படிப்பட்டவர்களும் எங்கும் ஒளிந்து கொள்வ தற்கும், எத்தகைய அக்கிரமங்களையும் எளிதில் செய்வதற் கும் சௌகரியமாக இருந்தது. குப்பன் ஒருநாள் இரவு இரத் தினபுரியின் ஒரு மூலையில் இருந்த ஒரு சாராயக்கடையில் புகுந்து அங்கு குடித்து விடுவதுடன் அங்கேயே அன்றிர வைக் கழிப்பதென்றும் தீர்மானித்து அங்கு உணவருந்திக் கொண்டிருந்தபோது அதே கடையில் வேறு இருவர் புகுந்த னர். அவர்கள் இருவரும் வாலிபர்களாகவும், நாகரிகமானவர் களாகவும், அந்த இடத்திற்கு வரக்கூடாத ஆசாமிகளாகவும் இருந்தார்கள். அவர்களில் ஒருவன் இரத்தினபுரியைச் சேர்ந்

தவன் போலவும் மற்றொருவன் அன்னிய நாட்டான் போல வும் காணப்பட்டார்கள். அவர்கள் அங்கு ஒரு ஆசனத்தில் அமர்ந்ததும் இரத்தினபுரி வாசியானவன் மற்றவனிடம், 'கமலநாதா' நீ உனக்கு வேண்டிய ஆசாமிகளைப் பெறுவதற்கு இதுதான் தக்க இடம். விஷயத்தைச் சொல்' என்றான். அதற்குக் கமலநாதன், 'நாகராஜா, நீ இந்த நகரம் பூராவை யும் அதிலுள்ள பற்பல தரத்தாரின் சுபாவங்களையும் நன்கு அறிந்து கொண்டிருக்கிறாய் போலத் தெரிகிறது இப்படிப் பட்ட இடங்களையெல்லாம் தெரிந்து கொண்டிருக்கிறாயே' என்று புன்சிரிப்புடன் கூறினான். இதற்குள் அந்தக் கடை யின் வேலைக்காரன் வந்து அவர்களுக்கு என்ன தேவை என்று கேட்டான். அதற்கு நாகராஜன், 'அப்பா அரைடஜன் பாட்டில்வொயின் கொண்டுவா. இதோ உட்கார்ந்திருக்கும் எல்லாருக்கும் சப்ளைசெய். அவர்களும் இன்று எங்களுடன் குஷாலாகச் சாப்பிடட்டும்' என்று சொல்லி ஐந்து பவுன் நோட் ஒன்றை எடுத்துப் போட்டான். இதைக்கண்ட ராட்சஸ குப்பனும் அங்கிருந்த மற்றவர்களும் ஆச்சர்யப்பட் டார்கள். யாரோ புதிதாக வந்த அவர்கள் தங்களுக்கு வாங்கிக் கொடுக்கவேண்டிய அவசியமென்ன என்று நினைத்தார்கள். அப்போது ராட்சஸகுப்பன் மற்றவர்களிடம் மெதுவாக, 'இவர்கள் ஏதோ இரத்தினபுரியிலுள்ள பற்பல வகையினரின் வாழ்க்கை முறையையும் பார்ப்பதற்காக வந்தவர்கள்போல் பேசிக்கொண்டாலும் உண்மையில் அவர்களுக்கு நம் போன் றவர்களால் ஏதோ வேலை இருக்கவேண்டும் என்றும் வலை போட்டு நம்மைப் பிடிக்கவே அவர்கள் வந்திருக்கிறார்களென் றும், ஆதலால் நமக்குக் கிராக்கி யிருக்கிறதென்றும் நம்புகி றேன்' என்று தெரிவித்தான்.

இதற்குள் வேலைக்காரனும் வொயினைக் கொண்டுவந்து வைத்தான். நாகராஜன் அவனுக்கும் சிறிது சில்லரையைக் கொடுத்தான். இதைக்கண்டும் அவர்கள் அவனுடைய தாரா ளத் தன்மையைப் பாராட்டினார்கள். பிறகு நாகராஜன், அங் கிருந்தவர்களைப் பார்த்து, 'தோழர்களே!, இன்று நீங்களும் எங்களோடு தாராளமாக மதுபானம் அருந்துங்கள். என் தோழன் பரிதிபுரத்திலிருந்து இவ்விடம் வந்திருக்கிறான் அவன் இரத்தினபுரி முழுதையும் பார்க்க வேண்டுமென்று சொன்னதால் தாழ்ந்த குலமக்களாகிய நீங்கள் இருக்கும் இடத்தையும் காண்பிக்க வேண்டுமென்று அழைத்துவந்தேன் என்றான். அப்போது ராட்சஸகுப்பன், 'சிநேகிதர்களே உங்களை இவ்விடத்தில் காணச் சந்தோஷப்படுகிறேன் தாழ்ந்த குலமக்களாகிய எங்கள் உதவியை உயர் வகுப்பா ராகிய உங்கள் சகோதரர்கள் பலவிதத்திலும் கோருகிறார்கள் நாங்கள் செய்யும் எல்லா அக்கிரமங்களையும் அவர்களும் செய் கிறார்கள். ஆனால் எங்கள் துணையைக்கொண்டு செய்கிறார்கள். இதில் உயர்குலத்தாரென்றோ தாழ்ந்த குலத்தார் என்றோ வித்தியாசம் கிடையாது' என்றான். பின்னர் எல்லாருமாக மதுபானம் அருந்த ஆரம்பித்தார்கள். அப்போது நாகராஜன் மெதுவாக, 'தோழர்களே உண்மையில் என் சிநேகிதனுக்கு உங்களால் ஆகவேண்டிய வேலையும் ஒன்று இருக்கிறது ஆத லால் நாம் வேறு தனியறைக்குச் செல்வோம்' என்றான் ஆக வே கமலநாதன், நாகராஜன், ராட்சஸகுப்பன் ஆக மூவரும் வேறு அறைக்குச் சென்றார்கள். அங்கே சென்றதும் நாக ராஜன், அவனிடம், 'ஐயா, இதோ சமீபத்திலிருக்கிற டாக் டர் சதாசிவத்தின் பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் தினகரம் பிரபு என்று ஒரு வாலிபன் அடைக்கப்பட்டிருக்கிறான். அவனை எப்படியாவது இன்றே அங்கிருந்து விடுவித்து விட வேண்டும். அந்தவேலையை நீ ஏற்றுக் கொள்வாயா?' என்று

கேட்டான். தினகரன் என்னும் பெயரைக் கேட்டதும் ராட்சஸகுப்பன் ஆச்சர்யப்பட்டு, 'கனவான்களே இவைக ளெல்லாம் எனக்குப் பிரமாதமான வேலைகளல்ல. ஆனல் இதற்குச் சிறிது பணம் செலவாகும். அங்குள்ள வேலைக்காரர் களுக்குக் கொஞ்சம் லஞ்சம் கொடுக்கவேண்டும்' என்றதும் நாகராஜன், 'உன் செலவுக்கு வேண்டிய பணத்தையெல்லாம் நாங்கள் தருகிறோம் நீ சிறிதும் தாமதம் செய்யாமல் கூடிய விரைவில் இவ்வேலையை முடிக்கவேண்டும். இப்போது பத்து பவுன் வைத்துக்கொள்' என்று சொல்லி அத்தொகையையும் அவனிடம் கொடுத்தான்.

அவன் அதைப் பெற்றுக்கொண்டு அவர்கள் சிறிதுநேரம் அங்கேயே இருந்தால் தான் போய்ச் சில தகவல்களைச் சேர்த் துக்கொண்டு வருவதாகத் தெரிவித்துச் சென்றுன். அவர்க ளும் அங்கேயே அமர்ந்து சிகரெட்களைப் பிடித்துக்கொண்டே காலத்தைக் கழித்தார்கள். ராட்சஸகுப்பன் அரைமணி நேரம் கழித்துத் திரும்பிவந்தான். அவன் அவர்களிடம், 'கனவான் களே! நான் நேராக சதாசிவத்தின் ஆஸ்பத்திரிக்கு அருகில் போய் நின்று என் வழக்கப்படி சீழ்க்கை அடித்தேன். சிறிது நேரத்துக்கெல்லாம் ஒருவர் பின் ஒருவராக மூவர் வந்தார் கள். அவர்கள் எல்லாம் வேலைக்காரர்களே. அவர்களில் காவல்காரனுகிய ஒருவனைப் பிடித்துக்கொண்டு அவனிடம் இரண்டு பவுன்கொடுத்து தினகரம் பிரபுவைப்பற்றி விசாரித் தேன். அதற்கு அவன் அப்பிரபுவை இன்று இரவு வெகு அவசரமாக வேறு விடுதிக்கு மாற்றப் போவதாகவும் அதற் காக வண்டியைக் கொண்டுவர ஆள்போ யிருப்பதாகவும் சொன்னுன். பிரபுவை எந்த விடுதிக்கு எடுத்துக்கொண்டு போகிருர்களென விசாரித்துக்கொண்டு வரும்படி சொன் னேன். உடனே அவன் சென்று திரும்பியதும் பிரபுவை

டாக்டர் குணசிங்கத்தின் வீடுதிக்கு அழைத்துச் செல்வதாகத் தெரிவித்தான். ஆதலால் இன்று அம் முயற்சி எடுப்பதில் பிரயோசனமில்லை. நாளைய இரவு இவ்வேலையை முடித்துக் கொடுத்து விடுகிறேன்' என்றான். இதைக்கேட்ட நாகராஜன் 'அடேயப்பா! நீ பெரிய வேலைக்காரன் எனத் தெரிகிறது. அரைமணி நேரத்தில் ஒழுங்கான பல வேலைகளைச் செய்திருக்கிறாயே. ஆதலால் இவ்வேலையை உனதிடம் ஒப்படைத்து விடுகிறோம். இதை முடித்துக் கொடுத்தால் இன்னும் நாற்பது பவுன் தருவது நிச்சயம்,' என்றான். அதற்கு ராட்சஸ குப்பன், 'இனி நாம் அதிகம் பேச வேண்டியதில்லை. நாளைய இரவு ஒரு மணிக்கு நீங்கள் ஒரு வண்டியுடன் குணசிங்கம் ஆஸ்பத்திரிக்குச் சிறிது தூரத்தில் இருங்கள். ஆனால் நான் இது விஷயமாய் இன்னொருவருடன் கலந்து பேசவேண்டும். அதில் ஒருமணி நேரம் முன் பின்னாக வேலை முடியுமாயின் அதையும் தெரிவித்துவிட வேண்டுமே. ஆதலால் நாளை பகல் உன்னை எங்குக் காணலாம்' என்று கேட்டான்.

அதற்கு நாகராஜன், 'அப்பா! எனது வீடு அம்மையப்பன் வீதி 16-வது நெம்பர் கட்டடம். எனது நண்பனும் நாளை மாலை அங்கேயே இருப்பான். ஆதலால் ஏதேனும் தெரிவிக்க வேண்டியிருந்தால் அந்த இடத்தில் அறிவிக்கலாம். இரவு வரையிலும் நீ ஒன்றும் அறிவிக்கவில்லையென்றால் இப்போது செய்த ஏற்பாடே நிரந்தரமானது எனக் கொண்டு நாங்கள் தயாராக இருப்போம். நீ உமது வேலைகளை முடிக்கவும்' என்றான். குப்பனும் அதற்கு ஒப்புக்கொண்டான். ஆகவே, அவர்கள் பரஸ்பரம் வந்தனம் கூறிக்கொண்ட பிறகு அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டார்கள். கமலநாதனும், நாகராஜனும் நகரத்திற்குட் சென்றனர். குப்பன் மட்டும் சிறிது நேரம் அக் கடையிலேயே இருந்து தான் உடனே முன்பு

பணம் திருடியதாக இருந்து பின்னர் மாமிச வியாபாரம் செய்யும் மாயவனிடம் போய் இது விஷயமாய்க் கலந்து ஆலோசிக்க வேண்டுமென்றும், தான் மனோகரம் பிரபுவினது கட்டளைப்படி இதர தேசம் செல்வதற்கு முன் இவ் வழிகளா லெல்லாம் பணம் திரட்ட வேண்டுமென்றும் நினைத்துக் கொண்டான்.

இதற்கிடையில் டாக்டர் சதாசிவத்தின் ஆஸ்பத்திரியி லிருந்து தினகரனை டாக்டர் குணசிங்கத்தின் விடுதிக்கு அழைத்துச் சென்றனர். டாக்டர் குணசிங்கம் நேயர்களுக்கு முன்பே தெரியும். அவர் ரசாயன ஆராய்ச்சி செய்வதில் அதிக ஆர்வம் கொண்டவரா யிருந்தது போலவே மக்களின் மனோ பாவத்தில் தவறு ஏற்பட்டால் அதைத் திருத்தவும் முயற்சி செய்ததால் அவர் பைத்தியக்கார விடுதி யொன்றை யும் ஏற்படுத்திக் கொண்டார். அவருடைய சினேகிதர்களில் டாக்டர் சதாசிவமும் ஒருவர். தினகரனை வேறு ஆஸ்பத் திரிக்கு அனுப்ப வேண்டுமென மனமோகனர் சதாசிவத்தி னிடம் சொன்னபோது அவர், அவனைத் தன் நண்பராகிய குணசிங்கத்தின் விடுதிக்கு அனுப்புவதெனத் தீர்மானித்து அதன்படி அவருக்கும் தகவல் தெரிவித்திருந்தார். ஆதலால் டாக்டர் குணசிங்கம் அன்றிரவு ஒரு வேலைக்காரனுடன் நீண்ட நேரமாகக் காத்திருந்தார். சுமார் பன்னிரண்டு மணிக் குத் தன் மாளிகையினது முன் ஒரு வண்டி வந்து நின்றதும் அவர் தனது வேலைக்காரனை அனுப்பிக் கதவைத் திறக்கச் சொன்னார். அவன் போய்க் கதவைத் திறந்ததும் வண்டியி லிருந்த தினகரனை இறக்கி முன்னே ஒருவனும் பின்னே ஒரு வனுமாக இரு காவற்காரர்கள் அவனை அம் மாளிகையில் அழைத்து வந்தார்கள். அவர்கள் குணசிங்கத்தைக் கண்ட தும், 'ஐயா! இவன் தான் பைத்தியக்காரன் இவனைப் பற்

றிய மற்ற விஷயங்களை யெல்லாம் எங்கள் எஜமானர் நாளைய தினம் இங்கு வந்து தங்களிடம் விவரமாகச் சொல்வார்' என்று சொல்லியதும் அவர், 'அது சரிதான். அவனுடைய பெயர் என்ன' என்று கேட்டார். அவர்கள் கிருஷ்ணகிரி இளைய ஜமீன்தார் தினகரம் பிரபு எனத் தெரிவித்து விட்டுப் போய் விட்டார்கள். கதவுகளெல்லாம் பழையபடி மூடப் பட்டு விட்டன. குணசிங்கத்தின் சேவகனும் போய் விட்டான். பிறகு டாக்டர் தனியாக இருந்தபோது, 'இதென்ன ஆச்சர்யம்! நாம் மனமாரக் காதலித்தவளும், பின்னல் அவள் கிருஷ்ணகிரி ஜமீன்தாரிணியாகிய ஹேமவதி சீமாட்டி என்று அறிய வந்தவளுமான ஒரு மாதின் மகன் இப்போது நம்மிடம் வந்திருக்கிறனே. அவன் பைத்தியக்காரன் என்கிறர்களே: அம் மாதோ பின்னர் ஒரு கொலைக்காரி என நமக்குத் தெரிந்தது. அதைப்பற்றி விசாரித்தபோது அவள் காலில் விழுந்து காப்பாற்றும்படி கேட்டுக் கொண்டாள். அவளிடம் நமக்கு இன்றளவும் இருக்கும் உண்மையான அன்பு காரணமாகவே அவளைக் காட்டிக் கொடுக்கவில்லை. இப்போது அவளும், அவளுடைய வக்கீல்களும் சேர்ந்து இவனை அநியாயமாய் அடைத்து வைத்திருக்கிறர்களே. இதில் ஏதோ மர்மமிருக்கிறது என்று பலவாறுகச் சிந்தித்துக் கொண்டிருந்தார்.

அவர் சிந்தித்துக்கொண்டே எதிரில் இருந்த தினகரனையும் உற்றுப் பார்த்தார். ஹேமவதி சீமாட்டியிடம் இருக்கின்ற அங்க உருவங்கள் ஒன்றுவது தினகரனுக்கு இல்லாமல் இருப்பதைக் கண்டு அவன் அச் சீமாட்டியினுடைய மகனு என்றும் சந்தேகித்தார். அதன்மீது அவருக்குப் பழைய ஞாபகங்களெல்லாம் வந்தன. ஹேமவதி சீமாட்டி பல வருஷங்களுக்கு முன் சொர்ணம் என்னும் பெயருடன் தன் பழைய

வீட்டில் தன்னைச் சந்தித்துச் சென்ற சம்பவங்க ளெல்லாம் ஞாபகத்துக்கு வந்தன. ஆகா, அப்போது நான் ஏற்படுத்திக் கொடுத்த இரகசியம் முதல் பல சம்பவங்கள் மேலும் நடந்திருக்கின்றன போலும், அப்படியானால் இவ்வளவு பாவங்களுக்கும் நான் தான் ஜவாப்தாரி, கடவுளே என்னை மன்னிக்க வேண்டும். இதில் ஏதோ விசேஷமிருக்கிறது. போகப்போகத் தெரியும்' என்று தன்னுள் சொல்லிக்கொண்டு மற்றொரு முறை தினகரனைப் பார்த்தார். டாக்டரின் மனதில் பல எண்ணங்கள் தோன்றுகின்றன. அவர் எதிரிலுள்ள ஆளைப் பார்க்கிறார். ஆனால் தினகரனுக்கு ஒன்றுமே தெரிவதில்லை. தான் உண்மையில் பைத்தியக்கார னல்லவென்றும், தான் மிக்க ரூபவதியான ஜகதாம்பாளை விவாகம் செய்துகொண்டதால் தன்னுடைய தாயாரும் கார்டியன்களுமாகச் சேர்ந்து இவ்வாறு செய்து விட்டதாகவும் சொல்லித் தன்னை விடுவிக்கும்படி கேட்டுக் கொள்ளலாமா என்று நினைத்தான். ஆனால் அவன் சதாசிவத்தை எவ்வளவோ கேட்டுக்கொண்டும் பயன்படாமற் போனதால் இவரையும் கேட்பதில் பிரயோசனமில்லை யென்று நினைத்தான். ஆயினும் எதற்கும் முயற்சி செய்வது நல்லதென நினைத்து மெதுவாக டாக்டரைப் பார்த்து, 'ஐயா, தாங்கள் யார்? இந்த வீடு எங்கேயிருக்கிறது. டாக்டர் சதாசிவம் என்னை வேறு இடத்துக்கு மாற்றப்போவதாகச் சொன்னாரேயொழிய வேறு விவரமொன்றும் சொல்லவில்லை' என்று கேட்டுக்கொண்டான். அப்போது டாக்டர் குணசிங்கம் இனிய குரலுடன், 'அப்பா! நீ கேட்பதற்கெல்லாம் பதில் சொல்லத் தயாராக இருக்கிறேன். என்பெயர் டாக்டர் குணசிங்கம். இந்த மாளிகை இரண்டாவது லேன்பிச்சில் இருக்கிறது. உன்னை நான் மிக்க சௌகரியத்துடன் வைத்திருப்பேன். மாலை நேரங்களில் என் வண்டியில் உட்

கார்ந்து வெளியில் சுற்றி வருவோம். எனக்கு ஒரு தோட்டம் இருக்கிறது. அங்கேயும் போய் உலாவி வருவோம்' என்று கூறினர்.

டாக்டர் இவ்வாறு அனுதாபத்துடன் பேசியதால் சிறிது தைரியமும் உற்சாகமும் அடைந்த தினகரன், 'ஐயா, நான் உண்மையில் பைத்தியக்காரனல்ல. நான் ஆத்திரப்பட்டு ஒரு தவறுன காரியத்தைப் பைத்தியக்காரன்போல் செய்து விட்டேன் என்றாலும் நான் புத்தியை இழந்து உண்மையில் பைத்தியக்காரனாய்விடவில்லை. என் தாயாரும் கார்டியன்களும் சேர்ந்து வேண்டுமென்றே என்னை இவ்வாறு அடைத்து வைத்திருக்கிறார்கள், என்னை நீங்கள் என்ன கேள்வி வேண்டுமாயினும் கேட்டுப் பாருங்கள். அதற்குச் சரியான விடைகளைச் சொல்கிறேன். நான் ஒரு அழகிய பெண்ணை அவர்களையெல்லாம் கேட்காமலும் அவசரப்பட்டுக் கொண்டு விவாகம் செய்துகொண்டு விட்டதால் என்னை இப்படி அடைத்து விட்டார்கள்,' என்று தெரிவித்தான். அதைக் கேட்ட டாக்டர் குணசிங்கம், 'இப்போது அதிக நேரமாய் விட்டது. அதிகம் பேசிக்கொண்டிருக்கச் சாவகாசமில்லை. நாளை காலை ஆகாரம் அருந்தியதும் உன்னைச் சந்திக்கிறேன். அப்போது எல்லாம் பேசிக்கொள்வோம்' என்றார். அதற்கு அவன், 'சரி, அப்படியே செய்யுங்கள். நான் பைத்தியக்காரனல்லவென்று தெரிந்தால் என்ன செய்யப் போகிறீர்' என்று ஆவலுடன் கேட்டதற்கு அவர், 'ஹேமவதி சீமாட்டியிடமும், உன் கார்டியன்களிடமும் சொல்லி உன்னை விடுவிக்க ஏற்பாடு செய்கிறேனென்றார். அப்போதவன் நம்பிக்கை இல்லாதவன்போல் தலையை அசைத்துக்கொண்டே, 'ஓ, அவர்கள் மூலம் விடுதலை செய்வதென்றால் அது ஆகக்கூடிய காரியமல்ல. என் தாயார் என்னை வெறுக்கிறாள் என்று நினைக்கி

றேன். அதை அவள் என்னிடமும் சொல்லியிருக்கிருள். மேலும் அவள் பலவகையிலும் கெட்ட மாதாக இருப்பதால் அவள் என்னிடமும் அன்பில்லாமல் நடந்து கொள்கிருள்' என்று சொன்னுன். இதைக்கேட்ட டாக்டர், முன்னமே சிமாட்டியைப்பற்றி அதிகம் அறிவாராதலால், 'அன்புள்ள வாலிபனே! போதும், போதும், இதற்குமேல் ஒன்றும் பேச வேண்டாம். நான் முன்னரே தெரிவித்தபடி நாளை காலை உன்னுடன் பேசுகிறேன். அப்போது விவரமாய்ப் பேசுவோம். நீ உனக்காக ஏற்படுத்தியிருக்கிற அறையில் போய்ப் படுத்துக்கொள்' என்று கூறினர். உடனே டாக்டர் மணியடித்ததால் சேவகன் வரவும் அவனிடம் தினகரனை ஒப்பித்துவிட்டு அவர் தன் படுக்கையறைக்குச் சென்ருர்.

அங்கு அவருக்குத் தூக்கம் வரவில்லை. ஏதோ பல விஷயங்களைப்பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தார். பிறகு அவர் திடீரென்று எழுந்து கையில் ஒரு மெழுகுவர்த்தி விளக்கையெடுத்துக்கொண்டு மெதுவாக யாருக்கும் தெரியாமல் தினகரனைப் படுக்க வைத்திருக்கும் அறைக்குச் சென்ருர். அவ்வறைக்குப் பக்கத்து அறையிலுள்ள ஒரு சேவகன் விழித்துக்கொண்டு எழுந்தான். அப்போது அவர் அவனுக்கு சமிக்ஞை காண்பித்து ஒன்றும் பேசவேண்டாமென்று தெரிவிக்கவே அவன் பழையபடி படுத்துக் கொண்டுவிட்டான். அவர் தினகரன் அறையில் சென்று பார்த்தார். அவன் நன்ருகத் தூங்கிக் கொண்டிருந்தான். அவர் ஐந்து நிமிஷங்கள்வரை அங்கேயே இருந்தார். பிறகு வெளியே செல்லும்போது மறுபடியும் அச் சேவகன் படுக்கையைவிட்டு எழுந்திராமலே தன் எஜமானனுடைய முகத்தைப் பார்த்தான். ஆ! அது வெளுத்திருந்தது. அவர் ஏதோ பீதியுடன் இருப்பதுபோலத் தெரிந்தது. பிறகு அவர் தனது படுக்கை யறைக்குச் சென்ரு

ென்றாலும் அவருக்குத் தூக்கமே வரவில்லை. எதை எதை யோ சிந்திப்பதும், பெருமூச்சு விடுவதும், ஏதோ தீர்மானத் துக்கு வருவதுபோல் தலையை அசைப்பதுமாய் இருந்தாரே யொழிய மன நிம்மதியே இல்லை. இப்படி மறுநாள் காலை ஏழுமணிவரை காலங் கடத்தினர். பின்னர் அவர் காலை ஆகா ரம் அருந்தி விட்டுத் தினகரனிடம் வாக்களித்தபடியே அவ னைச் சந்தித்து அவனுடன் நீண்டநேரம் பேசிக் கொண்டிருந் தார்.

அன்று பகல் சுமார் ஒரு மணிக்கு அவர் வெளியில் எங் கேயோ போகும்பொருட்டு வண்டியைக் கொண்டு வரும்படி சொல்லிவிட்டுத் தான் உடைகளை அணிந்து கொண் டிருந்த போது தன் மாளிகையின் எதிரில் வேறு ஒரு அழகான வண்டி வந்து நின்றது. அதிலிருந்து மனோகரம் பிரபு இறங்கி வந்து டாக்டரைக் காண விரும்பினர். டாக்டர் குணசிங்கம் அப்போது தான் தினகரனுடன் பேசிவிட்டிருந்து அதி அவ சரமாக வெளியில் ஒருவரைக் காண விரும்பியிருந்தார். ஆயி னும் மனோகரம் பிரபு வந்திருப்பதால் சில நிமிஷங்களேனும் அவருடன் பேசுவதே நலமென எண்ணினர். அப்போது மனோகரம் பிரபு, 'டாக்டர் அவர்களே! உம்முடைய வேலை யில் நான் குறுக்கிட்டதற்காக வருந்துகிறேன். ஆயினும் நான் ஒரு முக்கிய வேலையாகவே வந்திருக்கிறேன். நீர் ரசா யன ஆராய்ச்சியில் பெயர் போனவர் என்று அறிந்ததனல் தான் இங்கு வரவேண்டியதாயிற்று. என்னிடத்தில் எப்படி யோ ஒரு விஷபுட்டி அகப்பட்டிருக்கிறது. அது அதிக விசித் திரமானதாய் இருப்பதால் உம்மிடம் ஆராய்ச்சிக்கு கொண்டு வந்தேன். இதை மிருகங்கள் மீது உபயோகிக்கவும் எனக்கு இஷ்டமில்லை. 'நீரே ஆராய்ச்சி செய்து பாருங்கள்' என்று சொல்லிக்கொண் டிருக்கும்போது டாக்டர், தன்னல் செய்

யப்பட்டதும், ஹேமவதி சீமாட்டியால் திருடிக் கொண்டு போகப்பட்டதுமான விஷ புட்டியாகவே அது இருக்க வேண்டுமென்று நினைத்துப் பீதியடைந்தார். அச் சமயத்தில் மனோகரமும் தன் சட்டைப் பையில் இருந்த அந்த விஷ புட்டியை எடுத்து மேஜைமீது வைத்துக் கொண்டே 'இதோ இருக்கிறது பாருங்கள்' என்றார். அதைக் கண்டதும் டாக்டர் 'பிரபுவே! தாங்கள் எனது ஆராய்ச்சியைப்பற்றி பாராட்டியதற்காக வந்தனம் செலுத்துகிறேன். இதை ஆராய்ச்சி செய்து பார்ப்பதில் எனக்குச் சந்தோஷமே ஆயினும் இப்போது அவகாசமில்லை; மிக அவசரமாக வெளியே போகவேண்டியிருக்கிறது என்றார்.

அதைக்கேட்ட மனோகரர், 'எனக்காகத் தாங்கள் தங்களுடைய வேலையைக் கெடுத்துக்கொள்ள வேண்டாம். நான் மற்றொரு முறை வருகிறேன். அதற்குள் இதை ஆராய்ச்சி செய்து வையுங்கள். இந்த புட்டியை இங்கேயே வைத்துவிட்டுப் போகிறேன்' என்று கூறி, அதை அங்கேயே வைத்து விட்டு டாக்டரிடம் விடை பெற்றுக்கொண்டு சென்றார். அவர் சென்றதும் டாக்டர் குணசிங்கம் எப்படியாவது தன்னுடைய விஷ புட்டி மறுபடியும் தன்னிடம் வந்துவிட்டதே யென்னும் சந்தோஷத்துடன் அதை எடுத்துத் தனது பீரோவில் வைத்துப் பூட்டினர். பிறகு அவர் தனது வண்டியில் ஏறிக்கொண்டு அவ் வண்டியை ஹேமவதி சீமாட்டியினது மாளிகைக்குச் செல்லும்படி கூறினர். வண்டி அம் மாளிகையின்முன் சென்றதும் டாக்டர் கீழே இறங்கிச் சீமாட்டி இருக்கிருளா என்று விசாரித்தார். ஹேமவதி மாளிகையில் இருந்ததுடன் டாக்டரையே மாடிமீது அறைக்கு வரும்படி சொல்லியனுப்பினள். டாக்டரும் பல வருஷங்களாகத் தான் அபிமானித்துவரும் ஒரு பெண்மணியைக் காணப் போகிறே

மே என்னும் எண்ணத்துடன் தன் முகத்தில் எவ்வித குறியும் தோன்ருதபடி தன்னைத் தேற்றிக்கொண்டு போனுர். இதற்குள் ஹேமவதியும், தன் குற்றத்தை ஒன்றன் பின் ஒன்ருக அறிந்து வரும் டாக்டர் வருவதால் இப்போது என்ன புதிய சங்கதி கொண்டு வருகிருரோவெனப் பயந்தாள். எனினும் தான் தைரியத்தைச் சிறிதும் இழக்கக் கூடாது என்னும் எண்ணத்துட னிருந்தாள். ஆகவே டாக்டர் குணசிங்கம் அவ்வறையில் நுழைந்ததும் ஹேமவதி சீமாட்டி அவருடைய இரு கைகளையும் பிடித்துக் கொண்டு அவரையே உற்றுப் பார்த்த வண்ணம், 'எனது அன்புள்ள குணசிங்கம்,' உன்னை நான் இங்கு காண எவ்வளவு சந்தோஷப் படுகிறேன் தெரியுமா ?' என்று கூறினுள்.

டாக்டர் குணசிங்கம் ஹேமவதியைக் கண்டிப்பதற்கும் அவளுடனே விவாதித்து அவளுக்குச் சில விஷயங்களைக் கட்டளையிட வேண்டுமென்னும் எண்ணத்துடன் வந்தார். ஆயினும் ஹேமவதி சீமாட்டியினது வசீகர சக்தி அவனையும் பணியச் செய்து விட்டது. ஹேமவதி சீமாட்டியும் தன் சக்தியை நன்கு அறிவாள். ஆதலால் அவர் வந்ததுமே தனது முழுச் சக்தியையும் பிரயோகித்து அவரைத் தன் வழிக்குக் கொண்டு வந்துவிட வேண்டும் என நிச்சயித்து அவ்வாறே அவர் வந்ததும் அவள் தன் அழகு, ஆற்றல் என்னும் பாணத்தை அவர் மீது வீசி அவரை மயங்கச் செய்து விட்டாள். பிறகும் அவள் விடாமல் அவரைத் தனது வழிக்குப் பூர்த்தியாகக் கொண்டு வர வேண்டு மென்னும் எண்ணத்துடனே, 'எனதன்புள்ள நேசா! தயவுசெய்து என் அருகில் உட்காரு. என்ன காரணத்தால் திடீரென்று இப்போது இங்கே வந்தாய், உனக்கு எப்போதும் ரசாயன ஆராய்ச்சி வேலை இருந்து கொண்டே இருக்குமே. ஆகவே ஏதோ விசேஷ வேலையாகத்

தான் வந்திருக்க வேண்டும்' என்று கூறினாள். அப்போது டாக்டர் சிறிது நேரம் தான் சீமாட்டியின் அழகுக்கு ஈடுபட்டுப் பின் வந்த வேலையைக் கவனிக்க வேண்டியது அவசியம் என்னும் எண்ணத்துடனே மீண்டும் உணர்ச்சி பெற்று அவளிடம் வெறுப்பு கொண்டவர்போல் தான் உட்கார வைக்கப்பட்டிருந்த ஆசனத்தை விட்டு எழுந்து நின்று, 'சீமாட்டியே! நான் பழைய விஷயங்களை யெல்லாம் மறந்து விட வேண்டியதாக இருக்கிறது. இப்பால் உன் சம்பந்தமாக வெளியாகும் விஷயங்களைக் கண்டால் நான் ஆரம்பத்தில் இடங் கொடுத்த தற்காகவே கடவுளிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்ள வேண்டியவனாக இருக்கிறேன்' என்றார். இதைக் கேட்டதும் ஹேமவதி சீமாட்டி பீதியடைந்து, 'நேசா! என்னைக் கண்டிப்பதற்காகவா இங்கு வந்தாய். நடந்துபோன காரியங்களுக்காக இனி என்ன செய்ய முடியும்?' என்றாள். அதற்கு அவர், 'பெண்மணியே! அதற்காக நான் வரவில்லை. உன்னை நான் ஆதிகாலம் முதல் உள்ளன்புடன் நேசித்து வந்தேன். ஆனால் நீயே எனக்கு எமனாக முளைத்திருக்கிறாய். உன்னால் நான் மிகப் பெரிய குற்றவாளியாய் இருக்கிறேன். நான் ஏதோ ரசாயன ஆராயச்சியில் ஈடுபட்டுப் பரிசுத்த வாழ்க்கையுடன் இருப்பதாக உலகம் என்னை மதித்திருக்கிறது. ஆனால் இப்போது என் ஆத்மாவோ என்னால் அனேகருக்குப் பலவித கஷ்டங்கள் நேர்ந்திருப்பதாக உணர்ந்து அதிக துயரடைகின்றது,' என்று கூறினார்.

அவர் அவ்வாறு பேசும்போது அவள் மிக்க தைரியத்துடன் இருந்து தன் முழு வசீகர சக்தியையும் உபயோகித்துத் தன் அழகில் மயக்கிவிட வேண்டும் என்று தீர்மானித்

தாள். ஆகவே அவள் பேச ஆரம்பித்து, 'டாக்டர் அவர்களே! நான் இப்போதே மிக்க மனம் நொந்தவளாய் தற்கொலை செய்து கொள்வதும் நலமென்று நினைத்து விட்ட அவ்வளவு பரிதாப நிலைமையில் இருக்கிறேன். இச் சமயத்தில் என்னிடம் பூரண விசுவாச முடையவனும். என்னால் அதிகம் நேசிக்கப்பட்டவனுமான நீ என் மனம் நோகும்படியான வார்த்தைகளைப் பேசிப் புண்ணில் கோலிட்டது போலவே செய்யலாமா' என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டாள். அப்போது குணசிங்கம் தன் நெற்றியைப் பலமாகப் பிடித்துக்கொண்டு, 'ஐயோ கடவுளே! நீயா என்னை நேசிக்கிறாய்? இதுவும் சத்தியமா? நீ சூதுவாதுகளையும் தந்திரங்களையும் அயோக்கியத் தனங்களையும் அதிகமாக உடையவளாயிற்றே. நீ மிக்க அழகும் வசீகரமும் உடையவள் என்பதையே ஆதாரமாகக் கொண்டு கொடிய ராட்சஸியும் செய்யக்கூடிய குற்றங்களையெல்லாம் செய்பவளாயிற்றே. உன்னுடைய குற்றங்களுக்கு நானும் எனக்குத் தெரியாமலேயே உடந்தையாக இருந்திருக்கிறேனே என்பது தான் என்னை அதிகம் வருத்துகிறது' என்றார். அப்போது ஹேமவதி சீமாட்டி வெளுத்த முகத்துடனும் பீதியுடனும், 'ஆ, அந்த இரகசியமா? முதன் முதலாக நாம் சந்தித்தபோது நடந்த விவகாரத்தைப்பற்றியா பேசுகிறாய்? அது என்னுடைய சொந்த இரகசியமாயிற்றே அதில் அநாவசியமாகத் தலையிடக்கூடாது. தலையிடுவதில்லையென்றே நீயும் வாக்களித்திருப்பது உனது ஞாபகத்தில் இருக்கட்டும்' என்றாள். அதற்கு டாக்டர் குணசிங்கம், 'மாதே! அப்படியா! நீ உனது நிலைமையை அறியவில்லை மாமிசத்தை எவ்வளவு தான் மூடிவைத்தாலும் அது தூரத்தில் இருப்பவர்களின் முகத்திலும் சென்று வீசுவதுபோல்

நீ மறைவாகச் செய்த பல குற்றங்களெல்லாம் வேறு சிலரால் கண்டுபிடிக்கப்பட்டே வருகின்றன என்பதை நீ அறியவில்லை. உலகத்தில் எல்லாரையும் எப்போதும் ஏமாற்றலாமென்று நினைப்பது முட்டாள் தனமாகும். நான் எந்த இரகசியத்தில் தலையிடக்கூடாதென் நீ சொல்கிறாயோ அது தற்செயலாக என் முன் வந்து நின்றது. அதற்கென்ன சொல்கிறாய்?' என்று கேட்டார்.

அப்போது ஹேமவதி அதிக அச்சத்துடன் அவை வேறு யாரேனும் கேட்டுவிட்டால் என்ன செய்வதென்னும் எண்ணத்துடன் கதவின் அருகில் ஓடி நாற்புறங்களிலும் யாராவது இருக்கிறார்களா என்று பார்த்தாள். யாருமில்லாமையால் சிறிது ஆறுதலடைந்து அங்கிருந்த டாக்டர் குணசிங்கம் இருந்த இடத்துக்கு வந்து அவர் தோள்மீது கையைப் போட்டு அவரையே உற்றுப் பார்த்தவண்ணம், 'அன்புள்ள நேசா! இப்படி என் பக்கத்தில் உட்காரு, இம்மாதிரி யாரோ புதிய மனிதனைப்போல் பேசவேண்டாம். அன்புள்ள நண்பனைப்போல் என்னிடம்பேசு. என்னென்னநடந்தது? நீஎன்ன தெரிந்து கொண்டிருக்கிறாய் என்பதையெல்லாம் என்னிடத்தில் மெதுவாகச் சொல்' என்று கேட்டுக்கொண்டாள். டாக்டரும் அவளது கோரிக்கையின்படியே சோபாவில் உட்கார்ந்ததும் ஹேமவதி தான் வெற்றியடைந்துவிட்டது போல் கருதினாள். குணசிங்கம் எவ்வளவு தான் தன்னிடம் வருத்தமுடையவனாக இருந்தாலும் தன்னிடமிருக்கும் அன்பென்னும் பாசக்கயிறு சிறிதும் அறுபடவில்லை என்று உணர்ந்து சந்தோஷப்பட்டாள். அப்போது அவர் பேசத்தொடங்கி, 'சீமாட்டியே! நான் உன்னுடன் பல விஷயங்களைப் பற்றிப்

பேசவேண்டியிருக்கிறது. ஆயினும் முதலில், என்னிடமிருந்து நீ திருடிக்கொண்டுபோன விஷபுட்டி எப்படி மனோகரம் பிரபுவினிடம் சென்றது. என்பதைமட்டும் தெரிவி! என்று கேட்டார். இக்கேள்வியைச் சீமாட்டி செவியுற்றதும், 'என்ன! உனக்கு மனோகரம்பிரபு எப்படித் தெரியும்?' என்று ஆச்சர்யத்துடன் வினவினாள். அதற்கு அவர், 'இல்லை எனக்கு அவர் இன்னாரென்றே தெரியாது. இன்று காலை அவரே அந்த விஷபுட்டியை என்னிடம் எடுத்துக் கொண்டுவந்து அதைப் பரீட்சித்துச் சொல்லும்படி கேட்டார். அதை நான் பத்திரமாக வைத்துக்கொண்டு விட்டேன். இனி அது வெளியே போகாது! என்று தெரிவித்தார்.

அப்போது அவள், 'ஆம், அப்படியே செய். அதை மறுபடியும் மனோகரம் பிரபுவினிடம் கொடுக்கவே கொடுக்காதே. அப்புட்டியை அழித்துவிட்டாலும் எனக்குச் சம்மதம் தான்' என்றதும் அவர், 'ஓ, இதனாலேயே உன்னுடைய கெட்ட எண்ணங்களெல்லாம் தெரிகின்றன. நீ அதைக்கொண்டு எவ்வளவோ குற்றங்களை இழைத்து விட்டிருக்கிறாய். இவ்வளவு அழகுடைய ஒருமாது கேவலம் இப்படிக் குற்றங்களைச் செய்வதென்றால் எனக்கு ஆச்சர்யமாகத் தான் இருக்கிறது' என்றார். அதற்குச் சீமாட்டி, 'நேசா! என்னைக்கண்டபடி தூஷிக்க வேண்டாம். இன்னும் என்னென்ன சங்கதிகளை நீ தெரிந்து கொண்டிருக்கிறாய் என்பதை விரைவில் சொல்! என்று கேட்கவும் அவர், 'மாதே தினகரம்பிரபு இப்போது என் விடுதியில் இருக்கிறான்' என்றார். அதை அவள் கேட்டது தான் தாமதம் அவள் ஓவென்று அலறி, 'இதென்ன கொடுமை! என்னை அழித்து விடுவதற்காகவே நீ அவனை உன் வீட்

டில் வைத்துக் கொண்டிருக்கிறாயா? நீ எனக்குச் சிநேகிதன் அல்லவா? இப்படியும் என் அழிவைத் தேடலாமா? இப்போது நீ என்னை வெறுக்க ஆரம்பித்து விட்டாயா?' என்று பலவாறு கேட்க ஆரம்பித்தாள். அவள் அவஸ்தைப் படுவதைக் கண்ட அவர், 'பெண்ணே! மனங் கலங்கவேண்டாம்' நீ சிறிது பொறுமையுடனும் நிதானத்துடனும் இரு. தினகரனை நேற்று இரவு தான் டாக்டர் சதாசிவத்தின் ஆஸ்பத்திரியிலிருந்து என் ஆஸ்பத்திரிக்கு மாற்றினார்கள்! என்று சொல்லி முடிக்கு முன்னர் ஒரு சேவகன் அவ்வறையின் கதவைத் திறந்துகொண்டு உள்ளே வந்து ஒரு கடிதத்தை ஹேமவதி சீமாட்டியிடம் கொடுத்துவிட்டுச் சென்றான்.

அக்கடிதம் வக்கீல் மனமோகனரால் எழுதப் பட்டிருந்தது. அதில் அவர், தினகரனை முன்நாள் இரவு சதாசிவத்தின் ஆஸ்பத்திரியிலிருந்து பிரபல டாக்டரான குணசிங்கத்தின் ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவிட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது. இதிலிருந்து டாக்டர் குணசிங்கம் கெட்ட எண்ணத்துடன் தானாகத் தினகரனைத் தேடிக்கொண்டு போய் வைத்துக் கொள்ளவில்லையென்று உணர்ந்து சிறிது ஆறுதலடைந்தாள். பிறகு அவள் டாக்டரிடம், 'இக்கடிதம் என் வக்கீலிடமிருந்து கிடைத்திருக்கிறது. இதில் தினகரனை உன்னிடம் ஒப்படைத்திருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது' என்று தெரிவித்தாள். அப்போது அவர், 'சீமாட்டியே! நேற்றிரவு நான் தினகரன் தூங்கிக் கொண்டிருந்தபோது அவனுடைய அறையில் சென்று சோதித்துப் பார்த்து விஷயத்தைக் கண்டு பிடித்தேன்? என்றதும் அவள், 'போதும், நிறுத்து உன்னுடைய மனதிலுள்ள விஷயங்களையெல்லாம் நான் இன்னும் அறியவில்லையென்று நினைத்துக்கொண்டு விட்டாயா? ஆயி

னும் டாக்டரே அந்த இரகசியம் என்னுடையது. அதை நீ எனக்கு விரோதமாக உபயோகித்துக் கொள்ளக்கூடாது. அந்த இரகசியத்தை வெளிவிட்டால் நம் இருவருக்குமே ஆபத்து வரும்! என்ருள். அதற்கு அவர், 'அப்படி நினைக்காதே. எனக்கோ உனக்கோ தீங்குநேரிடும் என்பதற்காகக் குற்றங்களையெல்லாம் மறைத்துவைக்கச் சொல்கிருயா? என் மனச்சாட்சி இடம் தரவில்லையே. எப்படியாவது நீதி வழங்கப்படும்படி செய்யவேண்டியது என்போன்ற பொதுநல ஊழியர்களின் கடமையல்லவா' என்ருர். அப்போது அவள் மிக்க பீதியுடன்,' அது முடியவே முடியாது. நான் யாருக்கும் எத்தகைய தீங்கும் விளைவிக்கவில்லை. இப்போது நான் உன் கையில் சிக்கிக்கொண்டிருக்கிறேன் என்னை எப்படியாவது காப்பாற்றி விடவேண்டும். என்மீது இரக்கம் வை. என்னை அழித்துவிடாதே நான் உன் அடிமையாக இருப்பேன். அது மட்டுமா! உனக்கு இன்பத்தை அளிக்கும் கள்ளக் காதலியாக இருப்பேன். நீ எப்படி ஆடச்சொன்னுலும் ஆடுவேன். உன்னைத் தழுவிக்கொண்டு ஆயிரம் முத்தம் வேண்டுமாயினும் கொடுப்பேன். இவ்வளவுக்கும் நீ உடன்படவில்லையென்ருல் நான் என் அறைக்குச் சென்று கத்தியை என் மார்பில் குத்திக்கொண்டு இறப்பேன் என்பது நிச்சயமாகச் சொல்வேன், என்ன சொல்லப் போகிருய்? எனக்கு ஈடுபடுகிருயா இல்லையா ?' என்று கூறிக்கொண்டே ஆவேசம் வந்தவள் போல் கூத்தாடித் தனது இரு கரங்களாலும் தனது முந்தாணியையும், இரவிக்கையையும் கிழித் தெறிந்தாள். அவளது ஸ்தன பாரங்கள் இரண்டும் அழகிய தோற்றத்துடனே எதிரிலிருந்த டாக்டர் குணசிங்கத்தின் கண்களைக் கவர்ந்தன. மகா போக்கிரியாகிய ஹேமவதி சீமாட்டி தன் முழுச் சக்தியையும் காட்டிக் குணசிங்கத்தை வசப்படுத்த முயன்ற செயலைப்

பாருங்கள்! ஆனால் குணசிங்கம் அவள் பீதி மிக்கவளாய் மதி மயங்கி அவ்வாறு செய்வதாக எண்ணினார்.

ஆனால் இவ்விஷயத்தில் ஹேமவதி குணசிங்கத்தின் உண்மைத் தன்மையை அறியவில்லையென்றே சொல்லவேண்டும். அவர் நீண்டகாலமாகவே அவளை நேசித்தாரென்றாலும் கேவலம் காம உணர்ச்சியே அவருக்கு மிகுந்திருக்க வில்லை. பரிசுத்தமான அன்பே அவருக் கிருந்தது. ஆதலால் அவர் ஹேமவதி சீமாட்டியின் செய்கையை வெறுத்தாரேயொழிய ஏதோ ஒன்றிரண்டு அங்கங்கள் தெரிந்துவிட்ட தென்பதற் காகக் காமம் மீறி அவளை அணைத்துக் கொண்டு விடவில்லை. அவர் அவளிடம் அனுதாபம் கொண்ட பாவனையில், 'மாதே! நீ என்னை இன்னும் சரியாக அறிந்து கொள்ள வில்லையோ. பைத்தியக்காரிபோல் காரியங்களைச் செய்ய வேண்டாம். நீ எனக்கு இப்போது பெரிய அவமானத்தைக் கொடுத்து விட்டாய். உடனே துணியைச் சரியாக மூடிக்கொள்' என்று கூறிக்கொண்டே வேறு பக்கமாகத் திரும்பிக் கொண்டான். ஹேமவதி சீமாட்டியும் அறையில் வேறு யாரேனும் வந்து விட்டால் என்ன செய்வதென்னும் அச்சத்துடனே குணசிங் கம் கூறியபடியே அங்கங்களை நன்றாக மூடிக்கொண்டாள். அப்போது குணசிங்கம் மறுபடியும் பேச ஆரம்பித்து, 'மாதே நீ இன்னும் சரியாக என்னை அறிந்து கொள்ள வில்லையே. சென்ற பத்தொன்பது வருஷங்களாக நான் உன்னை நேசிக் கிறேன். ஆனால் குற்ற மற்ற பரிசுத்தமான அன்புடனேயே நேசிக்கிறேனே யொழிய கேவலம் காமத்தால் உன்னை மோகிக்க வில்லை. நீ பெண்பேயே யென்று நான் உணர்ந்த பின்னரும் என் அன்பு சிறிதும் குறையவே இல்லை. அன்புக்குக் கட்டுப்பட்டு நான் உனக்கு அடங்கியவனாக விருக்கிறேன். இப்போதும் நான் உன்னைக் கண்டித்து உனது குற்றங்களை

எடுத்துக் காட்டி அவ் விஷயத்தில் நீதி வழங்கவே நான் வந்தேன். ஆனல் இப்போது நான் என் பலஹீனத்தை உணருகிறேன். என்னதான் இருந்தாலும் என்னுடைய பரிசுத்தமான அன்பைத் தவிர்க்க என்னல் முடியவில்லை. நீ அதிக கொடுமை மிக்க ஒரு பாதகியாக இருக்கலாம். ஆயினும் என் வரையில் நான் பரிசுத்தமான அன்புடையவனே. ஆதலால் உன்னை எவ்வகையிலும் ஹிம்சை செய்ய மாட்டேன். உன் விரலுக்கு அடிபட்டாலும் என் மனம் பொறுக்காது. உன்னைப் பற்றிய இரகசியம் என் மனத்திலேயே கிடந்து மனம் அழுகிவிட்டாலும் சரி, அதை நான் வெளியிட மாட்டேன்,' என்று பலவாறு அவளது அன்பில் அதிகம் ஈடுபட்டுக் கூறினார். மிக்க யோக்கியமும், கண்ணியம் வாய்ந்தவரும், உலகத்தாரெல்லாம் நன்கு மதிக்கப் படுகிறவருமான ஒருவர் இவ்வாறு ஒரு பெண்மணியினிடம் அதிலும் ஹேமவதியைப் போன்ற பாதகியிடம் பணிந்து பேசுவதென்றால் அழகிய மாதர்களின் சக்தியைப் பற்றி என்னென்று சொல்வது? எனினும் குணசிங்கம் காண்பித்தது போன்ற அன்பு உலகில் இருப்பது அபூர்வமாகும். ஏனென்றால் ஹேமவதி சீமாட்டியைப் போன்ற அழகுடைய மாதுடன் தனியாக ஒரு அறையில் இருந்ததுடன் அவளே தனது ஆடைகளை அப்புறப்படுத்தி அவரை மயக்க முயன்றபோது அவர் உடனே அவளை மார்புறத் தழுவிக் கொண்டு அவளுடைய இன்பத்தைப் பருகச் சந்தர்ப்பமிருந்தும் அதை அவர் பயன்படுத்திக் கொள்ளவில்லை யல்லவா? இது உண்மை அன்பைக் காண்பிக்கிறதே யன்றி வேறு கேவலமான குணங்களைக் காண்பிக்க வில்லை. வேறு எவரேனும் இருந்திருந்தால் சும்மா இருந்திருப்பார்களா?

இதையெல்லாம் நன்கு உணர்ந்த ஹேமவதி சீமாட்டி

சிறிது நேரம் கழிந்தபின்னர் சந்தோஷமான உற்சாகத்துடன் 'என தன்புள்ள நேசா! உன் உதாரணத்தால் எனக்கு ஒருபுது விதமான உணர்ச்சியும், ஆனந்தமும் உண்டாகிறது. நான் இனி உன்னை ஒரு உண்மையான நண்பன் என்னும் முறையிலேயே ஆலிங்கனம் செய்துகொள்வேன்! என்றாள். அப்போது குணசிங்கம் திடீரென்று எழுந்து, 'பெண்மணியே! இனி என் எதிரிலாவது நீ ஒரு குற்றமற்ற பரிசுத்தமான மாதாக நடந்துகொள். அதிருக்கட்டும். அந்தப் பையனுடன் இன்று காலை நான் பேசியதிலிருந்து இனி ஒரு நிமிஷமேனும் அவனை அடைத்து வைத்திருப்பது தகாது. அது நீதியுமல்ல என்று உணர்ந்தேன்' என்று கூறினார். அதற்கு ஹேமவதி ஆத்திரத்துடன், 'என்ன அவன் பைத்தியக்காரனுயிற்றே. கேவலம் ஒருகொலைக்காரியைக் கலியாணம்செய்துகொண்டானே. அதுமட்டுமா! என்னுடைய நலத்தைக் கோரி நான் சில காரியங்களைச் செய்யவேண்டியதாக இருக்கிறது. அதில் இதுவும் ஒன்று. நான் தக்கவர்களுடன் ஆலோசனை செய்துவிட்டு வரும்வரை ஆத்திரப்படாமல் அவனை அடைத்து வைத்திரு. எனக்காக எத்தகைய தியாகத்தையும் செய்வதாகச் சொன்னையே.' என்றதும் அவர், 'சிமாட்டியே! நீ என்னுடைய மனச்சாட்சியையே விற்றுவிடும்படி சொன்னுலும் நான் அதற்குத் தயாராக இருக்கிறேன். உன் இஷ்டப்படி நடப்பதே என் பிரியம்' என்றார்.

இவ்வாறு கூறியதும் டாக்டர் குணசிங்கம் வெளியே போய்விட்டார். அவர் சென்றதும் ஹேமவதி எழுந்து எதிரிலிருந்த பெரியநிலக்கண்ணுடியில் தன் உருவத்தைப்பார்த்துக் கொண்டாள். ஆ! அவளுடைய அழகின் தன்மை அவளுக்கே பெருமையையும் ஆனந்தத்தையும் அளித்தது. இத்தகைய அழகினல் உலகில் எப்படிப்பட்ட மனேஉறுதியுடையவர்

களையும் மயக்கிவிடலாம் என்று தைரியம்செய்துகொண்டாள் குணசிங்கத்தைப்போன்ற உத்தமர்களே அழகில் ஈடுபட்டு அவஸ்தைப் படநேர்ந்ததென்றால் சாதாரணமக்களின் அதிலும் காமுகர்களின் நிலைமையைப் பற்றிக்கேட்கவும் வேண்டுமா? அவள் கண்ணாடியினின்றும் திரும்பியதும் அவளுக்குக் கவலை அதிகமாய்விட்டது. தினகரனை எப்படியாவது வேறு எங்கேனும் சொற்பகாலமாவது அடைத்து வைக்கவேண்டுமே என்று நினைத்தாள். ஆதலின் அவள் தானே நேராக டாக்டர். சதாசிவம் வீட்டுக்குச் சென்று அவருடன் ஆலோசிப்பதென்று முடிவுசெய்தாள்.

86585
181585
சென்னை-600 008

99-வது அத்தியாயம்.

பரஸ்பரம் காதலித்தல்

டாக்டர் குணசிங்கமும் ஹேமவதி சீமாட்டியும் மேற்கூறியவாறு பேசிக்கொண்டிருந்த அதே சமயத்தில் இரத்தினபுரியின் மற்றொரு மூலையில் என்ன நடக்கிறதென்பதைக் கவனிப்போம். மோகனதாஸின் மாளிகையில் மரகதத்தின் படுக்கையின் அருகில் ராஜலட்சுமி உட்கார்ந்து கொண்டிருந்தாள். மரகதமோ வெளுத்த முகத்துடனும், நரைத்துப்போன கூந்தலுடனும், தளர்ந்தும் மெலிந்துபோன தேகத்துடனும் தூங்கிக்கொண்டிருக்கிறாள். ராட்சஸ குப்பனுடைய கத்திவெட்டால் படுகாயமடைந்த அவள் அப்போது தான் சிறிது சிறிதாகச் சுகமடைந்து வருகிறாள்.

மனமோகினி

ஓர் மாதாந்த நாவல் சஞ்சிகை.

இதில் இனிய நாவல்களே வெளிவரும். நாவலுக்கென்றே ஒரு சஞ்சிகையை வெளிப்படுத்தி வந்தால், அது தமிழபிமானிகட்குத் திருப்தி யளிக்கக் கூடியதா யிருக்குமென்று நமது "ஆனந்தபோதினி"ச் சந்தாதாரர்களிற் பலர் கேட்டுக்கொண்டபடி இதனை 1922வரு பிப்ரவரிமீ 1உ முதல் ஆரம்பித்து நடத்தி வருகிறோம். இதில் ஒவ்வொரு பெரிய நாவல் தொடர்ச்சியாகவந்து ஆறுமாதங்களுக்கொருமுறை ஒவ்வொரு முழுப் புத்தகம் முடிவுபெறும். இதற்குமுன் மகா அற்புதம்பொருந்திய அநேக நாவல்களின் ஆசிரியரான ஸ்ரீமான் ஆரணி-குப்புசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்ட "அமராவதி" "பவளத்தீவு" "ஞான செல்வாம்பாள்" "அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள்" "கற்பகச்சோலையின் அற்புதக் கொலை" "கடற்கொள்ளைக்காரன்" "இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம்" 'இரத்தினபாய் அல்லது இரகசிய சங்கம்" 'சந்திராபாய் அல்லது சங்கரதாஸின் வெற்றி" இரத்தினபுரி ரகசியம் 3-ம், 4-ம். 5-ம், 6-ம், 7-ம் பாகம் நாவல்கள் முடிவுபெற்று இப்பொழுது இரத்தினபுரிரகசியம் 8-ம் பாகம் என்றநாவல் ஆரம்பமாகி நடந்துவருகிறது. முடிவான நாவல்கள் வேண்டுவோர் புத்தகமாகவே வாங்கிக்கொள்ளவேண்டும்; அவற்றின் தனிச் சஞ்சிகைகள் கிடையா. இச்சஞ்சிகைகள் ஒவ்வொன்றும் கிரௌன் 80-பக்கங்கொண்டது. அடியிற்கண்ட விலாசத்திற்கு உடனே எழுதி வி-பி-யிலோ முன்பணம் அனுப்பியோ பெற்றுக் கொள்ளுங்கள்.

ஒவ்வொரு வருஷத்திலும் பிப்ரவரிமீ ஆரம்பமே இச்சஞ்சிகைக்கு வருஷ ஆரம்பம். எப்பொழுது சந்தாதாரராகச் சேர்ந்தாலும் அந்த வருஷம் பிப்ரவரிமாதம் முதற்கொண்டு கணக்கு வைக்கப்படும். உள் நாட்டிற்கு வருஷ சந்தா ரூ. 2—8—0
வெளி நாட்டிற்கு ,, 3—0—0

இதுவரையில் சஞ்சிகை ரூபமாக வெளிவந்திருக்கும் புஸ்தகங்கள்.

அமராவதி 2 பாகமும் ரூ.	4	0		
பவளத்தீவு 2 பாகமும் ரூ.	3	0		
ஞானசெல்வாம்பாள் 5 பாகமும்	ரூ.	9	10	0
அர்ஜுனஸிங், சுந்தர்	,,	0	2	0
அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள்		1	12	0
கற்பகச்சோலையின் அற்புதக்கொலை	ரூ.	1	4	0
கடற் கொள்ளைக்காரன் 2-பாகமும்	,,	3	4	0
இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம்	,,	2	0	0
இரத்தினபாய் அல்லது இரகசிய சங்கம்	,,	1	12	0
சந்திராபாய் அல்லது சங்கரதாஸின் வெற்றி	,,	2	0	0

மானேஜர்:—"ஆனந்த நிலையம்," தபால்பெட்டி நெ. 167, மதராஸ்

"ஆனந்தபோதினி"

ஓர் இனிய மாதாந்தத் தமிழ்ச் சஞ்சிகை.

இச்சஞ்சிகை 1915ஆ ஜுலைமீ முதல் சென்னையில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. தற்காலம் குன்றியிருக்கும் நமது தமிழ்ப் பாஷையின் அபிவிர்த்தியையும், நமது நாட்டாருடைய இலௌகீக ஆசார ஒழுக்கங்களின் சீர் திருத்தத்தையும், ஆன்மார்த்த ஞானபிவிர்த்தியையும், பெண்கல்வியையும் நோக்கமாய்க்கொண்டே இச்சஞ்சிகை பிரசுரிக்கப்பட்டு வருகிறது. பிரதி சஞ்சிகையிலும் மேற்கண்ட விஷயங்களோடு, நமது சிறுவர், சிறுமிகளுக்கும், ஸ்திரீகளுக்கும் அவசியமான நீதிகளும், புத்திமதிகளும் காணலாம். எல்லா விஷயங்களும் உலக அனுபவமுடைய கல்வியாளரால் வரையப் படுகின்றன. இவையன்றி பேர்பெற்றவர்களால் எழுதப்பட்ட அறிவு விருத்திக்கான மிக்க நேர்த்தியான புது நாவல்களும் தொடர்ச்சியாய் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன. இப்போது இது நமது நாட்டில் பிரசுரிக்கப்படும் எல்லாத் தமிழ்ச் சஞ்சிகைகளையும் விட அதிகமான சந்தாதாரரை யுடையது. இது ஜாதிமத பேதமின்றி ஒவ்வொரு மாணவனும், புருடனும், ஸ்திரீயும் அவசியம் வாசிக்கத் தக்கது. இது நமது நாட்டாரது நன்மையொன்றைமட்டும் கருதியே பிரசுரிக்கப்படுவதால், டெம்மி 8 பக்கம் அளவில் 80 பக்கம் விஷயங்களுள்ள இச்சஞ்சிகைக்குத் தபாற் கூலி யுள்பட வருட சந்தா 1 ரூபாதான் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. பினங்கு, ஸிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு ரூபா 2-0-0 மாதிரிக்காப்பி இனும்.

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் இயற்றிய நாவல்கள்.

	ரூ.	அ.		ரூ.	அ.
இரத்தினபுரி இரகசியம் 8-பாகமும் ...	16	2	தினகரசுந்தரி ரூபா	1	0
பவளத்தீவு 2-பாகமும் ...	3	0	தபாற்கோள்ளைக்காரர்	0	14
கற்கோட்டை ...	2	0	ரத்தினபாய் ...	1	18
மின்சார மாயவன் ...	1	8	வீரநாதன் ...	0	10
தேவசுந்தரி ...	1	4	குணசுந்தரன் ...	0	12
கனகபூஷணம் 2பாகம் ...	3	8	மஞ்சள் அறையின் மர்மம்	1	2
இராஜாமணி ...	2	0	கமலசேகரன் ...	1	12
ஆனந்தஸிங் ...	2	0	பூங்கோதை ...	0	12
மதனபூஷணம் ...	1	0	இந்திராபாய் ...	2	8
ஞானசெல்வாம்பாள் 5 பாகமும் ...	9	10	அமராவதி 2 பாகமும்	4	0
			மதனம்பாள் 2 பாகமும்	3	0
			லோகநாயகி	1	0

விலாசம்: மானேஜர், "ஆனந்தபோதினி" ஆபீஸ்,
6, லாயர் சின்னதம்பி முதலி வீதி, சௌகார்பேட்டை, மதராஸ்.